Not for sale

ஜூலை - ஆகஸ்டு 2009

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



# சொப்பனங்களும் தரிசனங்களும்

யாக்கோபின் ஏணி • யோசேப்பின் சொப்பனங்கள்

பானபாத்திரக்காரன் மற்றும் சுயம்பகி • சோதிக்கப்பட்ட யாக்கோபின் விசுவாசம்

நேபுகாத்நேச்சரின் சொப்பனம் • மறுருபமாகுதல்

புதிய யுகத்தை அறிவிக்கும் தரிசனம் • மக்கதோனியாவின் அழைப்பு

# ஆதியிலே



"... உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்..." - யோயேல் 2:28

வருங்காலங்களில் மூப்பர்களும் வாலிபர்களும், சொப்பனங்களையும் தரிசனங்களையும் காண்பார்கள் என்ற யோயேலின் தீர்க்கதரிசனம் நமக்கு ஒரு ஆச்சரியமல்ல. பதிவு செய்யப்பட்டிருக்கிற சரித்திரம் முதல் புதிய ஏற்பாட்டு காலம் வரை தேவன் இவற்றின் மூலமாகவே தொடர்பு கொண்டிருக்கிறார். ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் இடம் பெற்றிருக்கிற இப்பூமியின் சிருஷ்டிப்பு வேலைகள் அனைத்தும், பத்மூ தீவில் யோவான் பெற்ற அனுபவங்களுக்கு ஒத்ததுபோல் இல்லாவிட்டாலும், தரிசனங்களின் மூலமாக வெளிப்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்றே கருதுகிறோம்.

ஹெரால்டின் இம்மாத பிரதியை அநேகர் ஓவியர்களுக்கு உந்துதலாக இருந்த ஒரு சொப்பனமாகிய- *யாக்கோபின் ஏணி,* மூலம் நாம் துவங்குகிறோம். அந்த சொப்பனத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்ததினால் அதை ஒருபோதும் மறக்காமல் யாக்கோபு நினைவில் வைத்திருந்தார்.

*யோசேப்பின் சொப்பனங்கள்* தன்னுடைய சகோதரர்களுக்கு மேலாக யோசேப்பு உயர்த்தப்படுவதைக் குறித்த இரண்டு சொப்பனங்களை விவரிக்கிறது. யோசேப்புடன் சிறையிலிருந்த *பானபாத்திரக்காரன் மற்றும் சுயம்பாகி* கண்ட சொப்பனங்கள் வருகிறது. இதை விளக்கிய யோசேப்பின் திறமை பின்நாளில் பார்வோனுக்கு அறிவிக்கப்பட்டு அவனுடைய சொப்பனங்களை விவரிக்கும் வாய்ப்பு அவருக்கு அளிக்கப்பட்டது. (ஆதி 41:1-44).

*யாக்கோபின் விசுவாசம் சோதிக்கப்பட்டது* என்ற கட்டுறை ஆதியாகமம் 28 ம் அதிகாரத்தில் "யாக்கோபின் ஏணி" விவரிக்கப்பட்டுள்ள வசனப் பகுதியை வசன வாரியாக ஆய்வு செய்கிறது. இது யாக்கோபு பதான் ஆரானுக்கு ஓடினதை குறித்த விபரங்களை ஆய்வு செய்கிறது.

தானியேல் தீர்க்கதரிசி சொப்பனங்களை கண்டதோடு மட்டுமல்லாமல் அநேகருடைய சொப்பனங்களை விளக்கவும் செய்தார். *நெபுகாத்நேச்சார் கண்ட சொப்பனம்* மனிதனுடைய பார்வையிலும் (தானியேல் 2) தேவனுடைய பார்வையிலுமிருந்து (தானியேல் 7) நான்கு உலக பேரரசுகளை நோக்குகிறது. இயேசு தம்முடைய வாழ்க்கையின் இறுதியில் சிலர் தேவனுடைய இராஜ்யத்தில் அதன் மகிமையில் காணும் வரை மரிப்பதில்லை என்று கூறினார். அந்த தரிசனம் பேதுரு, யாக்கோபு மற்றும் இராஜ்யத்தின் தரிசனத்தை பார்த்ததில் நிறைவேறியது. இதன் விபரங்கள் *மறுரூபமாகுதலில்* விவரிக்கப்பட்டுள்ளது.

*புதிய யுகத்தை அறிமுகப்படுத்தும் சொப்பனம்* பேதுரு துப்பட்டியில் அசுத்தமான மிருகங்கள் இருக்கிறதாக கண்ட தரிசனம், பேதுருவை அழைத்துவரும்படிக்கு ஊழியர்களை அனுப்பும்படி கொர்நெலியு கண்ட சொப்பனமும் ஒரே சமயத்தில் நேரிடுவதை காண்பிக்கிறது.

பவுலின் இரண்டாவது சுவிசேஷ பயணத்தில் மிக முக்கியமான அம்சத்தை அசைபோடுகிற *மக்கதோனியாவின் அழைப்பு* மூலம் நாம் நிறைவுசெய்கிறோம். தேவன் தம்மிடம் எதிர்பார்த்ததை உணர்ந்தவுடன் தன்னுடைய திட்டத்தை மாற்ற பவுல் முன்வந்தது நம்மனைவருக்கும் முன்னுதாரணமாக இருக்கிறது.

இந்த சொப்பனங்கள் மற்றும் தரிசனங்களை பற்றின அநேக உதாரணங்கள் நம்முடைய வாசகர்களுக்கு விசுவாசத்தை பெலப்படுத்தக்கூடியதாக அமையும் என்று நாம் நம்புகிறோம்.


**ஜூலை /ஆகஸ்ட்**

**ஆதியிலே** (சொப்பனங்களும் தரிசனங்களும்) . . .

**யாக்கோபின் ஏணி . . .**
இந்த சொப்பனத்தில் காண்பிக்கப்பட்டுள்ள தேவனோடான தொடர்பு இயேசுவின் மூலம் நிறைவேற ஆரம்பித்தது.

**யோசேப்பின் சொப்பணங்கள். . .**
யோசேப்பின் எதிர்கால அதிகாரத்தை சித்தரிக்கிற இரண்டு ஒரு - வசன சொப்பனங்கள் அவனுடைய சகோதரர்களை தூண்டியது.

**பானபாத்திரக்காரன் மற்றும் சுயம்பகி**
இந்த சொப்பனத்தில் வருகிற அப்பம் மற்றும் திராட்சை ரச அடையாளங்களும் இயேசுவின் கடைசி இராபோஜனத்தோடு தொடர்புடையதாகும்.

**சோதிக்கப்பட்ட யாக்கோபின் விசுவாசம் . . .**
ஆதியாகம் 28 ம் அதிகாரத்தின் வசன வாரியான ஆராய்ச்சி

**நேபுகாத்நேச்சாரின் சொப்பனம் . . .**
இஸ்ரயேலை நொருக்கிய தொடர்ச்சியாக எழும்பின உலக பேரரசுகள், அவை உருவாகுவதற்கு முன்னமே விவரிக்கப்பட்டுள்ளது.

**மறுருபமாகுதல் . . .**
பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் கண்ட இந்த விசேஷமான தரிசனம் கிறிஸ்துவின் வருங்கால மகிமையை காண்பிக்கிறது.

**புதிய யுகத்தை அறிவிக்கும் தரிசனம் . . .**
கிறிஸ்துவின் சீஷனாக பேதுருவால் வரவேற்கப்பட்ட பற்றுள்ள புறஜாதியனின் ஜெபங்கள் கேட்கப்பட்டன.

**மக்கதோனியாவின் அழைப்பு . . .**

# யாக்கோபின் ஏணி . . .



"அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம், ஆகையால் உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்."- சகரியா 8:23

Timothy Alexander

ஒரு காலத்தில் இரண்டு குமாரர்களை சுமப்பது போல கனவுகண்ட ரெபெக்காளுக்கு,அந்த சம்பவம் உண்மையாக நேரிட்டது. துவக்கத்தில் அவள் மலடியாக இருந்தாலும், இரட்டை பிள்ளைகளை கருத்தரிக்கும் படி தேவன் அருள் செய்தார். இதினிமித்தம் அவள் இருதயம் களிக்கூர்ந்தது. இருபது வருடங்கள் தன் புருஷனுக்கு ஒரு குமாரனை பெற்று கொடுக்கமுடியாது இருந்த அவள், இரட்டை பிள்ளைகளை பெற்றாள். ஆனால் "இதை நான் ஏன் விரும்பினேன்", என்று அவள் யோசிக்கும் அளவுக்கு கர்ப்பத்தில் இரண்டு பிள்ளைகள் ஒன்றோடு ஒன்று மோதிகொண்டது. ஆகவே இது என்னவாக இருக்கும் என்று விசாரிக்குமபடி அவள் கர்த்தரிடம் சேன்றாள். "அதற்குக் கர்த்தர் - இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது, இரண்டுவித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்து பிரியும், அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப்பார்க்கிலும் பலத்திருப்பார்கள், மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்றார்." (ஆதியாகமம் 25 : 23) என்று அவளுக்கு அறிவிக்கப்பட்டது.

ஏசா மூத்தவனாக பிறந்தான். அவன் வேட்டையில் வல்லவனும், வனசஞ்சாரியுமாய் வளர்ந்தான்.அவன் உடலளவிலும், பலத்திலும் சிறந்தவனாக இருந்தான். ஆனால் இளையவனாக பிறந்த யாக்கோபு குணசாலியான, கூடார வாசியாக இருந்தான். அவன் தன் தந்தையை விட தாயிடம் இசைந்து வாழ்ந்ததாக சொல்லப்படுகிறது. இயற்கையாக, பார்க்கும்பொழுது இளையவனை விட மூத்தவன் அதிக பலமுள்ளவனாக தோற்றமளித்தான். ஆனால் ரெபேக்காளிடம் சொல்லப்பட்ட தேவனுடைய வாாத்தைகளின் நிறைவேற்றம் ஒரு துவக்கமாக இருந்தது. அந்த வார்த்தைகள் உண்மை என்பது மட்டும் அல்ல, ஆனால் நித்தியத்திற்கும் நிலைத்திருக்கக்கூடியது என்று நிருபித்தது.

ஒரு வேளை ரெபேக்காள், தேவன் அவளுக்கு கொடுத்த வார்த்தைகளை, தன் இளைய குமாரனுடன் பகிர்ந்திருக்கலாம். இதன் காரணமாக யாக்கோபின் பிஞ்சு உள்ளத்தில் தேவனுடைய வார்த்தைகளில் உள்ள உண்மைகளும், மகத்துவங்களும் வளர வளர பதிய ஆரம்பித்திருக்கவேண்டும். அதுமட்டும் அல்ல, தேவனிடத்தில் பெற்ற வார்த்தைகளின் மூலமாக அவருடைய தாய் பெற்ற பெலத்தையும் விசுவாசத்தையும், அதன் மூலமாக அவளுடைய குணலட்சணங்கள் உறுதிப்பட்டதையும் அவன் கண்டிருக்கவேண்டும். தன்னுடைய தாயின் வாழ்க்கையில் தேவன் அவளுடன் பேசினதால் அவள் வாழ்க்கையின் நோக்கங்களையும் அவர் உணர்ந்திருக்க வேண்டும். இவைகளை யாக்கோபு தன் தந்தையின் வாழ்க்கையிலும் கண்டிருக்கவேண்டும். யாக்கோபின் சிறிய வயதை பற்றிய காரியங்களை, வேத வசனங்களில் அதிகமாக சொல்லப்படாமல் போனாலும் தன் பெற்றோர்களிடமிருந்து அதிகதிகமாக ஆவிக்குரிய பயிற்சிகளையும், கட்டளைகளையும் பெற்று, தன் இருதயத்தில் பொக்கிஷமாக புதைத்து வைத்தார், என்று அவருடைய வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் எடுத்துகாட்டுகிறது.

இதற்கு எதிரிடையாக, ஏசா தன்னுடைய சேஷ்ட்டப்புத்திரபாகத்தை ஒரு வேளை கூழுக்காக விற்று போட்டபொழுது அவனுடைய அஜாக்கிரதையும், நிர்விசாரமும் மிக தெளிவாக வெளிப்பட்டது. கிறிஸ்தவர்களாகிய நாமும் கூட நம்முடைய அற்புதமான சேஷ்ட புத்திரபாகத்தை சில நேரங்களில், உலக சந்தோஷங்களுக்காக விற்றுபோடுகிறோம். மேலும், இந்த உலகபிரகாரமான கூழை விற்று சேஷ்டப்புத்திர பாகத்தை விலைக்கு வாங்கின யாக்கோபின் விசுவாசமே, இயேசுவின் பின் செல்ல விரும்பும் ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் இருக்கக்கூடிய விசுவாசமாக இந்த சம்பவம் உறுதியாக எடுத்துகாட்டுகிறது.

பக்காளிடம் சொல்லப்பட்ட தேவனுடைய வாாத்தைகளின் நிறைவேற்றம் ஒரு துவக்கமாக இருந்தது. அந்த வார்த்தைகள் உண்மை என்பது மட்டும் அல்ல, ஆனால் நித்தியத்திற்கும் நிலைத்திருக்கக்கூடியது என்று நிருபித்தது.

ஒரு வேளை ரெபேக்காள், தேவன் அவளுக்கு கொடுத்த வார்த்தைகளை, தன் இளைய குமாரனுடன் பகிர்ந்திருக்கலாம். இதன் காரணமாக யாக்கோபின் பிஞ்சு உள்ளத்தில் தேவனுடைய வார்த்தைகளில் உள்ள உண்மைகளும், மகத்துவங்களும் வளர வளர பதிய ஆரம்பித்திருக்கவேண்டும். அதுமட்டும் அல்ல, தேவனிடத்தில் பெற்ற வார்த்தைகளின் மூலமாக அவருடைய தாய் பெற்ற பெலத்தையும்

விசுவாசத்தையும், அதன் மூலமாக அவளுடைய குணலட்சணங்கள் உறுதிப்பட்டதையும் அவன் கண்டிருக்கவேண்டும். தன்னுடைய தாயின் வாழ்க்கையில் தேவன் அவளுடன் பேசினதால் அவள் வாழ்க்கையின் நோக்கங்களையும் அவர் உணர்ந்திருக்க வேண்டும். இவைகளை யாக்கோபு தன் தந்தையின் வாழ்க்கையிலும் கண்டிருக்கவேண்டும். யாக்கோபின் சிறிய வயதை பற்றிய காரியங்களை, வேத வசனங்களில் அதிகமாக சொல்லப்படாமல் போனாலும் தன் பெற்றோர்களிடமிருந்து அதிகதிகமாக ஆவிக்குரிய பயிற்சிகளையும், கட்டளைகளையும் பெற்று, தன் இருதயத்தில் பொக்கிஷமாக புதைத்து வைத்தார், என்று அவருடைய வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் எடுத்துகாட்டுகிறது.

இதற்கு எதிரிடையாக, ஏசா தன்னுடைய சேஷ்ட்டப்புத்திரபாகத்தை ஒரு வேளை கூழுக்காக விற்று போட்டபொழுது அவனுடைய அஜாக்கிரதையும், நிர்விசாரமும் மிக தெளிவாக வெளிப்பட்டது. கிறிஸ்தவர்களாகிய நாமும் கூட நம்முடைய அற்புதமான சேஷ்ட புத்திரபாகத்தை சில நேரங்களில், உலக சந்தோஷங்களுக்காக விற்றுபோடுகிறோம். மேலும், இந்த உலகபிரகாரமான கூழை விற்று சேஷ்டப்புத்திர பாகத்தை விலைக்கு வாங்கின யாக்கோபின் விசுவாசமே, இயேசுவின் பின் செல்ல விரும்பும் ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் இருக்கக்கூடிய விசுவாசமாக இந்த சம்பவம் உறுதியாக எடுத்துகாட்டுகிறது.

**ஏமாற்றுவதில் உண்டான இக்கட்டு**

தனக்கு மரணம் நெருங்குவதை ஈசாக்கு அறிந்து, தன்னுடைய சொத்துக்களையும், ஆசீர்வாதங்களையும் தன்னுடைய பிள்ளைகளுக்கு பகிர்ந்து கொடுக்க அவர் முடிவுசெய்த போது ஈசாக்கை வஞ்சித்து முதன்மையான ஆசீர்வாதங்கள் பெற்று கொள்ள, ரெபேக்காள் வழி வகுத்தாள். மூத்தவன் இளையவனை சேவிப்பான் என்ற தேவனுடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்கு ரெபேக்காள் இப்படிப்பட்ட காரியத்தை செய்தாள். அடிக்கடி இவர்கள் மத்தியில் நடக்கும் நல்லொழுக்கமான சம்பாஷனைகளை பொருள்படுத்தாமல் இந்த சம்பவத்தை நாம் பார்க்கும்போது, ரெபேக்காளின் உள்ளத்திலிருந்த உறுதியான தேவனுடைய வார்த்தைகள் இப்படிப்பட்ட செயலுக்கு அவளை தூண்டியிருக்கவேண்டும் என்று தெரிகிறது. "மூத்தவன் இளையவனை சேவிப்பான்" என்று தேவன் சொன்ன வாக்குதத்தத்தை செயல்படுத்தும் விதமாக இதை எண்ணினாள்.

எப்படியிருந்தாலும் யாக்கோபுக்கு இதில் உடன்பாடு இல்லாததினால், அவர் மறுத்தார். "ஒருவேளை என் தகப்பன் என்னைத் தடவிப்பார்ப்பார், அப்பொழுது நான் அவருக்கு எத்தனாய்க் காணப்பட்டு, என்மேல் ஆசீர்வாதத்தை அல்ல, சாபத்தை வரப்பண்ணிக்கொள்ளுவேனே என்றான்." (ஆதியாகமம் 27:12) இப்படியாக, அவர் தன்னுடைய எதிர்ப்பை தெரிவித்தார். தன்னுடைய தாத்தாவாகிய ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்டதும், அது அவர் மூலம் ஈசாக்கு பெற்று கொண்டதுமான, அந்த வாக்குத்தத்தங்களே மெய்யான விலைமதிப்பற்ற பொக்கிஷம், என்று யாக்கோபு அறிந்திருந்தார். தேவன் முழு மனதோடு அந்த வாக்குத்தத்தங்களை ஆபிரகாமுக்கு கொடுத்தார் என்றும் அதை ஆபிரகாம் மிக பக்தியோடும், சிறப்பாகவும் பெற்றுகொண்டார் என்பதையும் யாக்கோபு அறிந்திருந்தார். மேலும் இதே வாக்குத்தத்தங்கள் அபிரகாமிடமிருந்து ஈசாக்கு பெற்றுகொண்டார் என்றும் யாக்கோபு அறிந்திருந்தார். தேவன் இதை ஆபிரகாமுக்கு பின் ஈசாக்குக்கு மட்டுமே வைத்திருந்தார் என்று யாக்கோபு தெளிவாக அறிந்திருந்தார். ஆனால் அதே வாக்குதத்தத்தை யாக்கோபு ஈசாக்கை ஏமாற்றி பெற்றுகொள்ள யோசித்தார். அதாவது தலைமுறையாக வந்த மிக உச்சிதமான, விலைமதிப்பற்ற சொத்தை சூச்சகமாக கைப்பற்ற யோசித்தார்.

யாக்கோபு நியாயமான கோட்பாடுகளை கொண்ட மனிதனாக இருந்ததினால் இந்த யோசனை அவருடைய இருதயத்திற்கு திருப்தியளிக்கவில்லை. ஆதி 25: 27 ம் வசனத்தில அவரை "குணசாலி" என்ற குறிப்பிடுகிறது. "டாம்" என்ற எபிரெய பதத்திலிருந்து இந்த வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கு பூரணப்பட்ட, முழுமையான என்ற பொருள்படுகிறது. அதவாது உடல் ரீதியாக எந்த ஒச்சமும் இல்லாதவரும், நடத்தையில் குற்றமற்றவரும், நீதி நியாயங்கள் கொண்ட ஒரு தூய்மையானவராகவும் இருந்தார். அவர் பெற்று கொள்ளும் சொத்துகளில் மிக சிறந்த சொத்து - இந்த வாக்குறுதிகள் மட்டுமே என்று அவர் சிந்தையில் அறிந்திருந்தார். ஆனால் இதை வஞ்சகமாக பெற்று கொண்டால், அதன் மூலமாக அவர் ஆசீர்வதிக்கப்படுவாரோ, இல்லையோ என்ற சிந்தனை யாக்கோபை தடுமாற செய்தது.

ரெபேக்காளின் பாதுகாப்பான உணர்வுகள் யாக்கோபின் தயக்கத்தை நீக்கியது. "என் மகனே, உன்மேல் வரும் சாபம் என்மேல் வரட்டும், என் சொல்லை மாத்திரம் கேட்டு,..." (வசனம்- 13) என்று அவள் சொன்னாள். ரெபேக்காளின் வார்த்தைகளுக்கு கீழ்படிந்தார், ஈசாக்கு அதை அறியாமல், வந்தது எசா என்று நம்பி, தன்னுடைய இரண்டாவது குமாரனாகிய யாக்கோபுக்கு அந்த பாரம்பரிய வாக்குத்தத்தைக் கொடுத்தார்.

சந்தேகத்திற்கு இடமில்லாமல் விலை மதிப்பற்ற அந்த சொத்தை பெற்றுகொள்வோம் என்ற எதிர்பார்போடு வேட்டையாடினபின் வீடு திரும்பிய ஏசா, நடந்ததை கேள்விப்பட்டபொழுது, பெறும்

ஏமாற்றத்தினால் மிகவும் துக்கித்து கதறி அழுதான். அவர் சேஷட்ட புத்திரபாகத்தை விற்றதையும், இந்த சம்பவத்தையும் ஒப்பிட்டுபார்த்தார், ஆனால் இந்த ஆசீர்வாதத்தை இழந்ததில், தன்னுடைய பங்கை பற்றி அவர் யோசிக்கவில்லை. பல வருடங்கள் அவர் தன்னுடைய பிறப்புரிமையின் மதிப்பையும் அறியாதிருந்ததினால், பொதுவான மனித இயல்பில் தன் சகோதரன் செய்த தவறை மட்டுமே மனதில் வைத்து கொண்டு, அவனை கொன்று விடுவதாக சபதம் செய்தார்.

சகோதரனின் கோபத்தை புரிந்துகொண்ட யாக்கோபு துரிதமாக வீட்டை விட்டு ஆரானுக்கு சென்றார். வடகிழக்கு திசையில் பிரயாணம் செய்தபின், லூஸ் பட்டணத்திற்கு அருகில், ஒரு கல்லை தலைக்கு வைத்து இராதங்கினார். அந்த இரவு தேவன் யாக்கோபுடன் சொப்பனத்தில் பேசினார் - "அங்கே அவன் ஒரு சொப்பனங்கண்டான், இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது, அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள். அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று - நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர் - நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும், நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய், உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பிவரப்பண்ணுவேன், நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்." (ஆதியாகமம் 28:12-15) ஆபிரகாம், ஈசாக்கை போல, யாக்கோபு இந்த வாக்குறுதியை தேவனிடமிருந்து இப்பொழுது பெற்றுகொண்டார். இந்த வாக்குறுதிகளை பெற்று கொண்டதில் இருந்த சிறிதளவு சந்தேகங்களும், தேவனுடைய வார்த்தைகளினால் முற்றிலுமாக நீக்கப்பட்டது. இந்த வாக்குறுதியோடு தேவன் யாக்கோபுக்கு நிலத்தையும் கொடுத்தார். இப்பொழுது ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களுக்கு மட்டும் அல்ல அவருக்கு கொடுத்த நிலத்திற்கும் இவர் சுதந்திரவாளியானார்.

இந்த இரண்டு அற்புதமான வெகுமதிகளோடு தேவன் யாக்கோபிற்கு ஒரு சொப்பனத்தையும் கொடுத்தார். அந்த ஏணியின் (ஸ்டிராங்க்ஸ் - 5551, என்பதற்கு படிகட்டுகள் என்று பொருள். இந்த எபிரெய வார்த்தை இந்த ஒரு வசனத்தில் மட்டுமே காணப்படுகிறது) சொப்பனம், அவர் பெற்ற வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றத்தை காணக்கூடிய ஒரு எடுத்துக்காட்டாக விளங்கியது. தூதர்கள் வானத்திற்கு ஏறுகிறதையும் இறங்குகிறதையும் யாக்கோபு கண்டார். பூமியில் உள்ள முழு குடும்பங்களும் படிப்படியாக ஆசீர்வதிக்கப்படும் வாக்குத்தத்தை யாக்கோபுக்கு தேவன் கொடுத்த போது, இந்த தரிசனத்தை யாக்கோபின் சிந்தையில் கொடுத்தார்.

### யுத முறைப்படி இந்த சொப்பனம்

வரலாற்றில் ஜனங்களுக்கு இந்த சொப்பனம் எதை பொருள்படுத்தியது - ? யூதர்கள் பாரம்பரியத்தில் இரண்டு குறிப்பான அர்த்தங்கள் கொடுக்கப்படுகிறது. முதலாவது - உண்மையில் அங்கு நான்கு தூதர்கள் மட்டுமே ஏணியில் ஏறிகொண்டும் இறங்கி கொண்டும் இருப்பதாக சொல்லப்படுகிறது. ஆகவே இஸ்ரயேல் பாபிலோனில் எழுபது வருடம் சிறையிருந்ததை இது அடையாளப்படுத்துகிறது என்கிறார்கள். அதற்கு அடுத்தபடியாக இரண்டாம் தூதனும் படிகளை ஏறி, அங்கிருந்து விழுந்ததால், அவன் மேதோ - பெர்சியா இராஜ்யத்தையும், மூன்றாம் தூதன் அதை விட சற்று குறைவான படிகளை ஏறி அதற்கு பின் விழுந்ததினால் உலகில் உள்ள கிரேக்க சாமராஜ்யத்தை, அடையாளப்படுத்துகிறவனாகவும் சொல்லப்படுகிறது.

இந்த வழக்கத்தின்படி நான்காவது தூதன் ரோம சாம்ராஜ்யத்தை அடையாளப்படுத்தவேண்டும். ஆனால் இந்த நான்காவது தூதன் வெகு தூரம் சென்று, மேகங்களுக்குள் மறைந்து, பரலோகத்திற்கு சென்றதாகவும், இனி அவர் கீழே விழ போவதில்லை என்று ஒரு நம்பிக்கை கொடுப்பதாக கருதினார்கள். ஆகவே இந்த நம்பிக்கையின் படி அந்த நான்காம் தூதன் விழவில்லை என்றும், இஸ்ரயேல் தேசத்தின் மேல் ரோம ஆதீக்கம் நீண்ட நாட்கள் நீடிக்கும் என்றும், அது தன்னை தேவனுடைய இராஜ்யம் என்று தாங்கள் கோருவதாகவும் கருதினர். ஆனால் காலப்போக்கில் இதுவும் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்த்தார்கள்.

இந்த நம்பிக்கையின் ஒரு முக்கியமான குறிப்பு என்னவென்றால் - அந்த நான்காம் தூதனின் பெயர் - ஏசா. இஸ்ரயேலின் எதிராளிகள் அனைவரும் காலப்போக்கில், தேவனால் வலுவற்று போவார்கள் என்ற வாக்குத்தத்தங்கள் மேலும் உறுதிப்படுத்தியது. கனவுகண்ட யாக்கோபுக்கு மிக நெருக்கமான ஏசாவும் கூட தோல்வியை அடைவான் என்று கருதப்பட்டது.

அடுத்து, அந்த சொப்பனம் காணப்பட்ட இடமாகிய பெத்லேகேமைக் குறித்து யூதர்களின் பாரம்பரியத்தில் மற்றொரு குறிப்பான விளக்கம் கொடுக்கப்படுகிறது. இதற்கு "தேவனுடைய வீடு" என்று பொருள். இது உண்மையில் தேவனுடைய வீடாகிய ஆலயம் கட்டப்பட்ட மோரியா மலையாகும். ஆகவே இந்த ஏணியின் வேலைகள், தேவனுடைய

ஆலய பணிகளை அடையாளப்படுத்தக்கூடியதாக இருக்கிறது. அதாவது, இஸ்ரயேல் தேவனிடம் மீண்டும் தொடர்பு கொள்ள அவர்களை சீர்பொருத்தவும், அதற்கு பின் பாவத்தினால் தேவனிடமிருந்து பிரிந்திருக்கும் மனுக்குலத்தை ஒப்புரவாக்கும் வேலைகளையும் இது காட்டுகிறது.

இந்த இரண்டு விதமான பாரம்பரிய விளக்கங்களும், தேவன் யாக்கோபுக்கு காண்பித்த சொப்பனமும் அவர் கொடுத்த வாக்குத்தத்தங்களோடு ஒத்து போகிறதை பார்க்கும்பொழுது, அந்த வாக்குத்தத்தத்திற்கு ஒரு நம்பிக்கை ஏற்படுத்துகிறது. இஸ்ரயேலின் மேல் தெய்வீக பாதுகாப்பு மற்றும் யாக்கோபின் சந்ததியின் வழியாக இந்த பூமியில் உள்ள முழு குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படுவதில், ஆதாம் இழந்த ஐக்கியத்தை மீண்டும் புதுபிப்பது ஒரு பகுதியாக இருக்கும் என்று தேவன் யாக்கோபுக்கு உறுதியளிக்கிறார். உண்மையில் இது ஒரு அருமையான நம்பிகையாகும்.

யூதர்கள் மத்தியில் தேவனோடு தொடர்பு கொண்டு, ஜீவனை பெற சட்டம் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த சட்டங்களுக்கு கீழ் சாமாதானம், சாந்தம் என்னும் கனிகளை கொடுக்க அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருந்தது. இவர்கள் இந்த தாழ்மையுள்ள ஆவியில் வளர்ச்சி அடைந்து, இருதயத்தை மென்மையாக வைத்துகொண்டிருந்தால், வந்த மேசியாவை அவர்கள் எளிதில் அடையாளம் கண்டுகொள்ள முடிந்திருக்கும். இந்த ஒரு தொடர்பை வசனங்கள், அத்திமரத்திற்கு ஒப்பிடுகிறது. யூத யுகத்தின் அறுவடைக்கு, ஒரு அற்புதமான எடுத்துக்காட்டாக, அத்திமரத்தின் கீழ் நாத்தானியேலை இயேசு கண்டார். "உத்தம கபடற்ற இஸ்ரயேலன்" (யோவா 1:47) என்று அவர் நாத்தானியேலை விவரிக்கிறார்.

தான் அத்திமரத்தின் கீழ் இருக்கும் போதே, இயேசு தன்னை பார்த்துவிட்டார் என்றும், அவர் அனைவரின் இருதயத்தின் சிந்தனைகளையும், நோக்கங்களை அறிந்தவர் என்று அறிந்தவுடன், அவருக்குள் இருந்த உண்மையான விசுவாசம் உடனடியாக மலர்ந்தது. இயேசுவை உண்மையான மேசியாவாக ஏற்றுகொண்டு அவருடைய விசுவாசத்தை வெளிப்படுத்தினார்.

இயேசு நாத்தானியேலிடம் சொன்ன பதில்களில், யாக்கோபின் சொப்பனத்தையும் குறிப்பிட்டார். " ... அத்திமரத்தின் கீழே உன்னைக் கண்டேன் என்று நான் உனக்குச் சொன்னதினாலேயே விசுவாசிக்கிறாய், இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய் என்றார். பின்னும் அவர் அவனை நோக்கி - வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் " (யோவான் 1:50,51) என்று இயேசு சொன்னார். யாக்கோபின் சொப்பனத்தில் காட்டப்பட்ட காரியங்களை தொடங்குவதாக இயேசு இங்கு குறிப்பிட்டார். அதாவது, பாவத்தினால் தொலைந்து போன தேவனுடைய ஐக்கியம் மீண்டுமாக சீர்பொருத்தப்படும் வேலைகளை அவர் குறிப்பிட்டார். அப்பொழுது, தேவனோடு எவ்விதமான தடையின்றி அவரோடு தொடர்பு கொண்டு காரியங்கள் நடப்பித்த இயேசுவின் வாழ்க்கையை நாத்தானியேல் கண்டதினால், அழைப்பை ஏற்றுகொண்டு இயேசுவுக்கு பின்சென்றார். இதனால், நாத்தானியேல் விரும்பி, எதிர்பார்த்தபடி இயேசுவை போல் தேவனோடு தொடர்பு கொள்வதற்கான ஒரு வாய்ப்பை பெற்றுகொண்டு அவருக்குள் சீர்பொருந்திய ஒரு புதிய ஜீவனை துவங்கினார்.

யாக்கோபு யூதர்களின் சொப்பனங்களின் நிறைவாக இருக்கிறார் என்று இயேசு சொன்னார். முதன்முதலில் ஆபிரகாமுக்கு இந்த வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டது, அதற்குபின் அதே வாக்குத்தத்தங்கள் ஈசாக்குக்கும், கொடுக்கப்பட்டது, அதற்கு பின் யாக்கோபுக்கும் அதே காரியங்கள் கொடுக்கப்பட்டது. அதற்குபின் தேவனுடைய ஜனங்கள் அனைவரின் இருதயங்களிலும், நீங்கா நினைவுகளாக நிலைத்துநின்றது. காலப்போக்கில் பூமியில் உள்ள முழு குடும்பங்களையும் ஆசீர்வதிக்கக்கூடிய ஆபிரகாமின் சந்ததியாக, இயேசு வேலைகளை துவங்க வந்தார்.

மீண்டும், தேவனோடு இசைந்து வாழக்கூடிய, அந்த சீர்பொருந்திய காட்சியை, யாக்கோபு சொப்பனமாக கண்டார். மேலும், அது வெகு சீக்கிரத்தில் அனைத்து இஸ்ரயேல் ஜனங்களின் உண்மையான நம்பிக்கையாகவும் மாறியது. சகல ஜனங்கள் மற்றும் சகல தேசங்களில் நம்பிக்கையும் இதுவே. இந்த கனவு மற்றும் நம்பிக்கை மற்றும் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் வெகு சீக்கிரத்தில் ஆபிரகாமின் வழியாகவும், ஈசாக்கின் வழியாகவும், யாக்கோபின் வழியாகவும், மற்றும் கிறிஸ்து எல்லா ஜனங்களையும் கல்லறைகளிலிருந்து எழுப்பி, பரிசுத்தமான பெரும்பாதையில் நடத்தி, பூமியல் உள்ள முழு குடும்பங்களையும் ஆசீர்வதிப்பதினால், நிறைவேற்றப்படும்.

நன்றி தேவனே, இது ஒரு சொப்பனம் அல்ல !



யாக்கோபு மற்ற பிள்ளைகளை விட யோசேப்பை அதிகமாக நேசித்த காரியத்தை யாருக்கும் மறைக்கவில்லை.இந்த யோசேப்பு தன்னுடைய கண்ணின் மணிபோல், நேசித்த ராகேலின் முதற்பேரான குமாரனாக இருந்தார். ஆகவே அவர் யோசேப்பின் மீது காட்டின அக்கறை, வெளிப்படையாக தெரிந்தது. ஆச்சரியத்திற்கு இடமில்லாமல் மற்ற பிள்ளைகள் பொறாமை அடைந்தார்கள். தாண், நப்தலி, காத் மற்றும் ஆசேர் "தங்கள் மந்தையை மெய்த்துகொண்டிருந்த போது" நடத்தின துன்மார்க்கமான செயல்களை தன்னுடைய தந்தையிடம் அறிவித்து வந்ததினால், காரியங்கள் மேலும், மோசமடைந்தது. (ஆதியாகமம் 37:2)

இந்த பொறாமை அதிகரித்து பகையை வளர்ந்ததால், சகோதரர்களால் அதை தங்களுக்குள் வைத்து கொள்ள முடியாமல் போனது. "அவன் சகோதரர்... அவனோடே பட்சமாய்ப் பேசாமல் அவனைப் பகைத்தார்கள்." (ஆதியாகமம் 37 :4) ஜான் கில் எழுதும்பொழுது - "அவர்கள் தங்களுடைய முழு மனதால், அவரை பகைத்ததால், தங்களுடைய பகையை அவர்களால் அடக்கிகொள்ள முடியவில்லை. அவர்களின் வார்த்தைகளினால் அதை வெளிக்காட்டினார்கள். யோசேப்போடு அவர்கள் கோபம் கொண்டவர்களாக, முரட்டுதனமாக பேசினார்கள்." என்று எழுதினார். சிநேகிதர்கள் மற்றும் உறவினர் மத்தியில், இயல்பாக பரிமாரிகொள்ளப்படும் "உம்மோடும் சமாதானம் உண்டாவதாக" என்ற வழக்கமான சொற்களையும் கூட யோசபேப்பின் சகோதரர்கள் அவரிடம் கூறவில்லை என்று ஜேமிசன், பாஸ்ஸெட், பிரௌன் என்று கூறினார்கள். ஒருவருக்கொருவர் தகுந்த மரியதையோடு வாழ்த்துக்களை தெரியப்படுத்திகொள்ள வேண்டும் என்பதை ஒரு பரிசுத்தமான கடமையாக கருதினார்கள். இந்த கடமையை தவறினவர்கள் நிச்சயமாக இரகசிய பகை உணர்வை கொண்டிருப்பது அடையாளமாக தெரிந்துவிடும்." சிநேகிதத்தை கனம் செலுத்துவதற்கு பயன்படும் சமாதானம் என்ற வார்த்தை "ஷாலோம்" என்ற எபிரெய பதத்திலிருந்து வந்ததாகும்.

**யோசேப்பு கண்ட சொப்பனங்கள்**

யோசேப்பு பதினேழு வயதாக இருந்தபோது, வரலாற்றை திருத்தி அமைக்கக்கூடிய இரண்டு சொப்பனங்களை கண்டார். இது ஒரு புதிய தேசத்தை உருவாக்குவதை துரிதப்படுத்தியது. முதல் சொப்பனம் ஒரே வரியில் சொல்லப்பட்டிருக்கிறது. "நாம் வயலில் அறுத்த அரிகளைக் கட்டிக்கொண்டிருந்தோம், அப்பொழுது என்னுடைய அரிக்கட்டு நிமிர்ந்திருந்தது, உங்கள் அரிக்கட்டு என் அரிக்கட்டைச் சுற்றி வணங்கி நின்றது என்றான்." (ஆதியாகமம் 37 :7) இந்த சொப்பனத்தை அவர் தன் சகோதரர்களிடம் சொல்லும் பொழுது, "அவர்கள் அவன் வார்த்தைகளின் நிமித்தமும் இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள்." (ஆதியாகமம் 37:8)

யோசேப்பின் இரண்டாவது சொப்பனமும் ஒரே வரியில் விவரிக்கப்பட்டிருக்கிறது. "அவன் வேறொரு சொப்பனம் கண்டு, தன் சகோதரரை நோக்கி - நான் இன்னும் ஒரு சொப்பனத்தைக் கண்டேன், சூரியனும் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் என்னை வணங்கினது என்றான்." (ஆதியாகமம் 37 :9) இதை யோசேப்பு தன்னுடைய சகோதரர்களுக்கும், தந்தைக்கும் அறிவித்தார். யோசேப்பு இந்த சொப்பனத்தை பகிர்ந்து கொண்டதில் எந்த விதமான ஆதாரங்கள் இல்லாமல் இருந்தாலும், இந்த சொப்பனமானது இனி எந்த ஒரு காரியத்தையும் பொருத்துகொள்ளமுடியாத அளவு பகையும் பொறாமையும் அதிகரித்தது. அதற்கு பின் அவரை கொல்ல திட்டமிட துரிதமானார்கள். (ஆதியாகமம் 37 :18)

**யோசேப்பு கண்ட சொப்பனங்**

ஒரு குடும்பத்தில் சில நேரங்களில் ஒரு குழந்தை அதிகமாக நேசிக்கப்பட்டால் மற்றவர்கள் இயல்பாக கோபம் கொள்வார்கள். அதே நேரத்தில் நேசிக்கப்பட்ட குழந்தை பெற்றோரிடத்திலிருந்து அதிக சலுகைகளை பெற்று கொண்டிருப்பதை அறியாமலும் இருக்க வாய்ப்புண்டு. இது யோசேப்பின் விஷயத்தில் உண்மையானது. அந்த சொப்பனங்களின் அர்த்தத்தை அவர் புரிந்துகொள்ளாததினால் அனைவரிடமும் அதை அறிவித்தார். தான் பெருமை கொண்டவராக மேட்டிமை சிந்தையுள்ளவனாக இருக்கிறார் என்று மற்றவர்கள் நினைத்து கொள்வார்கள் என்பதையும் அவர் அறியாமல் இதை செய்தார். அனைத்தையும் குடும்பத்தினரோடு பகிர்ந்துகொள்ளக்கூடிய ஒரு சராசரி வாலிபனாக யோசேப்பு இருந்தார். இந்த சொப்பனங்களின் பொருளை யோசேப்பு அறியாமல் இருந்தாலும், அவருடைய சகோதரர்கள் மிக தெளிவாக புரிந்துகொண்டார்கள்.

யோசேப்பின் சகோதரர்கள், இந்த சொப்பனம் சம்பவிக்கும் முன்னதாக அவரை கொல்ல சதிதிட்டமிட்ட காரியத்தைக் குறித்து ஒரு விளக்கவுறையில் - "சொப்பனங்களுக்குரிய விளக்கத்தை பெர்சியர்கள் அதிகதிகமாக கொடுத்தார்கள்."ஒரு சொப்பனத்தில் நட்சத்திரங்களுக்கு கட்டளைகொடுத்தால், அவர் பிற்காலத்தில் மக்களை ஆளுவார்" என்று இந்த சொப்பனத்தை பொருத்தவரையில் பெர்சியா மற்றும் கிரேக்க அறிஞர்கள் கணித்தார்கள். ஜான் கில் என்பவர் தன்னுடைய வேதாகம விளக்கவுரையில் இந்த கருத்தை ஏற்றுகொண்டிருக்கிறார்.

எப்படியிருந்தாலும், அந்த காலகட்டத்தில் இஸ்ரயேல் என்ற தேசம் தோன்ற வில்லை. தேவனுடைய பிரமாணங்கள் கொடுக்கப்படாமல் இருந்தாலும், யாக்கோபை போல தேவ பக்தியுள்ள சிலர் அப்போது வாழ்ந்து வந்தார்கள். அவர்களை சுற்றியிருந்த புறஜாதி மக்களுக்கு, யாக்கோபின் குடும்பத்தின் மேல் பற்றுதல் இருந்ததினால், யோசேப்பின் சகோதரர்கள் இந்த சொப்பனத்தை குறித்த விளக்கங்களை அறிந்து, இவைகள் சம்பவிக்கும் முன் யோசேப்பை கொல்ல முடிவு செய்தார்கள்.

கல்லூரி பேராசிரியரான நாகூம் சாரனா இந்த ஒரு சூழ்நிலையை மற்றொரு கோணத்தில் கண்ணோக்குகிறார் - "இஸ்ரயேல், தன்னுடைய புறஜாதி அயலகத்தாரோடு, சொப்பனங்களுக்குண்டான அர்த்தங்களை பகிர்ந்துகொண்டு, அதை ஒரு தெய்வீக வழிபாடு என்று எண்ணி, இந்நாள் வரைக்கும் முன்னேறாமல் (எகிப்து மற்றும் மெசபொத்தோமியாவை போல) இருக்கிறார்கள்." என்கிறார்.

பழைய ஏற்பாட்டில் துவக்கத்தில் காணப்பட்ட காட்சியானது ஆதியாகமம் 15 -1ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் ஆபிரகாமும் ஆண்டவரும் சம்பாஷித்து கொண்டிருந்தார்கள். அதற்குபின் ஆதியாகமம் 20 -3ல் பதிவு செய்யப்பட்ட சொப்பனத்தில் தேவன் அபிமலேக்குடன் பேசினார். அதற்குபின் யாக்கோபின் சொப்பனத்தில பூமியிலிருந்து ஒரு ஏணி வானத்திற்கு வைக்கப்பட்டிருந்தது. (ஆதியாகமம் 28 :12,13) யாக்கோபுடன் தேவன் அப்போது பேசிய காரியங்களை மீண்டும் ஆதியாகமம் 31 :1ல் பேசினார். தேவன் மனிதர்களோடு பேசிய வரலாற்றில், விசேஷமாக அவருடைய ஊழியக்காரர்களோடு அவர் பேசுவதை, பேராசிரியர் சாரனாவின் நிலையை அவருடைய பாடத்தில் நாம் புரிந்துகொள்ளலாம். எபிரெயர்களை சுற்றியிருந்த புறஜாதிகள் இந்த சொப்பனங்களின் பொருளை வெகு சீக்கிரத்தில் புரிந்து கொண்டார்கள். என்றும், சில நேரங்களில் இந்த தெய்வீக தொடர்புகளினால் கிடைக்கும் தகவல்களை வைத்து அதற்கு ஏற்ற வகையில் செயல்படவும் துவங்குகிறார்கள்.

கிட்டத்தட்ட கிமு1715ல் யோசேப்பு இந்த சொப்பனங்களை கண்டிருக்கவேண்டும். பெர்சிய சாமராஜ்யத்தின் வேர்களாகிய ஆசியாவில் உள்ள லிடியா மற்றும் பிரிஜியா கிமு 1750 ம் வருடத்தின் துவக்கத்தில் காணப்பட்டது. ஆனால் கிரேக்க சாமராஜ்யம் அதற்கு முன்பாகவே தோன்றியது. ஆகவே இரண்டு பேராசிரியர்களும் கணித்த காலங்கள் சரியாகவே இருக்கிறது.

ஒருவர் புஷ் அல்லது சாரனாவின் கண்ணோட்டத்த விரும்பினாலும், சொப்பனங்களின் விளக்கத்தை பொருத்தவரையில், அண்டை நாடுகளின் பாரம்பரிய நம்பிக்கைகளை சார்ந்திருந்ததாக காண்கிறோம். ஆகவே கோபமடைந்த யோசேப்பின் சகோதரர்களை அண்டையிலிருந்த பெர்சியர்கள், இந்த சொப்பனங்களின் விளக்கத்தை சொல்லி, அவர்களின் கோபத்தை அதிமாக தூண்டிவிட்டிருப்பார்கள். வருங்காலத்தில் யோசேப்பு இவர்களை ஆளுவார் என்ற கருத்தை அவர்களால் நிச்சயமாக ஏற்றுகொள்ளமுடியவில்லை.

**இரண்டு மேசியாக்கள் மற்றும் சொப்பனங்கள்**

"மேசியாவை பற்றி, ஒருவர் யூதமதகுருக்களின் நோக்கங்களை கற்றுகொண்டால் சில ஆர்வமூட்டும் செய்திகளை அறிந்துகொள்ளலாம். அநேக பழைய குருக்கள் இரண்டு மேசியாக்களை பற்றி பேசினார்கள் - ஒருவர் "தாவீதின் குமாரன்" என்றும், மற்றொருவர் "யோசேப்பின் குமாரன்." ஒருவர் மேசியாவின் பாடுகளை, தாவீது வழியாக வந்த மேசியாவோடு ஒப்பிட்டு அநேக ரபிகளால் எழுதப்பட்டிருந்தாலும், இரண்டாவது மேசியாவை "யோசேப்பின் குமாரன்" அல்லது "எபிராயீமின் குமாரன்" என்றும் ஏற்றுகொள்கிறார்கள். இந்த யோசேப்பின் குமாரனாகிய" மேசியா பாடுகளை அனுபவிப்பராகவும், தாவீதின் வழியாக வந்த மேசியாவை வெற்றி வீரனாகவும் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த யூத மத போதகர்கள் வேதாகமத்தில் உள்ள பாடுகளை அனுபவிக்கும் மேசியாவின் உருவ ஒப்புமைகளை வைத்துகொண்டு போராடினார்கள்." என்று எழுதப்பட்டிருக்கிறது.

"எபிராயீமின் குமாரன்" என்ற வார்த்தைகளுக்குரிய ஒரு கீழ் குறிப்பில் - "உயர்தரமான விளக்கவுரையாளர்களின் மத்தியில்

பெரும்பான்மையானோர், யோசேப்பின் குமாரனாகிய மேசியா, எபிராயீம் கோத்திரத்திலிருந்து வருவார் என்று எதிர்பார்த்தார்கள். இதை தவிர வேறு கருத்துக்கள் இருந்தாலும், எபிராயீமுக்கும், மனாசேவுக்கும் உள்ள வேறுபாடுகளின் அடிப்படையில் ஏற்றுகொள்ளபடுவதில்லை." என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

யூத மதகுருக்களின் பாரம்பரியத்தில் "Messaia ben Yoseph" (மேசியா, யோசேப்பின் குமாரன்) யோசேப்பின் வழி வருவார், என்ற கருத்துபடிவம் இருந்தது. மேலும், கடைசி நாட்களில், அதாவது கடைசி நாட்களுக்கு வழிநடத்தும் காலங்களில், யோசேப்பின் வழிவருபவர்களின் கிரியைகளையும் இந்த "மேசியா, யோசேப்பின் குமாரன்" அடையாளப்படுத்துபவராகவும் இருக்கிறார். இந்த யூத பாரம்பரியத்தின்படி " Messaia ben Yoseph " (மேசியா, யோசேப்பின் குமாரன்) மற்றும் " Messaia ben David" (மேசியா, தாவீதின் குமாரன்) என்று இரண்டு மேசியாக்கள் இருக்கிறார்கள்.

இந்த வாக்கியங்கள் ஆர்வமூட்டுவதாக இருக்கிறது ஏனெனில், அநேக கிறிஸ்தவர்கள் யோசேப்பை கிறிஸ்துவுக்கு நிழலாக காண்கிறார்கள். யூதர்கள் நாசரேத் ஊராகிய இயேசுவை மேசியாவாக ஏற்றுகொள்ளாமல் போனாலும், பழைய ஏற்பாட்டில், வெற்றியடைந்த இராஜாவாக (ஏசாயா 11:1-5)மேசியாவை சித்தரிக்கும் தீர்க்கதரிசனங்களை குறித்தும் மற்றும் பலிசெலுத்தின இரட்சகராகிய மேசியாவை (ஏசாயா 53) குறித்தும் அவர்கள் ஏதாவது செய்யவேண்டியதாக இருந்தது. "ஒரு நாளில் இரண்டு மேசியாக்கள் இருப்பார்கள் - யூதா வம்சத்திலிருந்து வந்த யோசேப்பின் குமாரனாகிய மேசியா, தாவீதின் குமாரனாகிய மேசியாவுக்கு வழியை செவ்வைப்படுத்துவார். பாரம்பரியத்தின்படி யோசேப்பின் குமாரனாகிய மேசியா முழு இஸ்ரயேலையும் கூட்டிசேர்த்து, தாவீதின் குமாரனாகிய மேசியாவின் வரவுக்கு காத்திருப்பார். ஆனால், இந்த பணியில், ஜனங்களுக்காக ஜீவனை கொடுத்து, அவர் மரித்து விடுவார்" என்று ரபி அரி கான் கருதுகிறார். இந்த பழமையான யூத மத போதகர்கள் மேசியாவை பற்றி இப்படிப்பட்ட கருத்துக்களை வெவ்வேறு வசனங்களின் அடிப்படையில் யோசிப்பது கடினமாக இல்லை.

மேலோட்டாமாக பார்க்கும் பொழுது, ஒரே விதமாக தோற்றமளிக்கக்கூடிய யோசேப்பின் இரண்டு சொப்பனங்கள், உண்மையில் வெவ்வேறு அர்த்தமுடையதாக இருக்கிறது. முதல் சொப்பனத்தில் அநேக அரிக்கட்டுகள் ஒரு அரிக்கட்டை வணங்குவதாக காணப்படுகிறது. வணங்கக்கூடிய அரிக்கட்டுகளின் மனத்தாழ்மையை இது குறிப்பிடலாம். ஆனால் இரண்டாவது சொப்பனத்தில் சூரியன், சந்திரன், மற்றும் பதினொரு நட்சத்திரங்களும் மனிதனாகிய யோசேப்பை வணங்குவதாக காணப்பட்டது. மனிதனுடைய சகலத்திற்கும் அவனே அதிகாரி என்று இது குறிப்பிடுகிறது.

"- யூதா வம்சத்திலிருந்து வந்த யோசேப்பின் குமாரனாகிய மேசியா, தாவீதின் குமாரனாகிய மேசியாவுக்கு வழியை செவ்வைப்படுத்துவார்." என்ற வாக்கியமே, ரபீ கான் எழுதினவைகளில் மிக முக்கியமான வாக்கியமாக இருக்கிறது. யோசேப்பின் நிழலுக்கு இது சரியாக பொருந்துகிறது. ஆட்சிக்கு வருமுன் யோசேப்பு அநேக பாடுகளைப்பட்டார். ஆகவே நிச்சயமாக இவர் அந்த மேசியாக்களில் ஒருவராக அடையாளப்படுத்தப்படுகிறார். இயேசுவின் நாட்களில் உள்ள தலைவர்கள் செய்யவேண்டிய காரிங்களை மிக சரியாக செய்து கொண்டிருந்தவரும், மேசியாவுக்கு வழியை ஆயத்தப்படுத்தின யோவான் ஸ்நானகனை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அவருடைய ஊழியம் செய்துகொண்டிருக்கையில் அவரும் மரித்து போனார்.

யோவான் இயேசுவுக்கு வழியை ஆயத்தப்படுத்தினார் என்பதை ஏன் இவர்கள் தெளிவாக புரிந்துகொள்ளவில்லை ? ஒருவேளை யூத மத போதகர்களின் "இரண்டு மேசியாக்களின்" பாரம்பரிய கூற்று யோவானை மேசியாவிற்கு வழியை ஆயத்தம் செய்பவராக அடையாளம் கண்டு கொள்ள தடுத்திருக்குமோ ? இஸ்ரயேலில் உள்ள தலைவர்கள் இந்த "இரண்டு மேசியாக்களின்" கூற்றுக்கு உடன்பட்டிருந்தால், இவர்கள் எபிராயீம் அல்லது மனாசே கோத்திரத்திலிருந்து மேசியாவை எதிர்பார்த்திருக்கவேண்டும் அல்லவா. யோவான் ஸ்நானகன் ஒரு லேவி. தர்க்க ரீதியில் பார்க்கும் பொழுது யோவான் (யோசேப்பின் குமாரன்) மேசியாவாக இராத பட்சத்தில் இயேசுவும் (தாவீதின் குமாரன்) யூதா கோத்திரத்திலிருந்து வந்திருந்தாலும் அவர் மேசியாவாக இருந்திருக்க முடியாது. இப்படிப்பட்ட கேள்விகள் மற்றும் பதில்களும் எழும்பினாலும், இவ்வளவு தீர்க்கதரிசனங்கள் இயேசுவை குறித்து இருந்தாலும், யூதர்கள் இயேசுவை ஏன் புரக்கணித்தார்கள் என்ற கேள்வி எழும்புகிறது.

தாவீதின் குமாரானாகிய மேசியா ஒருவர் மட்டுமே உண்டு என்று கிறிஸ்தவர்கள் ஏற்றுகொள்கிறார்கள். இவர் முதலில் இஸ்ரயேலுக்கு வந்து பாடுப்பட்டு மரித்தார். அவருடைய இரண்டாம்

வருகையில் வெற்றி பெற்ற இராஜாவாக செயல்படுவார். முதல் வருகையில் அவர் ரோமர்களை அல்ல, மரணத்தை ஜெயித்தார். இவைகள் ஏற்ற காலத்தில் இந்த உலகத்திற்கு வெளிப்படும். யோசேப்பின் சகோதரர்கள் மற்றும் அவருடைய தகப்பனை பொருத்த வரையில் அவருடைய சொப்பனம் எவ்வளவு துல்லியமாக பொருந்துகிறது என்று நாம் அறிவோம். எகிப்தில் யோசேப்பின் சகோதரர்கள் உண்மையில் அவரை தரைமட்டும் தாழ்ந்து அவரை வணங்கினார்கள். காலப்போக்கில், யாக்கோபின் குமாரர்களின் சந்ததி இஸ்ரயேல் ஜாதியாக பெருகியது. இயேசுவின் காலத்தில், இஸ்ரயேலின் தலைவர்கள் "தலை வணங்கவில்லை"அல்லது இயேசுவை மேசியாவாக ஏற்றுகொள்ளவில்லை, ஆனால் காலப்போக்கில் அவர்களின் மேசியாவை அறிந்து முழுமையாக அவருக்கு தங்களை ஒப்புகொடுப்பார்கள்.

கிறிஸ்துவின் ஞானஸ்நானத்திற்கு பின் அவர் வாழ்ந்த வாழ்க்கையின் இரண்டு பகுதிகளை, யோசேப்பின் இரண்டு சொப்பனங்கள் அடையாளப்படுத்தலாம். இயேசு சபைக்கு தலையாக இருக்கிறார் என்பதை முதல் சொப்பனம் காட்டுகிறது. அவருடைய சகோதரர்கள் (பதினோரு அரிக்கட்டுகள்) யோசேப்பை (ஒரு அரிக்கட்டை) வணங்கினார்கள். இது முழு கோதுமை மணிகளை கொண்ட கதிர்களாக இருக்கவேண்டும். ஆகவே அவைகளால் வளைய முடிந்தது. (ஆதியாகமம் 30-14) இயேசுவை பின்பற்றுபவர்களை கோதுமை மணிகள் என்று மத்தேயு 13 -24-30 ம் வசனங்கள் குறிப்பிடுகிறது. ஆனால் இயேசு தாமே ஒரு கோதுமை கதிராக சித்தரிக்கப்பட முடியுமா ?

நம்முடைய ஆண்டவரும், குருவும், எஜமானனுமான இயேசு நமக்கு தலையாக இருக்கிறார், நாம் அனைவரும் அவருக்கு கீழ்படிந்து தலைவணங்குவோம். இன்றைக்கு தேவனுடைய புத்திரர்களாக உடன்படிக்கை செய்த சகோதரர்களை போல அவரும் ஒரு காலத்தில் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட தேவ குமாரனாக இருந்தார். இந்நிலையில் இயேசு நமக்கு மூத்த சகோதரராக இருக்கிறார். அதாவது நாம் அனைவரும் கோதுமை மணிகள் அவர் நமக்கு தலையானவர். யோசேப்பு தலைச்சன் பிள்ளையாக இராவிட்டாலும், தன்னுடைய தந்தையால் உயர்வாக மதிப்பிடப்பட்டார். இப்படியாக, முதல் சொப்பனம் அவருடைய சகோதரர்களை சம்பந்தப்பட்டதாக இருந்தது. இது சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவின் சகோதரர்கள் தங்களுடைய மூத்த சகோதரருக்கு முழு மனதோடு கீழ்படிந்து ஒப்புகொடுக்கும் காரியத்தின் நிறைவை தீர்க்கதரிசனமாக இந்த சம்பவம் எடுத்துகாட்டுகிறது.

இயேசு தன்னுடைய மணவாட்டியுடன் அவருடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் பொழுது, முழுமையடைந்த சபை உயிர்த்தெழுதலுக்கு பின் (மத்தேயு 28:18) தேவன் கொடுத்த முழு வல்லமையையும், அதிகாரத்தையும் பயன்படுத்தி, உலகத்தின் முழு மனுக்குலத்தையும் உயிர்ப்பித்து, சீர்ப்படுத்தும் பொறுப்பை ஏற்றுகொள்வார்கள். இந்த காரியம் எவ்வளவு நேர்த்தியாக யோசேப்பின் இரண்டாவது சொப்பனத்திற்கு பொருந்துகிறது. சந்திரன் "நியாயப்பிரமாணத்தையும்", சூரியன் "சுவிசேஷத்தின் வெளிச்சத்தையும்" அடையாளப்படுத்துகிறது. (Reprints, p. 499) நியாயப்பிரமாணத்திற்கு (சந்திரன்) கீழிருந்த இஸ்ரயேல் ஜனங்களும், உண்மையான சத்தியம் பிரசங்கித்த நாட்களில் வாழ்ந்தவர்களும் (சூரியனின் வெளிச்சம்) நீண்ட காலமாக எதிர்ப்பார்த்த மேசியாவின் ஆட்சியில் அரசாளப்படுவார்கள். அந்த பதினொரு நட்சத்திரங்களும், யாக்கோபின் பதினோரு குமாரர்களிடமிருந்து வந்த வெளிச்சத்தைக் குறிக்கலாம். சபையானது நிழல்கள் மற்றும் எடுத்துகாட்டுகளின் மூலமாக வெளிச்சத்தை கண்டு கொண்டிருக்கிறது. பின்நாளில், இராஜ்யத்தில் அனைத்தையும் நேரடியாக காண்பார்கள். யோசேப்பு கண்ட சொப்பனத்தில் ஒரு நட்சத்திரத்தை பணிந்து கொண்டதால், மீதி பதினோரு நட்சததிரங்கள் மட்டுமே இருந்தன. மத்தியஸ்தரின் ஆட்சியின் இறுதியில், இஸ்ரயேலின் அனைத்து கோத்திரங்களும் ஒன்று சேர்ந்து, முழு உலகத்தின் மனுக்குலத்தோடு மேசியாவுக்கு அடிபணிவார்கள்.

தேவன் எவ்வளவு அற்புதமாக அவருடைய சபையினிடத்தில் பேசியிருக்கிறார். மேலும், காலப்போக்கில் நான்காயிர வருடங்களுக்கு முன் வாழ்ந்த அந்த வாலிபனுடைய சொப்பனத்தின் மூலமாக இந்த முழு உலகத்தோடும் பேசுவார். தேவனுக்கே மகிமை !



"பூர்வகாலங்களில் பங்குபங்காகவும், வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்.." - எபிரெயர் 1:1

Carl Hagensick

யோசேப்பு தன்னுடைய தந்தையாகிய யாக்கோபால் அதிகமாக நேசிக்கப்பட்ட மகனாக உயர்ந்த நிலையில் இருந்து, பொறாமை கொண்ட சகோதரர்களால் அடிமையாக விற்கப்பட்டு மிகவும் தாழ்வான அடிமையின் நிலைக்கு வந்தார். அவர் அடிமையாக விற்கப்பட்டபோதும், பிரதான கண்காணியாக போர்த்திபாரின் வீட்டில் உயர்ந்த நிலையில் வேலைசெய்தார். அங்கு அவர் தவறான குற்றம் சாட்டப்பட்டு பார்வோனின் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கும் மற்ற கைதிகளை கண்கானிக்கும் உயர்ந்த பொருப்பு அவருக்கு கொடுக்கப்பட்டபோது, விடுதலைபெற்ற ஒரு கைதியால் அவர் மறக்கப்பட்டார். இரண்டு வருடங்களுக்கு பின் எகிப்தின் அதிபதியாக மீண்டும் உயர்த்தப்பட்டார் - முழு தேசத்தை ஆட்சி செய்யும் இரண்டாவது இடத்தை பெற்றார்.

"பல்வேறு முறைகளில்" ஒன்றான சொப்பனத்தின் மூலமாக தேவன் முற்பிதாக்களோடு தொடர்பு கொண்டார். யோசேப்பு ஒரு சொப்பனக்காரராக இருந்தார். மூன்று பகுதிகள் ஒவ்வொன்றும் இரண்டு சொப்பனங்கள் கொண்டதாக அவருடைய வாழ்க்கை சுழன்று கொண்டிருந்தது.

இந்த சொப்பனங்களை தேவனுடைய யுகங்களை பற்றிய தெய்வீக திட்டத்தின் மூன்று காலப்பகுதிகளாக நாம் இவைகளை பொருத்தலாம். துவக்கத்தில் அவர் சகோதரர்கள் மத்தியில் உயர்த்தப்பட்ட காரியங்கள், யூத யுகத்தில் தேவன் இஸ்ரயேல் ஜனங்களுக்கு கிருபையளித்து அவர்களை உயர்த்தினதை ஒப்பிடலாம். இடையில் வந்த இரண்டு சொப்பனங்களும் - பானபாத்திரக்காரன் மற்றும் சுயம்பாகி - சுவிசேஷ யுகத்தை குறிப்பிடலாம். கடைசியாக பார்வோன் கண்ட இரண்டு சொப்பனங்களும், ஆயிரவருட அரசாட்சியில் தேவனுடைய மகிமையான கிரியைகளை எடுத்துக்காட்டுகிறது.

போர்த்திபாரின் மனைவி பொய்யான குற்றசாட்டை யோசேப்பின் மீது சுமத்தியதால் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் அவருடைய நடத்தை நேர்த்தியான ஒரு முன்மாதிரியாக இருந்ததினால், அவர் மற்ற அனைத்து கைதிகளுக்கும் மேல் விசாரனைக்காரனானார். இந்த ஒரு நிலையில் யோசேப்பு பானபாத்திரக்காரன் மற்றும் சுயம்பாகியையும் சந்தித்தார். (ஆதியாகமம் 40:1-23)

### பானபாத்திரக்காரன் மற்றும் சுயம்பாகி

பார்வோனுக்கு விஷம் கொடுத்து கொல்ல சதியாலோசனைகள் செய்யப்பட்டதாக எந்த ஒரு குறிப்பும் இல்லாமல் போனாலும், இப்படிப்பட்ட ஒரு குற்றம் சாட்டப்பட்டது. இதில் அரண்மனையில் உள்ள பானபாத்திரக்காரன் மற்றும் சுயம்பாகியாகிய - இரண்டு முக்கியமான நபர்கள் சந்தேகத்தில் பிடிப்பட்டார்கள்.

ஆட்சியாளர்கள் நிலையற்ற சிங்காசனங்களில் அமர்ந்தார்கள். ஏனெனில் திடீர் என்ற அரசியல் புரட்சியினால் ஏற்பட்ட யுத்தங்களில் அவர்கள் தள்ளப்பட்டார்கள். ஆகவே விஷம் கலந்து கொல்லுவது அன்றைய பழக்கத்தில் இருந்ததினால், பார்வோன் அந்த இருவரையும் சந்தேகப்பட்டது ஒரு இயல்பான காரியமாக இருந்தது. விசாரனைக்கு பின் இருவரும் சிறையில் அடைக்கப்பட்டார்கள். குறிப்பிடப்படாத கால அளவில் அவர்கள் இருக்கையில் இருவரும் சொப்பனம் கண்டார்கள். அதை அவர்கள் புரிந்துகொள்ளாததினால், அவர்கள் மிகவும் கவலைப்பட்டார்கள். இவர்கள் துக்கத்துடன் இருப்பதை கண்டு யோசேப்பு அவர்களை விசாரித்தார். அவர் இருவரும் -"சொப்பனம் கண்டோம், அதற்கு அர்த்தம் சொல்லுகிறவன் ஒருவனும் இல்லை என்றார்கள். அதற்கு யோசேப்பு சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்லுதல் தேவனுக்குரியதல்லவா? அவைகளை என்னிடத்தில் சொல்லுங்கள் என்றான்." (ஆதியாகமம் 40:8) என்று பதில் அளித்தார்கள்.

பானபாத்திரக்காரன் மற்றும் சுயம்

பானபாத்திரக்காரனும், சுயம்பாகியும் யோசேப்பின் தேவனை விசுவாசித்ததாக எந்த விதமான குறிப்புகளும் இல்லை. அல்லது யோசேப்பிடம் அவர்கள் கண்ட சொப்பனத்தை

வெளிப்படுத்த அவர்களுக்கு மனதில்லாமலும் இருந்தது. இன்று கிறிஸ்தவர்களுக்கு இதில் ஒரு பாடம் கொடுக்கப்படுகிறது. நாம் விசுவாசிக்கும் தேவனை மற்றவர்கள் விசுவாசிக்காமல் இருக்கலாம், ஆனால் மற்றவர்கள் நம்மிடத்தில் ஆலோசனை கேட்கும் அளவுக்கு நம்முடைய ஒழுக்கமுள்ள வாழ்க்கை நீதியாகவும் மற்றவர்களுக்கு மாதிரியாகவும் இருக்கவேண்டும். அதுபோல, "சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும்" கிறிஸ்தவர்கள் நன்மையான காரியங்களை பேச ஆயத்தமாக இருந்து (11தீமோத்தேயு 4:2) நம்மை அல்ல மாறாக, தேவனை மகிமைபடுத்தும் படி பேசவேண்டும்.

**சொப்பனங்கள்**

"அப்பொழுது பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நோக்கி - என் சொப்பனத்திலே ஒரு திராட்சச்செடி எனக்கு முன்பாக இருக்கக்கண்டேன். அந்தத் திராட்சச்செடியிலே மூன்று கொடிகள் இருந்தது, அது துளிர்க்கிறதாயிருந்தது, அதில் பூக்கள் மலர்ந்திருந்தது, அதின் குலைகள் பழுத்த பழங்களாயிருந்தது. பார்வோனுடைய பாத்திரம் என் கையிலே இருந்தது, நான் அந்தப் பழங்களைப் பறித்து, அவைகளைப் பார்வோனுடைய பாத்திரத்திலே பிழிந்து, அந்தப் பாத்திரத்தைப் பார்வோனுடைய கையிலே கொடுத்தேன் என்று தன் சொப்பனத்தைச் சொன்னான்." (ஆதியாகமம்40:9-11) இதற்கு யோசேப்பு விளக்கம் அளித்தார் - "அந்த மூன்று கொடிகளும் மூன்று நாளாம். மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி, உன்னை மறுபடியும் உன் நிலையிலே நிறுத்துவார், முன்னேஅவருக்குப் பானம் கொடுத்துவந்த வழக்கத்தின்படி பார்வோனின் பாத்திரத்தை அவர் கையில் கொடுப்பாய்" (ஆதியாகமம் 40:12-13)என்றார். அதற்கு பின் இராஜாவின் அரண்மனையில் இருக்கும் போது தான் அநியாயமாக குற்றம் சாட்டப்பட்டதினால், சிறையிலிருப்பதை குறித்து பார்வோனிடம் சொல்லி விடுதலை வாங்கி தரும்படி யோசேப்பு பானபாத்திரக்காரனிடம் ஒரு தனிப்பட்ட வேண்டுகோல் விடுத்தார்.

இதை கேட்ட சுயம்பாகி மிகவும் சந்தோஷமடைந்து தன்னுடைய சொப்பனத்திற்கும் விளக்கம் சொல்லும்படி கேட்டுகொண்டார் - "... நானும் என் சொப்பனத்தில் மூன்று வெள்ளைக்கூடைகள் என் தலையின்மேல் இருக்கக்கண்டேன். மேற்கூடையிலே பார்வோனுக்காகச் சமைக்கப்பட்ட சகலவித பலகாரங்களிலும் கொஞ்சம் கொஞ்சம் இருந்தது, என் தலையின்மேல் கூடையில் இருந்தவைகளைப் பறவைகள் வந்து பட்சித்தது என்றான்." (ஆதியாகமம் 40:16,17) ஆனால் இதற்குரிய விளக்கத்தை கேட்டவுடன் சுயம்பாகி மிக அதிர்ச்சியடைந்திருக்கவேண்டும். இன்னும் மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி, உன்னை மரத்திலே தூக்கிப்போடுவார், அப்பொழுது பறவைகள் உன் மாம்சத்தை தின்னும்... என்று விளக்கம் சொன்னார்.

மூன்று நாட்களுக்கு பின் இரண்டு சொப்பனங்களும் யோசேப்பு சொன்னபடி சம்பவித்தது.

**இணையான எடுத்துக்காட்டுகள்**

அப்பம் சுடுகிற சுயம்பாகிக்கும், திராட்சரசத்தை ருசிப்பார்க்கும் பானபாத்திரக்காரனுக்கும் நடுவில் யோசேப்பு நிற்பதை சற்று நினைத்து பாருங்கள். இரண்டாயிர வருடங்களுக்கு பின் யோசேப்பை விட பெரியவர் அப்பம் மற்றும் திராட்சைரசத்தோடும் நின்றார். கடைசி இராபோஜனத்தின் போது - "அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து,அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து - நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து - நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள், இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." (மத்தேயு 26:26- 29) என்று வாசிக்கிறோம்.

பானபாத்திரக்காரன் மற்றும் சுயம்பாகியினுடைய சொப்பனத்தில் மூன்று நாள் காத்திருக்கவேண்டியதாக இருந்தது. அப்பம் சுடும் சுயம்பாகி மரத்தில் தூக்கப்பட்டான், ஆனால் திராட்சைரசத்தை கொடுக்கும் பானபாத்திரக்காரன் தப்பித்தான். கொல்லப்பட்ட சுயம்பாகியின் உடல் மரத்தில் தொங்கியது. வேதாகமத்தில் முதல்

முதலில் இவன் மட்டுமே இப்படியாக விவரிக்கப்பட்டிருக்கிறான்.

இயேசு மூன்று நாட்கள் கல்லறையில் இருந்தார். அவருடைய சரீரம் சிலுவையில் தொங்கியது ஆனால், அவருடைய புது உடன்படிக்கையின் இரத்தம் இந்நாள் வரைக்கும் தொடர்ந்து கிரியைசெய்து, அவருடைய இராஜ்யத்தில் புது உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படும் பொழுது, அப்பொழுது நடைபெறும் வேலைகளுக்கும் பயன்படுத்தப்படும்.

பானபாத்திரக்காரன் மீண்டும் அவன் இருந்த நிலைக்கு உயர்த்தப்பட்டாலும், அவன் யோசேப்புக்கு கொடுத்த வாக்குறுதியை (யோசேப்பு அநீதியாக குற்றம் சாட்டப்பட்டு சிறையில் இருக்கிறார் என்பதை இராஜாவுக்கு அறிவிப்பது) மறந்துவிட்டான். இரண்டு வருடங்கள் கழிந்தும் அவன் கவனத்திற்கு ஏதும் வரவில்லை. அது போல் இந்த புது உடன்படிக்கையும் இரண்டாயிரவருடங்களாக காத்திருக்கிறது.

இப்படியாக தாமதமான அந்த நீண்ட நாட்களாக சிறையிலிருந்து விடுதலையை எதிர்பார்த்த யோசேப்பு நிச்சயமாக சோர்ந்து போயிருக்கவேண்டும். ஆனாலும் இது தேவனுடைய திட்டமாகவே இருந்தது. பார்வோனின் சிறையில் அநேக அரசியல்வாதிகளும் இருந்திருப்பார்கள். யோசேப்பு நித்தமும் அவர்களுடன் பேசி, எகிப்தின் அரசியல் அமைப்புகளை பற்றியும், மற்ற காரியங்களை குறித்து அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைத்திருக்கும். இவையனைத்தும்`. வருங்காலத்தில் எகிப்தின் காரியங்களை நிர்வகிக்க இவருக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்திருக்கும்.

சுவிசேஷ யுகத்திலும் இது உண்மையாக நடைபெறுகிறது. நாம் இந்த பாவமான உலகத்தில் சிறையிருப்பில் இருக்கும்பொழுது வருங்காலத்தில் முழு மனுக்குலத்தை ஆசீர்வதிக்கும் வேலைகளை செய்வதற்கு தேவன் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு இப்பொழுது பயிற்சிகொடுக்கிறார். பாவத்தின் அனுபவங்களோடு நாம் கற்றுகொண்ட பாடங்களின் விளைவாக அயிரவருட ஆட்சியில் மனுக்குலத்தை நாம் ஆசீர்வதிப்போம்.

பார்வோனின் சொப்பனத்தில் செழிப்பான முதல் ஏழு வருடங்கள் மனுஷன் பாவத்திற்கும் மரணத்திற்கும் கீழ் வாழும் காலப்பகுதியையும், அதற்கு பின் வந்த பஞ்சமான ஏழு வருடங்களும் தேவனுடைய இராஜ்யத்தை சித்தரிப்பதும், எதிர்பொருள் கொண்ட காரியம் போல் தோன்றுகிறது. இதை புரிந்துகொள்ள "பஞ்சம்" என்ற வார்த்தையின் பொருளை மறுபடியும் பார்க்கவேண்டியதாக இருக்கிறது. பஞ்சம் - உணவற்ற நிலையை அதாவது அதிகமாக உணவு தேவைப்படக்கூடிய சூழ்நிலையை குறிப்பிடுகிறது. இன்று அநேக உபத்திரவங்களுக்கு மத்தியில் ஐசுவரியவான்காக இருக்கிறார்கள். மனிதனுக்கு தேவை என்று உணரும் நேரத்திற்காக அவைகள் சேகரிக்கப்படுகிறது. பாவம் மற்றும் தீமையினால் மனிதன் பெறும் அனுபவங்களில் கற்றுகொள்ளக்கூடிய பாடங்களை வருங்காலத்தில் பங்கிடப்படும் உணவு சித்தரிக்கிறது.

**மெல்கிசெதேக்கு**

லோத்தை சிறைபிடித்து போனவர்களிடம் யுத்தம் நடப்பித்து அவரை திருப்பிகொண்டு வரும்பொழுது எருசலேமில், உன்னதமான தேவனுடைய ஆசாரியனாகிய மெல்கிசேதேக்கு அவருக்கு அப்பமும், ரசத்தோடு எதிர்கொண்டு போனார்.(ஆதியாகமம் 14:18) இதுவே வேதாகமத்தில் அப்பம் மற்றும் ரசமாகிய அடையாளங்களை குறிப்பிடும் முதல் சம்பவமாகும். "நீர் மெல்கிசேதேக்கின் முறையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்..."(சங்கீதம் 110 :4) என்று அரசனாகிய தாவீது இயேசுவை குறித்து தீர்க்கதரிசனம் உரைத்தார். இதைக் குறித்து எபிரெயரின் புத்தகத்தில் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறாக, கடைசி இராபோஜனத்தின் போது, இரண்டு ஆசாரியத்துவங்களின் வேவ்வெறு நிலைகளை காணலாம் - (1) ஆரோனின் முறைமை (2) மெல்கிசேதேக்கின் முறைமை. மெல்கிசேதேக்கின் முறைமையை அப்பமும் திராட்சைரசமும் அடையாளப்படுத்துவது போல, புளித்தமா மற்றும் ஆட்டுக்குட்டி ஆரோனின் முறைமையை அடையாளப்படுத்துவதாக இயேசு இங்கு குறிப்பிட்டார். ஆகவே அப்பம் மற்றும் திராட்சைரசத்திற்கும் மெல்கிசேதேக்கும் அடுத்து பானபாத்திரக்காரன் மற்றும் சுயம்பாகிக்கும், கடைசி இராபோஜனத்திற்கும் ஒரு வித சம்பந்தம் இருப்பதை நாம் காணலாம்.

**ஒப்பரவாக்குதல்**

கிதியோனின் குமாரனாகிய யோதாம் சொல்லிய உவமையை நாம் ........................நியாயாதிபதி 9:7-15 வசனங்களில் வாசித்து அறியலாம். அதில் பல

விருட்சங்களுக்கு இராஜ்யம் பாரம் கொடுக்கப்படுவதற்கு அழைக்கப்படுவதை வாசிக்கலாம். அதில் ஒலிவமரம், அத்திமரம், திராட்சை செடி, இந்த அழைப்பை மறுத்தது. ஆனால் முட்செடி (சாத்தானை அடையாளப்படுத்தும் அபிமலேக்கு) அழைப்பை ஏற்றுகொண்டது. இந்த உவமையில் திராட்சை செடி சொன்னபதிலை கவனிப்போம் -"அதற்குத் திராட்சச்செடி தேவர்களையும் மனுஷரையும் மகிழப்பண்ணும் என் ரசத்தை நான் விட்டு விட்டு மரங்களை அரசாளபோவேனோ என்றது."(9:13) ஒருவேளை இந்த உவமையில் சொல்லப்பட்ட ஒலிவ மரங்கள் முற்பிதாக்களையும், அத்திமரம் இஸ்ரயேல் ஜாதியையும், திராட்சச்செடி சபையையும் அடையாளப்படுத்தலாம். இப்படியிருக்க, இந்த திராட்சைரசம் "புது உடன்படிக்கையில் இரத்தமாக" இருக்கிறது. இந்த திராட்சைரசம் அதாவது புது உடன்படிக்கையின் இரத்தம், தேவனையும், மனுஷரையும் ஒப்புரவாக்கி மகிழப்பண்ணும். பானபாத்திரக்காரனை மீண்டுமாக பார்வோனுக்கு பணிவிடை செய்ய, கொண்டு சேர்த்தது இந்த திராட்சைரசமே.

**சொப்பணங்க்ள**

தேவன் மனுஷருக்கு தன்னுடைய செய்திகளை "வெவ்வேறு முறைகளில்" வெளிப்படுத்துவதைக் குறித்து எபிரெயரின் புஸ்த்தகத்தின் துவக்கத்தில் வாசிக்கலாம். அவ்வப்பொழுது, அவர் சொல்லர்த்தமான தூதர்களையும், மற்றநேரங்களில் காட்சிகளை கொண்டும், சில நேரங்களில் சொப்பனங்களின் மூலமாகவும் வெளிப்படுத்தி இருக்கிறார். காட்சிகளும், சொப்பனங்களும் ஒரே விதமாக தோன்றினாலும், அவைகளில் அநேக வேறுபாடுகள் உண்டு. ஒருவர் ஆழ்ந்த நித்திரையில் சொப்பனங்கள் காணலாம். அதில் தேவன் தன்னுடைய திட்டங்களை அடையாளமாகவோ, வரைபடங்களாகவோ வெளிப்படுத்தினார். ஆனால் ஒருவர் விழித்திருக்கும் பொழுது அல்லது மெய்மறந்த நிலையில், காணக்கூடியவைகளை காட்சிகள் என்று அழைக்கப்படுகிறது. பெரும்பாலும், காணக்கூடியவர்கள் இதில் பங்குபெறுவார்கள். இன்று போதுவாக பேசப்படும் காட்சிகள், வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளபடாமல் போனாலும், நடைமுறையில் உண்மை என்று ஒப்புகொள்கிறார்கள். ஆதிகாலத்தில், தேவன் தன்னுடைய ஊழியக்காரர்களுடன் பேச இப்படிப்பட்ட முறைகளை பயன்படுத்தினார்.

இந்நாளிலும், இப்படிப்பட்ட காரியங்களை செய்ய தேவனுக்கு வாய்ப்பிருந்தாலும், அவர் சபையோடு சொப்பனங்களின் மூலமாகவும், தரிசனங்களின் மூலமாகவும் பேச வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது. இப்படிப்பட்ட ஒரு பிரமாண்டமான தரிசனத்தை அப்போஸ்தலனாகிய பேதுரு மறுரூப மலையில் கண்டார். இந்த தரிசனத்தை பற்றி அவர் குறிப்பிட்டபின், தேவன் பரிசுத்தவான்களோடு பேசும் விதத்தை பற்றி எடுத்துரைத்தார்-"..அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு, பொழுது விடிந்த விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்." (11பேதுரு 1:19)

வேதாகமம் தொகுக்கப்படும் வரை தேவன் இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட முறைகளில், தன்னுடைய சிந்தனைகளை வெளிப்படுத்தினார். ஆனால் இப்பொழுது, அவரால் கொடுக்கப்பட்ட, அவருடைய ஊக்கமளிக்கும் வார்த்தைகள் அடங்கிய வேதாகமம் நம்மிடம் உண்டு. ஆகவே நாம் சொப்பனங்கள் மற்றும் தரிசனங்களை அல்ல, வேதாகமத்தில் உள்ள தேவனுடைய வார்த்தைகளை தேடுகிறோம். எப்படியிருந்தாலும், வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்ட சொப்பனங்களுக்காகவும், தரிசனங்களுக்காகவும் நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். இவையனைத்திலும், தேவனுடைய சித்தத்தை நாம் கண்டுபிடித்து, அவைகளை செயல்படுத்த முயற்சிப்போம்.



"..வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." - யோவான் 1:51

*ஆதியாகமம் 28 ம் அதிகாரத்தின் வசனவாரியான ஆராய்ச்சி*

# யாக்கோபின் விசுவாசம் சோதிக்கப்ப

யாக்கோபு விரைந்தோடுகையில் அவர் அதிகமான மனகிளர்ச்சியில் இருந்திருக்கவேண்டும். அவர் விரும்பியதை பெற்றுகொண்டார். அவர் கூழுக்காக விலைக்கு வாங்கின சேஷ்ட்டபுத்திர பாகத்தை மட்டும் அல்லாமல், குடும்ப வழியாக வந்த ஆசீர்வாத்தத்தையும் ஏமாற்றி பெற்றுகொண்டார்.

சேஷ்டபுத்திர பாகம் மற்றும் பாரம்பரியமாக வந்த ஆசீர்வாதங்கள் - இரண்டும் வெவ்வேறு காரியங்கள். சேஷ்டபுத்திரபாகம் தற்காலிகமானதும், குடும்ப சொத்துக்களை பெற்றுகொள்ளக்கூடியதாகவும் இருந்தது. நியாயப்பிரமாணத்தின் கீழ் - சேஷ்டபுத்திரபாகத்தை சுதந்தரித்துகொள்பவர்கள், இரட்டிப்பான சொத்துக்களை பெற்றுகொண்டனர். ஆனால் அவர் பெற்றுகொண்ட ஆசீர்வாதம், வம்சவழியாக, பரம்பரியமாக மேசியாவின் முற்பிதாவாகிய ஆபிரகாமின் வழியாக வரக்கக்கூடியதாக இருந்தது.

இந்த ஒரு வேறுபாட்டை பின்வரும் வசனத்தில் காணலாம் - "ரூபன் இஸ்ரயேலுக்கு முதற்பிறந்த சேஷ்டபுத்திரன்,ஆனாலும் அவன் தன் தகப்பனுடைய மஞ்சத்தைத் தீட்டுப்படுத்தினபடியினால், கோத்திரத்து அட்டவணையிலே அவன் முதற் பிறந்தவனாக எண்ணப்படாமல், அவனுடைய சேஷ்டபுத்திர சுதந்தரம் இஸ்ரயேலின் குமாரனாகிய யோசேப்பின் குமாரருக்குக் கொடுக்கப்பட்டது. யூதா தன் சகோதரரிலே பலத்ததினால் ராஜாதிபத்தியம் அவன் சந்ததியில் உண்டானது, ஆகிலும் சேஷ்டபுத்திர சுதந்தரம் யோசேப்புடையதாயிற்று.. "(1நாளா 5:1,2)

யோசேப்புக்கு இரட்டிப்பான நிலப்பகுதி கொடுக்கப்பட்டதால் அவர் உண்மையில் சேஷ்டபுத்திர பாகத்தை பெற்றார் என்பதை காட்டுகிறது. ஏனெனில், அவருடைய இரண்டு குமாரராகிய மனாசேவும், எபிராயீமும் யாக்கோபுக்கு பேரப்பிள்ளைகளாக அல்ல, மாறாக நேரடியான புத்திரர்களாக எண்ணப்பட்டு, நிலப்பகுதிகளை பெற்றுகொண்டார்கள்.

ஈசாக்கு கொடுத்த ஆசீர்வாதங்கள் பின்வரும் வசனத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது - " அவன் கிட்டப் போய், அவனை முத்தஞ்செய்தான், அப்பொழுது அவனுடைய வஸ்திரங்களின் வாசனையை மோந்து - இதோ, என் குமாரனுடைய வாசனை கர்த்தர் ஆசீர்வதித்த வயல்வெளியின் வாசனையைப்போல் இருக்கிறது. தேவன் உனக்கு வானத்துப்பனியையும் பூமியின் கொழுமையையும் கொடுத்து, மிகுந்த தானியத்தையும் திராட்சரசத்தையும் தந்தருளுவாராக. ஜனங்கள் உன்னைச் சேவிக்கவும் ஜாதிகள் உன்னை வணங்கவும் கடவர்கள், உன் சகோதரருக்கு எஜமானாயிருப்பாய், உன் தாயின் பிள்ளைகள் உன்னை வணங்குவார்கள், உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களும், உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களுமாய் இருப்பார்கள் என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தான்." (ஆதியாகமம் 27:27-29)

யாக்கோபுக்கு கொடுக்கப்பட்ட ஆசீர்வாதங்களில், இந்த உலகத்தின் இம்மைக்கான ஆசீர்வாதங்களும் உள்ளடக்கப்பட்டிருப்பதினால், இவர் குடும்பத்தின் தலைவராக இருப்பதை இது உறுதிப்படுத்துகிறது. இதைக் குறித்து வசனம் 29 ல் கவனிக்கவும் - "உன் தாயின் பிள்ளைகள் உன்னை வணங்குவார்கள்" என்று எழுதப்பட்டிருக்கிறது. அவருடைய தாய்க்கு மற்றும் ஒரே ஒரு குமாரன் இருப்பதால், இங்கு "பிள்ளைகள்" என்று பன்மையில் குறிப்பிட்டிருப்பதை பார்க்கும் போது, இது வருங்கால சந்ததிக்கு பொருந்தக்கூடியதாக இருக்கிறது.

**யாக்கோபின் பயணம் ஆதியாகமம் 28 : 1-5**

*ஈசாக்கு யாக்கோபை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, நீ கானானியருடைய குமாரத்திகளில் பெண்கொள்ளாமல், எழுந்து புறப்பட்டு, பதான்*

*அராமிலிருக்கிற உன் தாயினுடைய தகப்பனாகிய பெத்துவேலுடைய வீட்டுக்குப்போய், அவ்விடத்தில் உன் தாயின் சகோதரனாகிய லாபானின் குமாரத்திகளுக்குள் பெண்கொள் என்று அவனுக்குக் கட்டளையிட்டான். சர்வவல்லமையுள்ள தேவன் உன்னை ஆசீர்வதித்து, நீ பல ஜனக்கூட்டாகும்படி உன்னைப் பலுகவும் பெருகவும் பண்ணி, தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்ததும் நீ பரதேசியாய்த் தங்குகிறதுமான தேசத்தை நீ சுதந்தரித்துக்கொள்ளும்படி ஆபிரகாமுக்கு அருளிய ஆசீர்வாதத்தை உனக்கும் உன் சந்ததிக்கும் அருளுவாராக என்று சொல்லி, ஈசாக்கு யாக்கோபை அனுப்பிவிட்டான். அப்பொழுது அவன் பதான் அராமிலிருக்கும் சீரியா தேசத்தானாகிய பெத்துவேலுடைய குமாரனும், தனக்கும் எசாவுக்கும் தாயாகிய ரெபெக்காளின் சகோதரனுமான லாபானிடத்துக்குப் போகப் புறப்பட்டான்.*

யாக்கோபு இந்த பிரயாணத்தை மேற்கொள்ள இரண்டு காரணங்கள் இருந்தது. தன்னுடைய சகோதரனாகிய ஏசாவை ஏமாற்றி ஆசீர்வாதங்களை பெற்றதினால், அவன் ஈசாக்கின் மரணத்திற்கு பின் யாக்கோபை கொல்ல முடிவுசெய்திருந்தான். (ஆதியாகமம் 27:41)இதன் விளைவாக ரெபேக்காள், யாக்கோபை அவ்விடத்தை விட்டு புறப்படும்படி துரிதப்படுத்தினாள். (ஆதியாகமம் 27: 42-44) அடுத்து யாக்கோபு, லாபானின் குமாரத்திகளில் கட்டாயமாக பெண் எடுப்பதற்கு ஈசாக்கிடம் வலியுறுத்தினாள். அவர் அதை ஒரு கட்டளையாக கொடுத்தார். (ஆதியாகமம் 27:43-46)

ஈசாக்கின் மனைவிக்காக, ஆபிரகாமின் ஊழியக்காரன் ஆரானுக்கு சென்ற போது அநேக உச்சிதமான பொருள்களோடு ஒட்டகங்களில் சென்றார்கள், ஆனால் இங்கு யாக்கோபு ஒன்றுமில்லாதவராக அனுப்பப்பட்டார் என்பதை பார்க்கும்பொழுது, யாக்கோபு தன்னை ஏமாற்றியதின் விளைவாக ஏற்பட்ட ஈசாக்கின் கோபம் பிரதிபலிக்கிறது. அப்படியிருந்தும், -"நீ பல ஜனக்கூட்டமாகும்படி உன்னைச் சர்வவல்லமையுள்ள தேவன் பலுகவும் பெருகவும் பண்ணுவார்" என்று ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்தார். மேலும், ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட ஆசீர்வாதமான வாக்களிக்கப்பட்ட சந்ததி யாக்கோபுடையதும், அவருடைய பிறப்புரிமை, ஈசாக்கின் உரிமைகளை மட்டும் சுதந்தரிக்காமல், ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட கானான் தேசம் முழுவதற்கும் சுதந்தரவாளி என்று ஈசாக்கு அங்கு குறிப்பிட்டார். அதாவது மூன்றில் இரண்டு பங்கை மட்டுமே சுதந்திரிக்கவேண்டிய யாக்கோபு, ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட முழு இடத்திற்கும் சுதந்தரவாளியானார்.

ஆகவே யாக்கோபு பெத்துவேலின் குமாரனாகிய லாபான் (மாமன்) வீட்டிற்கு விரைந்தார். லாபான் சீரியாவில் குடியிருந்ததினால் அவர் சிரியா தேசத்தான் என்று அழைக்கப்படுகிறார், மற்றபடி அவர் சீரியா பரம்பரயை சேர்ந்தவர் அல்ல.

**ஏசாவின் மூன்றாவது மனைவி ஆதியாகமம்** 28:6-9

*"ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து, ஒரு பெண்ணைக் கொள்ளும்படி அவனைப் பதான் அராமுக்கு அனுப்பினதையும், அவனை ஆசீர்வதிக்கையில், நீ கானானியருடைய குமாரத்திகளில் பெண்கொள்ளவேண்டாம் என்று அவனுக்கு கட்டளையிட்டதையும், யாக்கோபு தன் தகப்பனுக்கும் தன் தாய்க்கும் கீழ்ப்படிந்து, பதான் அராமுக்குப் புறப்பட்டுப்போனதையும் ஏசா கண்டதினாலும், கானானியருடைய குமாரத்திகள் தன் தகப்பனாகிய ஈசாக்கின் பார்வைக்கு ஆகாதவர்கள் என்பதை ஏசா அறிந்ததினாலும், ஏசா இஸ்மயேலிடத்துக்குப் போய், தனக்கு முன்னிருந்த மனைவிகளுமன்றி, ஆபிரகாமுடைய குமாரனாகிய இஸ்மயேலின் குமாரத்தியும் நேபாயோத்தின் சகோதரியுமாகிய மகலாத்தையும் விவாகம்பண்ணினான்."*

ஏசா பெரும்பாலும் ஒரு வில்லனாக காண்பிக்கப்பட்டாலும், அவன் ஒரு கொடூரமானவனல்ல. ஏனெனில், எபிரெயரின் புத்தகத்தில் ஏசாவை "சீர்கெட்டவன்" (எபி 12:16)என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கான ஆங்கில (profane)வார்த்தைக்கு, ஆலயத்திற்கு புறம்பே என்று பொருள். ஆகவே இன்றை தினத்தில் இவரை மதமற்றவர் என்று கூறலாம்.. அதேசமயம் யாக்கோபு ஆவிக்குரிய விருப்பமுடையவராக இருந்தார்.

ஏசா பயங்கரமான கோபம் கொண்டிருந்தாலும், அவர் கோபம் சீக்கிரத்தில் தணிந்தது.(ஆதி 27:44) ஏனெனில், அவர் விரும்பியதை இழந்திருந்தாலும், அதை முழு மனதோடு விட்டுகொடுத்து விட்டு, தன்னுடைய குடும்பத்தோடு சவக்கடலுக்கு

கிழக்கேயுள்ள பகுதியில் குடியேறினார். அதற்குபின் அது ஏதோம் என்று அழைக்கப்பட்டது.

யூதீத் மற்றும் பஸ்மாத் என்ற இரண்டு மனைவிகளை ஏசா விவாகம்பண்ணினான். இவர்கள் இருவரும் யாக்கோபுக்கும், ரெபேக்காளுக்கும் மனநோவாக இருந்தார்கள் என்று அறிந்ததினாலும், ஈசாக்கு யாக்கோபை தன்னுடைய இனத்தார் மத்தியிலிருந்து பெண் கொள்ளும்படி அனுப்பியதை கண்டதினாலும், ஏசா பெற்றோரின் குடும்பத்திலிருந்து மற்றொரு பெண்ணை விவாகம் செய்தார். ஆனாலும், அவர் லாபானின் குடும்பத்திலிருந்து பெண் கொள்ளாமல், இஸ்மயேல் குடும்பத்திலிருந்து மகலாத் என்ற பெண்ணை விவாகம் செய்தார்.

இது நன்கு யோசித்தபின் எடுக்கப்பட்ட முடிவாக இருந்தாலும், தவறாகிவிட்டது. இவர்கள் இம்மைக்குரிய வாழ்க்கைக்காக - ஒரு வேளை கூழுக்காக - வருங்காலத்தில் பெறபோகிற மகிமையான சொத்தையும், மேசியாவின் இராஜ்யத்தில் கிடைக்கும் தெய்வீக சுபாவத்தையும் இழக்கக்கூடிய கிறிஸ்தவர்களுக்கு அடையாளமாக இருக்கிறார்கள் என்று சகோதரர் ரசல் தன்னுடைய எழுத்துக்களில் குறிப்பிடுகிறார். (Reprints, p.5452) இவர்கள் திரள் கூட்டதாருக்கு அடையாளமாக இருக்கிறார்கள்.

**யாக்கோபின் சொப்பனம் ஆதியாகமம் 28:10-12**

*"யாக்கோபு பெயர்செபாவை விட்டுப் புறப்பட்டு ஆரானுக்குப் போகப் பிரயாணம்பண்ணி, ஒரு இடத்திலே வந்து, சூரியன் அஸ்தமித்தபடியினால், அங்கே ராத்தங்கி, அவ்விடத்துக் கற்களில் ஒன்றை எடுத்து, தன் தலையின்கீழ் வைத்து, அங்கே நித்திரை செய்யும்படி படுத்துக்கொண்டான். அங்கே அவன் ஒரு சொப்பனங்கண்டான், இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது, அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்."*

முதல் நாள் இரவில் இந்த சொப்பனம் காணப்பட்டது என்று இந்த வசனப்பகுதியில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. இது இரண்டாம் இரவு அல்லது மூன்றாம் இரவில் சம்பவித்திருக்கவேண்டும். ஏனெனில், அவருடைய வீட்டிலிருந்து பெயர்செபா கிட்டத்தட்ட எழுபது மைல் தூரத்திலிருந்தது. அந்த இடத்தை பொருத்தவரையில் மக்கள் குடியிராத இடமாக இருந்தது. ஆகையால், நட்சத்திரங்களுக்கு கீழ் தலைக்கு ஒரு கல்லை தலையணையாக வைத்து உறங்கினார். ஒருவேளை இதற்கு முன் மக்கள் அங்கு குடியிருந்து, அதில் இடிந்துபோன வீடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கல்லை யாக்கோபு தலைக்கு வைத்திருக்கலாம்.

அந்த இராத்திரியில் ஒரு நீண்ட ஏணி பூமிக்கும் வானத்திற்கும் இடையில் வைக்கப்பட்டு, அதில் தூதர்கள் ஏறுகிறவர்களாகவும், இறங்குகிறவர்களாகவும் கண்டார். மனம் வேதனையோடு, பயம் நிறைந்த ஒரு போராட்டமான சூழ்நிலையில், யாக்கோபுக்கு இந்த சொப்பனம், மீண்டுமாக ஒரு காரியத்தை உறுதிப்படுத்தக்கூடியதாக இருந்தது.

அவர் பரலோக பிதாவோடு இந்நேரம் வரைக்கும் தொடர்பு துண்டிக்கபடவில்லை என்பதையும் அவர் ஜெபங்கள் கேட்கப்படுவதை தேவன் உறுதிப்படுத்துவதை யாக்கோபு உணர்ந்தார். இது மிக சரியாக இருந்தது.

**சொப்பனத்தின் விளக்கம்**
**ஆதியாகமம் 28:13-15**

*"அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று - நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர், நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும், நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய், உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பிவரப்பண்ணுவேன், நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்."*

யேகோவா தேவன் அந்த ஏணிக்கு மேலாக நின்று - "நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமோடும், ஈசாக்கோடும் தொடர்பு கொண்டவர் நானே" என்றார். யாக்கோபுடன் தேவன் மூன்று வாக்குறுதிகளை கொடுத்தார் -

1. கானான் தேசம் முழுவதையும் யாக்கோபு சுதந்தரிப்பார் என்றும் அவருக்குபின் அவருடைய

சந்ததியார் அதை சுதந்தரிப்பார்கள் என்றும் வாக்களித்தார்.

2. அவருடைய சந்ததி பலுகி, பெருகி பூமியின் தூளைப்போல் பரம்பி அதிலுள்ள முழு குடும்பங்களை ஆசீர்வதிப்பாய் என்றும் வாக்களித்தார். இதே வாக்குறுதியை தேவன் ஆபிரகாமுக்கும் வாக்களித்திருந்தார்.

3. யாக்கோபு கானான் தேசத்தை விட்டு சென்றாலும், அவர் மறுபடியும் வரும்பொழுது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அனைத்தையும் பெற்றுகொள்வார் என்றும் வாக்களித்தார்.

இப்படியாக, அவர் மிகவும் ஆவலாக எதிர்பார்த்த ஆசீர்வாதங்களை பெற்றுகொண்டார் என்பதையும், வரப்போகிற மேசியாவின் முற்பிதாவாக இருக்கக்கூடிய பாக்கியத்தையும்பெற்றார் என்பதையும் யாக்கோபுக்கு உறுதிப்படுத்தப்பட்டது. டைட்டானிக் கப்பல் மூழுகும் போது, இந்த சொப்பனத்தை அடிப்படையாக கொண்டு,"Nearer My God to thee " என்ற பிரபலமான பாமாலை பாடப்பட்டது -

சுற்றி திரியும் நாடோடியை போல் சூரியன் மறைந்து சென்றது,
இருள் என்னை சூழ்ந்தது, ஒரு கல்லின் மேல் என் இளைபாறுதல் தொடர்ந்தது,
ஆனாலும் என் கனவில் நான் தேவனின் அருகாமையில்,
என் தேவனே இன்னும் உம் பக்கத்தில் மிக அருகில்.
பரலோகத்திற்கு நேராக என் பாதை தோன்றற்றும்,
தம் இரக்கத்தினால் அவர் என்னை அனுப்பினார்,
தேவ தூதர்கள் என்னை அரவணைத்து,
என் தேவனிடம் அவர் அருகாமையில் கொண்டு சேர்ப்பார்கள்,
என் தேவனே இன்னும் உம் பக்கத்தில் மிக அருகில்.

**யாக்கோபின் உடனடியானச்செயல் அதியாகமம்** 28:16,17

*"யாக்கோபு நித்திரை தெளிந்த விழித்தபோது - மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார். இதை நான் அறியாதிருந்தேன் என்றான். அவன் பயந்து, இந்த ஸ்தலம் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது, இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல, இது வானத்தின் வாசல் என்றான்."*

யாக்கோபு இப்படிப்பட்ட ஒரு சொப்பனத்தையும், இந்த வனாந்திர பயணத்தில் அங்கு தூங்கும்பொழுதும்,தேவன் அவரோடிருந்தார் என்பதையும் எதிர்பார்க்காததின் காரணமாக மிகவும் ஆச்சரியப்பட்டார். இது அவரை முழுமையான பயபக்திக்குள்ளாகியது. "அவர் பயந்து நடுங்கி - "இது எவ்வளவு பயபக்திக்குரிய இடமாக இருக்கிறது...." என்று யூத அச்சகத்தின் கூட்டுறவு மொழிபெயர்ப்பு கூறுகிறது. அவர் தேவனுடைய ஆலயத்தில் இருந்தது போலவும், அவ்வழி நேராக பிதாவாகிய யேகோவா தேவனிடம் கொண்டு செல்லும் ஏணிக்கு வாசலாகவும் உணர்ந்தார்.

**பெத்தேல் ஆதியாகமம்** 28:18,19

*"அதிகாலையிலே யாக்கோபு எழுந்து, தன் தலையின்கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தி, அதின்மேல் எண்ணெய் வார்த்து, அந்த ஸ்தலத்திற்குப் பெத்தேல் என்று பேரிட்டான், அதற்கு முன்னே அவ்வூருக்கு லூஸ் என்னும் பேர் இருந்தது."*

மறுநாள் காலையில் யாக்கோபு இரண்டு காரியங்களை செய்தார். முதலில் அவர் தலைக்கு வைத்திருந்த கல்லை ஒரு தூணாக நிறுத்தி அதின் மேல் எண்ணெய் வார்த்து அதை பரிசுத்தபடுத்தினார். இரவு முழுவதும் மிக கடினமாக இருந்த அந்த தலையணை, இப்பொழுது ஆறுதலளித்தது. ஏனெனில், இவர் பரலோக சிங்காசனத்தோடு இன்னும் தொடர்புள்ளவராக இருக்கிறார் என்றும், ஆசீர்வாதங்களை ஏமாற்றி வாங்கினாலும், அது அவருடையதாகவே இருக்கிறது என்பதையும் இது அவருக்கு உறுதியளித்தது.

இரண்டாவதாக, அவர் அவ்விடத்திற்கு லூஸ் என்றிருந்த பெயரை பெத்தேல் என்று மாற்றினார். ஐந்து சம்பவங்களில் இந்த பெத்தேல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (ஆதியாகமம் 28:19, 35:6, யோசுவா 16:2, 18:13, நியாயாதிபதி 1:23) லூஸ் மற்றும் பெத்தேலுக்கு இடையில் வேதாகமம் தொடர்பு ஏற்படுத்துகிறது. இதில் ஏதோ முக்கியத்துவம் இருப்பதாக தோன்றுகிறது.

லூஸ் என்பதற்கு "வாதுமை மரம்" என்று பொருள். இப்படிப்பட்ட மரத்தின் அருகில்,இந்த பட்டணம் பூர்வீகமாக கட்டப்பட்டிருக்கவேண்டும். (பெத்தேலில், இந்த வாதுமை மரத்தோடு, ஒரு கருவாலி மரமும் இருந்ததாக குறிப்பிடப்படுகிறது.

இதை (Allonbachuth) அலோன்பாச்சத் என்றழைத்தார்கள். இதற்கு துக்கத்தின் கருவாலி மரம் என்று பொருள். தெபோராள் மற்றும் ராகேலின் பணிவிடைக்காரியின் கல்லறையில் அடையாளத்திற்காக இது வைக்கப்பட்டது.) வனாந்திரத்தில் பயணம் செய்த யூதர்களின் ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள உடன்படிக்கை பெட்டிக்குள் ஒரு வாதுமை கிளை இருந்தது. கோராகு, தாத்தான் மற்றும் அபிராமும் (எண் 16:1)மோசேவை எதிர்த்தபோது, மோசே மற்றம் ஆரோனுக்கு தேவனிடத்திலிருந்து அதிகாரம் கொடுக்கப்பட்டதை காட்டுவதற்கு இந்த வாதுமை கிளை வைக்கப்படடது. ஆரோன் குடும்பத்தாரை ஆசாரிய குடும்பம் என்று தேவனால் தேர்ந்தெடுத்ததை இந்த வாதுமை கிளை அடையாளப்படுத்துகிறது. (லூஸ் என்ற இந்த பட்டணம் பிற்காலத்தில் ஏத்தியரின் தேசத்தில் மீண்டும் நிறுவப்பட்டது -நியாய 1:26 அதற்கு அடுத்துபடியாக- உண்மையில் தேவனுடைய தேர்வு, இஸ்ரயேல் ஜனங்களிடமிருந்து புறஜாதிகளுக்கு சென்றதை இந்த வாதுமை மரம் சித்தரிக்கிறதாக தோன்றுகிறது.)

யாக்கோபு ஒரு வாதுமை மரத்தின் கீழ் சொப்பனம் கண்டார். ஆனால் இயேசு ஒரு அத்திமரத்தின் கீழ் நாத்தானியேலை கண்டார். (யோவான் 1:48) ஒருவர் இதை தலைக்கீழாக எதிர்ப்பார்க்கலாம். ஏனெனில், யாக்கோபு இஸ்ரயேலை அடையாளப்படுத்துவதினால் அவர் அத்திமரத்தின் கீழ் சொப்பனம் கண்டதை தொடர்புப்படுத்தியும், சபைக்குரிய அழைப்பை கொடுப்பதற்கு இயேசு வாதுமை மரத்தின் கீழ் நின்ற நாத்தானியேலை அழைத்திருந்தால் மிக சரியாக பொருந்தியிருக்கும். ஆனால் இப்படியாக காரியங்கள் சம்பவிக்காமல் போனது ஏன்?

இஸ்ரயேலும், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்று நாம் அறிந்ததே. உடன்படிக்கை பெட்டியிலிருந்த அந்த வாதுமை கிளை அதே காரியத்தை அடையாளப்படுத்தாமல் போனாலும், இவர்களும் வாதுமை மரத்தின் கீழிருந்தவர்கள். (உண்மையில், ஆசரிப்புக்கூடாரத்தில் வாதுமை கிளைக்கு வேறொரு எபிரெய வார்த்தை பயன்படுத்தப்பட்டது - எண் 17:8. லூவ்ஸ் (luwz) என்ற வார்த்தைக்கு பதிலாக ஷாக்கிட் (shaqed) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது. பொதுவாக இஸ்ரயேல் ஜனங்கள் தேவனுடைய ஜனங்களாக தேர்வு செய்யப்பட்டதிலும், தன்னுடைய விசேஷித்த சபை ஜனங்களாக தேர்வு செய்யப்படுவதிலும் உள்ள வித்தியாசத்தை இது நமக்கு எடுத்து காட்டுகிறது. ) மீன் பிடிப்பவர்களை மனிதர்களை பிடிப்பவர்களாக படகுகளிலிருந்து அழைக்கப்பட்டது போல், நாத்தானியேல் அத்திமரத்தின் கீழ் ஜெபித்துகொண்டிருந்தபொழுது, கிறிஸ்துவின் சீஷராகும்படி அழைக்கப்பட்டார்.

பல வருடங்களுக்குபின் யாக்கோபு மறுபடியும் கானான் திரும்ப முடிவெடுத்தார். யேகோவா தேவன் அவரை நோக்கி - " நீ தூணுக்கு அபிஷேகஞ்செய்து, எனக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணின பெத்தேலிலே உனக்குத் தரிசனமான தேவன் நானே.. ." (ஆதியாகமம் 31:13) என்றார். அதற்குபின் யாக்கோபு கானானுக்கு திரும்பினார். "... நீ எழுந்து பெத்தேலுக்குப் போய், அங்கே குடியிருந்து, நீ உன் சகோதரனாகிய ஏசாவின் முகத்திற்கு விலகி ஓடிப்போகிறபோது, உனக்குத் தரிசனமான தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்கு.." (ஆதியாகமம் 35:1) என்று தேவன் யாக்கோபுக்கு கட்டளையிட்டார். இப்படியாக, யாக்கோபின் பரிசுத்த பூமியில், பெத்தேல் ஒரு பக்திக்குரிய இடமானது.

**யாக்கோபின் பொருத்தனை**
**ஆதியாகமம்**

*"அப்பொழுது யாக்கோபு - தேவன் என்னோடே இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றி, உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து, என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பிவரப்பண்ணுவாரானால், கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார், நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும், தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லிப் பொருத்தனை பண்ணிக்கொண்டான்."*

யாக்கோபின் விசுவாசம் சற்று குறைவாக இருந்தது. அவர் பெத்தேலில் செய்த பொருத்தனைகள் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருந்தது. அவர் ஐந்து காரியங்களை தேவனுக்கு முன் வைத்தார்.

1. தேவன் என்னோடே இருந்தால்,

2. நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றினால்,

3. உண்ண ஆகாரமும்,

4. உடுக்க வஸ்திரமும் எனக்கு தந்தால்,

5. என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பிவரப்பண்ணுவாரானால்,

**அப்பொழுது, கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார்.**

இந்த நிபந்தனைகள் பூர்த்தியடைந்தால், பிதாவாகிய யேகோவா தேவனை தன்னுடைய தேவனாக ஏற்றுகொள்வது மட்டும் அல்ல, தனக்கு உண்டானவைகளில் அனைத்திலும் தசமபாகம் செலுத்துவேன் என்று பொருத்தனை பண்ணினார்.

அநேக கிறிஸ்தவர்கள் போல, யாக்கோபும் வேலைகளை தொடர்ந்து செய்துகொண்டிருந்தார். ஏனெனில், கிறிஸ்தவர்கள் எந்த ஒரு வேலையையும் வலுவாக துவங்குவதில்லை. இந்த பாதையில் அவர்கள் பெறும் அனுபவங்களின் மூலமே அவர்கள் வளர்ச்சியடைகிறார்கள். "இயேசு அவனை நோக்கி - நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார். உடனே பிள்ளையின் தகப்பன் - விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான்." (மாற் 9:23,24) இயேசுவின் சீஷர்கள் குணப்படுத்த முடியாத அந்த பிள்ளையின் தகப்பனை போல துவக்கத்தில் அனைவரும் இருப்பார்கள்.

யாக்கோபு பெத்தேலில் இருந்தது போலவும், பிசாசுபிடித்தவனுடைய தகப்பனை போலவும், அநேக சமயங்களில், விசுவாசம் மற்றும் அவிசுவாசத்தின் கலவைகளை நாம் காணலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு கிறிஸ்தவன் நம்பிக்கை குறைவுள்ளவனாக காணப்படுகிறான். விசுவாசம் என்பது வளர்ச்சிக்குரியதாக இருக்கிறதே தவிற அது ஒரே நொடியில் பெறக்கூடியதல்ல என்பதை முதலில் அவர் உணரவேண்டும். வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு சின்ன சின்ன சம்பவங்களை மேற்கொள்வதை காண்பதின் மூலமாக இது வளர்ச்சியடையும்.

யாக்கோபின் முழு வாழ்க்கையில் இது செயல்முறைப்படுத்தப்பட்டது. அந்த ஆசீர்வாதத்தை பெற தன்னுடைய தகப்பனை அவர் ஏமாற்றினார். அதே சமயம் தன்னுடைய இளைய குமாரத்தி ராகேலை விவாகம் செய்து கொடுப்பதாக சொல்லி மூத்த குமாரத்தி லேயாளை கொடுத்ததினால், யாக்கோபு லாபானால் ஏமாற்றப்பட்டார். அதற்குபின் ஆடுகள் மேய்க்கும் காரியத்தில் யாக்கோபு லாபானை ஏமாற்றினார். அடுத்து, பாரம்பரியமாக வைக்கப்பட்டிருந்த விக்கிரகங்களை ராகேல் எடுத்து வர யாக்கோபும் உடைந்தையாக இருந்திருக்கலாம். அனைத்தையும் மனப்பூர்வமாக ஏசா தனக்கு கொடுத்துவிட்டார் என்பதை அறிந்துகொள்ளும் வரைக்கும், பயத்தினாலும், திகிலினாலும், ஏசாவோடு ஒப்புரவாகிக்கொள்ள முயற்சித்தார். ஆனால் ஏசா - "...எதிர்கொண்டு ஓடிவந்து, அவனைத் தழுவி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான், இருவரும் அழுதார்கள்." (ஆதியாகமம் 33:4) அநேக முறை, ஏசா யாக்கோபை விட மேன்மையானவர் என்று நிரூபித்தார். எப்படியிருந்தாலும், சேஷ்டபுத்திரபாகத்திற்கும், பாரம்பரியமாக வந்த ஆசீர்வாதங்களுக்கும் யாக்கோபு சுதந்தரவாளியானார்.

**இயேசு மற்றும் ஏணி**

யோவான் 1:51 ம் வசனத்தில் இயேசு யாக்கோபின் சொப்பனத்தோடு தன்னை சம்மந்தப்படுத்துகிறார் - "பின்னும் அவர் அவனை நோக்கி - வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். " தேவனிடம் செல்லும் வழியாக இருந்த "பெத்தேல்" நம்முடைய ஆண்டவராகிய இயேசு. நாத்தானியேலை போல இயேசுவின் மூலம் தேவனிடம் சேருவதற்கு இன்று நாம் நம்பிக்கை பெற்றிருக்கிறோம். "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்."(யோவான் 14 :14) கிறிஸ்தவர்களுக்கு எவ்வளவு அற்புதமான வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது

ஆகவே நம்முடைய வாழ்க்கையில் ஜெபம் ஒரு முக்கியமான பகுதியாக இருப்பதற்கு இன்று நாம் பொருத்தனை செய்து கொள்வோம், ஏனெனில், பூமிக்கும் வானத்திற்கும் இடையில் உள்ள நம்முடைய யாக்கோபின் ஏணி அந்த ஜெபமே.



# நேபுகாத்நேச்சாரின் சொப்பனம்

நேபுகாத்நேச்சார் ராஜ்யபாரம்பண்ணும் இரண்டாம் வருஷத்திலே நேபுகாத்நேச்சார் சொப்பனங்களைக் கண்டான், அதினால் அவனுடைய ஆவி கலங்கி, அவனுடைய நித்திரை கலைந்தது - தானியேல் 2:1

Jeff Mezera

**ம**னிதனோடு தொடர்பு கொள்வதற்காக தேவன் சொப்பனங்களை பயன்படுத்தினாலும், இவைகள் வசனங்களில் அபூர்வமாக இருக்கிறது. தேவன் அவருடைய விசுவாசமான மனிதர்களான யோசேப்பு மற்றும் யாக்கோபு போன்றவர்களுக்கே சொப்பனங்களை கொடுத்தார். ஆனால் சில நேரங்களில் அவரோடு தொடர்பு வைத்திராதவர்களுக்கும் அவர் சொப்பனங்களை கொடுத்தார் - அபிமலேக்கு (எகிப்தின் பார்வோன்) மற்றும் பாபிலோனின் இராஜா. "பாபிலோனியர்கள் அதிகமாக சொப்பனங்களில் நம்பிக்கை வைத்ததினால், அவர்கள் சில முக்கியமான முடிவுகளை எடுக்கும் தருணங்களில், சொப்பனங்களின் மூலம் ஆலோசனை பெறுவதற்கு ஆலயங்களில் உறங்குவது வழக்கமாக இருந்தது" - (Harper's Bible Dictionary).

இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தான் கண்ட சொப்பனத்தை அறிவிக்காமல், அதன் விளக்கத்தை தன்னுடைய அரண்மனையிலிருக்கும் ஞானிகள் அறிவிக்கவேண்டும் என்று எதிர்பார்த்தார். இவர்கள் இதை சொல்லாவிட்டால் மரணமே தண்டனையாக தீர்ப்பளித்திருந்தார். "என்னிடத்திலிருந்து பிறக்கிற தீர்மானம் என்னவென்றால்.... துண்டித்துப்போடப்படுவீர்கள்...." (தானியேல் 2:5) இராஜா சொப்பனத்தை மறந்ததினால் இவ்வாறாக சொன்னார் என்று கருதப்படுகிறது. "இந்த தீர்மானம் உறுதியானது.." என்று புதிய மொழிபெயர்ப்பில் வாசிக்கலாம்.

அவர் ஒருவேளை அந்த சொப்பனத்தை மறந்திருந்தால், அர்த்தம் சொல்லக்கூடியவர்கள் அப்படிப்பட்ட ஏதோ ஒரு சொப்பனத்திற்கு விளக்கம் சொல்லியிருக்கலாம். ஆகவே இவர்களை சோதிக்கும்படியாகவும் இராஜா இப்படிப்பட்ட காரியத்தை அறிவித்திருக்கலாம். ஒருவர் சொப்பனத்தை கேட்காமல் அதன் அர்த்தத்தை விளக்குவதற்கு நிச்சயமாகவே இயற்கை விதிகளுக்கு அப்பாற்ப்பட்ட சக்தி செயலாற்றவேண்டும். அந்த சொப்பனம் சீக்கிரத்தில் அர்த்தம் சொல்லப்படமல் போனால் அந்த சொப்பனத்தின் மூலம் சொல்லப்பட்டவைகள் நடந்துவிடுமோ என்று இராஜா அஞ்சினார்.

பொன்னான தலையும், வெள்ளி மார்பகமும், வெண்கல தொடைகளும், இரும்பு கால்களும், இரும்பு மற்றும் களிமண் கலந்த பாதகங்ளும் விரல்களும் கொண்ட ஒரு மிக பெரிய மனித உருவம், ஒன்று அந்த சொப்பனத்தில் காணப்பட்டது. கைகளால் பெயர்க்கமுடியாத ஒரு கல் பெயர்ந்து பெலவீனமான அதன் பாதங்களை மோதி, அந்த சிலை முழுவதையும் நொறுக்கியது. அதற்குபின் அந்த கல் வளர்ந்து ஒரு பர்வதமாகி பூமி முழுவதும் நிரப்பியது.

இயல்பான சூழ்நிலைகளிலும் இந்த சொப்பனத்தை விளக்குவது சற்று கடினாக இருந்தாலும், அதனுடைய உட்பொருளை தேவன் தானியேலிடம் அறிவித்தார். "மறைபொருள்களை வெளிப்படுத்துகிற பரலோகத்திலிருக்கிற தேவன் கடைசிநாட்களில் சம்பவிப்பதை ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்குத் தெரிவித்திருக்கிறார்." (தானியேல் 2:28) நேபுகாத்நேச்சார் அந்த பொன்னான தலையாக இருந்தார். (வசனம் 38) மேலும் "பரலோகத்தின் தேவன் உமக்கு ராஜரீகத்தையும் பராக்கிரமத்தையும் வல்லமையையும் மகிமையையும் அருளினார்" (வசனம் - 37)

அந்த தீர்க்கதரிசனமான சொப்பனத்தில் நேபுகாத்நேச்சார் உட்பட்டிருந்தாலும் - "உமக்குப்பிறகு உமக்குக் கீழ்த்தரமான வேறொரு ராஜ்யம் தோன்றும், பின்பு பூமியையெல்லாம் ஆண்டுகொள்ளும் வெண்கலமான மூன்றாம் ராஜ்யம் ஒன்று எழும்பும்" (வசனம் 39) என்று தானியேல் அறிவித்தார். இஸ்ரயேலின் மேலும், இந்த முழு உலகத்தின் மேலும், ஆட்சி செய்யக்கூடிய இராஜ்யங்களை குறித்து இந்த தீர்க்கதரிசனம் வெளிப்படுத்தியிருப்பது தெளிவாகிறது. அந்த சிலையிலுள்ள பொன் பாபிலோன் இராஜ்யத்தை அடையாளப்படுத்தியது.

அந்த சிலையிலிருக்கும் ஒரே தலை பாபிலோன் சாம்ராஜ்யத்தின் ஒற்றுமையையும், ஒருங்கிணைப்பையும் எடுத்துகாட்டுகிறது. இந்த சாம்ராஜ்யத்தை ஒரே ஒரு மன்னன் ஆண்டு வந்தார். வரலாற்றில் பார்க்கும்பொழுது, விஞ்ஞானம் மற்றும் கலைத்திறன்களுக்கு பேர்பெற்றதாக இருந்தது. மேலும், அதனுடைய தொங்கும் தோட்டம் பழைய

உலகத்தின் ஏழு அதிசயங்களில் ஒன்றாக இருந்தது. இந்த சாம்ராஜ்யத்தை "பொன்னான நகரம்" என்றழைத்தார்கள்.

**மேதியர்களும் பெர்சியர்களும்**

பாபிலோன் இராஜ்யத்தை மேற்கொள்ளும் இராஜ்யத்தைக் குறித்து சொல்லும் பொழுது -"..உன் ராஜ்யம் பிரிக்கப்பட்டு, மேதியருக்கும் பெர்சியருக்கும் கொடுக்கப்பட்டது .."(தானி 5:28) என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. "அன்று இராத்திரியிலே கல்தேயரின் ராஜாவாகிய பெல்ஷாத்சார் கொலைசெய்யப்பட்டான். மேதியனாகிய தரியு தன் அறுபத்திரண்டாம் வயதில் ராஜ்யத்தைக் கட்டிக்கொண்டான். " (30, 31)இந்த இராஜ்யத்தின் பின்வரும் இராஜ்யங்களை குறித்து காபிரியேல் தானியேலிடம் சொல்லும் பொழுது - "நீ கண்ட இரண்டு கொம்புள்ள ஆட்டுக்கடா மேதியா பெர்சியா தேசங்களின் ராஜாக்கள்... "(தானி 8:20) என்றார்.

இந்த இராஜ்யம் மார்பகத்தையும், இரண்டு கைகளுக்கும் ஒப்பிடப்பட்டது. இந்த இரண்டு கரங்களும் மேதோ-பெர்சியாவின் இரண்டு பகுதிகளை காட்டுகிறது. தானியேல் 8:3 ம் வசனத்தில், ஆட்டுக்கடாவின் ஒரு கொம்பு மற்றொன்றை விட உயரமாக இருக்கும் இந்த காரியம், மேதியர்கள், பெர்சியர்களை விட வல்லமையுள்ளவர்கள் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

பொன்னை விட சற்று தரம் குறைவான உலோகமான வெள்ளியினால் இந்த பகுதியிருந்தது. ஆனால் மேதோ - பெர்சியா இருவரும் இணைந்து மிக வல்லமையாக ஆட்சி புரிந்தார்கள். பாபிலோனியர்கள் விஞ்ஞானத்திற்கும், வான சாஸ்திரங்களுக்கும் பேர்பெற்றவர்களாக இருந்தார்கள். ஆனால் பெர்சியர்களுக்கு இது ஒத்து போகவில்லை. தங்களுடைய முதற்பதவியாளரை விட மேன்மையான இருக்கவேண்டும் என்ற பேராசை இருந்தாலும், அனைத்து துறைகளிலும் அவர்கள் சற்று குறைவாக தான் இருந்தார்கள். மற்ற தலைவர்களுக்கு கணக்குகொடுக்க வேண்டியிருந்ததினால், இதன் ராஜாக்கள் தங்கள் விருப்பத்தின்படி ஏதும் செய்ய இயலாது. பெர்சியாவில் அதற்கு பின்வந்த அரசர்கள் தங்களுடைய சொத்துக்கள் மற்றும் மேன்மையான நிலையை இழந்தும் கூட பாபிலோனை போல் ஒருங்கிணைப்பை அவர்களால் ஏற்படுத்த முடியவில்லை. இவர்கள் கிரேக்கராகிய மகா அலெக்சான்டரின் படைகளின் கரங்களில் விழுந்து போனதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கும். அடுத்து தொலைவிலிருக்கும் படைகளை ஜெயிக்க, பெர்சியர்கள் சிறைபிடித்த படைவீரர்களை பயன்படுத்தி போரிட்டனர். இப்படியாக ஏற்பட்ட முதல் பெரிய இழப்பிற்கு பின் ஒரு நிலைகுழைவு ஏற்பட்டது.

**கிரேக்கம்**

வெண்கலத்தினாலான மூன்றாவது இராஜ்யம் இந்த பூமியை ஆட்சி செய்யும் என்று தானியேல் குறிப்பிட்டார். (தானி 2:39) இந்த இராஜ்யத்தை கிரேக்கம் என்று காபிரியேல்அடையாளம் காட்டினார். (தானி 8:21) மேதோ- பெர்சியர்கள் ஆக்கிரமித்த அதே தேசங்களை மகா அலெக்சாண்டரும் கைப்பற்றினார். அலெக்சாண்டரின் கீழ் ஒரே இராஜ்யமாக செயல்பட்டது. ஆனால் அவருடைய மரணத்திற்கு பின் அந்த இராஜ்யம் நான்கு பாகங்களாக நான்கு தளபதிகள் தங்களுக்குள் பிரித்துகொண்டார்கள்.

தானியேலின் நாட்களில் கிரேக்கத்தில் அநேக தனி இனங்கள் இருந்தன. இவைகள் ஒரு தேசமாக ஒன்று கூடவில்லை. மூன்றாவதாக மேற்கொண்ட கிரேக்க சாம்ராஜ்யத்தின் பெயர், சில நூற்றாண்டுகளுக்கு முன், தெய்வீக வெளிப்பாட்டினால் கண்டறியப்பட்டது.

(Yavaniy) யாவானி (ஸ்டிராங்க்ஸ் -3125) என்ற எபிரெய வார்த்தை (Yavan) யாவான் அல்லது (Javan) ஜாவானிலிருந்து (ஸ்டிராங்க்ஸ் - 3120) எடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது. இவர்கள் கிரேக்கரின் மூதாதையர்கள். இவர்களை அடையாளம் கண்டு கொள்வதற்கு (அவர்களுடைய மூதாதையர்களின் பெயரை அல்ல) இப்பொழுது இருக்கும் அவர்களின் பெயர்களின்படியே அழைக்கப்படுகிறார்கள். எடுத்துக்காட்டாக - கிரேக்கர்கள் என்ற பெயர் வருமுன் யோவேல் 3:6 ம் வசனத்தில் கிரேக்கர்கள் என்ற பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த சிலையின் "வயிறு", அலெக்சாண்டரின் ஐசுவரியத்தையும், சுகபோகமான வாழ்க்கையையும், மதுபானத்தையும், மாம்சத்தின் விருப்பங்களையும் மிக துல்லியமாக விவரிக்கிறது.

பொன், வெள்ளியை காட்டிலும், தரம் குறைவான செம்பினால், வயிறும், தொடைகளும் (பொதுவாக வெண்கலம் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது - ஸ்டிராங்க்ஸ் - 5174 ) செய்யப்பட்டிருந்தது. அந்த இரண்டு தொடைகளும், அவருடைய பிரதான வாரிசுகளான, சீரியாவின் இராஜா செலுசிடா மற்றும் எகிப்தின் இராஜா லாஜிடாவையும் குறிப்பிடலாம். அலக்சான்டர் தன்னை "இந்த உலகத்தின் சக்கரவர்த்தி" யாக காண்பித்தான். "...பூமியெயெல்லாம் ஆண்டுகொள்ளும் வெண்கலமான மூன்றாம் ராஜ்யம் ஒன்று எழும்பும்.." (தானியேல் 2:39) என்று தீர்க்கதரிசனம் குறிப்பிடுகிறது.

ஆட்டுக்கடாவின் கண்களுக்கு இடையிலிருக்கும் ஒரு கொம்பு இதே இராஜ்யத்தை அடையாளப்படுத்துகிறது. அந்த கொம்பு வல்லமையோடு வளர்ந்துகொண்டிருக்கையில், அது உடைந்துபோனது. மகா அலெக்சாண்டர் தன்னுடைய 33ம் வயதில் மரித்துபோனதை இது எடுத்துக்காட்டுகிறது.

செம்பு மிக உறுதியான உலோகமாக இருந்தாலும், அது இரும்பை போல மற்ற உலோகங்களை அடிக்கபயன்படுத்தமுடியாது. அந்த சிலையில் இது மட்டுமே மிக உறுதியான உலோகமாக இருந்தது.

**நான்காவுத மிருகம்**

கிரேக்க சாம்ராஜ்யத்திற்கு பின்வந்த ராஜ்யத்திற்கு தானியேல் பெயரிடாமலிருந்தாலும், அதை அடையாளம் கண்டுகொள்ள சில துருப்புக்களை கொடுக்கிறார். தானியேல் ஏழாம் அதிகாரத்தில் - "..மற்றவைகளையெல்லாம் பார்க்கிலும் வேற்றுருவும் கெடியுமுள்ளதுமாய், இரும்புப் பற்களும், வெண்கல நகங்களுமுடையதாய் நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டதுமாயிருந்த நாலாம் மிருகத்தைக்குறித்தும்..." (தானியேல் 7:19) என்றெழுதப்பட்டிருக்கிறது. "இரும்பு" என்ற வார்த்தை அதன் உறுதிக்கும், இதுவரைக்கும் இருந்த ராஜ்யங்களை விட மிக பயங்கரமானதாக இருக்கும் என்று காட்டுகிறது. கொல்லனுடைய பட்டரை கல்லுக்கும், சம்மட்டிக்கும் இது பயன்படுத்தப்பட்டது.

மேசியா சங்கரிக்கப்படுவார், எருசலேம் பாழாக்கப்படும் என்று தானியேல் 9 ம் அதிகாரம் குறிப்பிடுகிறது. (தானியேல் 9:24-27) அப்போது ரோம சாம்ராஜ்யம் நடந்துகொண்டிருந்தது. இதுவே இஸ்ரயேலை அடுத்த ஆட்சி செய்ய வந்த ராஜ்யமாகும். அலெக்சாண்டரின் மரணத்திற்கு சுமார் நூறு வருடங்களுக்கு பின் அனைத்து பிரிவுகளும் ரோமர்களிடம் சரனடைந்தது. ரோம சாம்ராஜ்யம் அதனுடைய அனைத்து எதிரிகளையும் மிதித்து நசுக்கி போட்டது. ரோமர்களால் கைப்பற்றப்பட்ட தேசங்கள், முழுமையாக சரணடைந்தது. மற்ற தேசங்களை திட்டமிட்டு சூறையாடி, அவர்களை முழுமையாக ஆண்டு கொள்வதே ரோம ராஜ்யத்தின் முக்கிய நோக்கமாயிருந்தது.

இரண்டு கைகள் மேதோ - பெர்சியாவின் இரண்டு பகுதிகளை அடையாளப்படுத்தினது போல, இரண்டு கால்களும் ரோம ராஜ்யத்தின் கிழக்கு பகுதியையும் (பைசான்டியம் அல்லது கான்ஸ்ட்டான்டினோபோல்) மேற்கு பகுதியையும் (ரோமாபுரியை தன்னுடைய தலைநகராக கொண்ட ) அடையாளப்படுத்துகிறது. அதற்கு பின் பத்து பிரிவுகளாக பிரிந்த ரோம ராஜ்யம் அந்த பத்து விரல்களை அடையாளப்படுத்தியது.

**பாதங்களும் மற்றும் களிமண் விரல்கள்**

தீர்க்கதரிசனத்தை தொடர்ந்து வாசித்தால் - "பாதங்களும் கால்விரல்களும் பாதி குயவனின் களிமண்ணும், பாதி இரும்புமாயிருக்க நீர் கண்டீரே, அந்த ராஜ்யம் பிரிக்கப்படும், ஆகிலும் களிமண்ணோடே இரும்பு கலந்திருக்க நீர் கண்டபடியே இரும்பினுடைய உறுதியில் கொஞ்சம் அதிலே இருக்கும். " (தானியேல் 2:41)

இரும்பு மற்றும் களிமண் கலந்து அடையாளம் காட்டப்பட்ட இறுதியான ஆட்சியின், அடித்தளம் வலுவற்றிருந்ததை காட்டுகிறது. களிமண் கல்லின் ஒத்ததன்மை கொண்டது. கிறிஸ்துவின் ராஜ்யமாக இருக்கக்கூடிய அந்த கல், ஒரு "மாதிரியான ராஜ்யத்தை" அடையாளப்படுத்துகிறதினால் அந்த சிலையை மோதின கல் அதை முமையாக நொறுக்கியது. "என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யமாக" ஸ்தாபிக்கப்படக்கூடிய ராஜ்யத்தை - கையால் பெயர்க்கப்படாத கல் என்று தானியேல் குறிப்பிடுகிறார்.

பாதங்களை அடையாளப்படுத்தும் இராஜ்யம், ரோம சாம்ராஜ்யத்தை விட்டு எவ்வாறாக வெளிவரும் என்று இரும்பு மிக தெளிவாக எடுத்துகாட்டுகிறது. அது களிமண்ணோடே கலந்திருந்தது. அதாவது சபை மற்றும் அரசாங்கம் இணைந்து செயல்படக்கூடியதாக இருந்தது. களிமண் ஈரமாக இருக்கும் பொழுது, மென்மையாகவும், அது காய்ந்து சுடப்பட்டபின் மிக எளிதில் உடையக்கூடிய தன்மையை பெறுவது போல, இந்த "ராஜ்யத்தின்" துணிவான கோரிக்கைகள் அனைத்தும் வலுவற்றிருந்தது.

இந்த ரோம சாம்ராஜ்யம் காலப்போக்கில் "பரிசுத்த ரோம சாம்ராஜ்யமானது. அதே சமயம் தனிபிரிவுகளாக இருந்தவைகள் ஒருங்கிணைப்பை தக்கவைத்துகொள்ள முயற்சித்தபோது அது கூடாமல் போனது ஏனெனில் - " அவர்கள் மற்ற மனுஷரோடே சம்பந்தங்கலப்பார்கள், ஆகிலும், இதோ, களிமண்ணோடே இரும்பு கலவாததுபோல அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக்கொள்ளாதிருப்பார்கள்." - (தானியேல் 2:43)என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருந்தது. ஐரோப்பிய நாடுகளின் மத்தியில் நடந்த கலப்பு திருமணங்கள், ஆட்சியாளர்களின் வல்லமைகளை தக்கவைத்துகொள்வதற்காகவும், ரோமாபுரியோடு

நல்லுறவு ஏற்படுத்துவதற்காகவும் நடத்தப்பட்டது. ஆனால், இறுதியில் ஆளுனர்கள் மத்தியல், தெய்வீக உரிமைகளுக்காக மிக பெரிய புரட்சி ஏற்பட்டது. உண்மையில், இது ஒரு வலுவற்ற நிர்வாகமாக இருந்தது.

இந்த தீர்க்கதரிசனத்தின் முடிவு கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கு நம்மை வழிநடத்தும், அப்பொழுது -"பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார் - (தானியேல் 2:44)

**தானயேல் 7**

தானியேல் 7ம் அதிகாரத்தில் இதே நான்கு ராஜ்யங்கள் தோன்றினாலும், மிருகங்களை போல் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது - சிங்கம், கரடி, சிவிங்கி, பயங்கரமான மிருகம். இதற்கு முந்தைய அதிகாரங்களில் தானியேல் மற்றவர்களின் சொப்பனத்திற்கு விளக்கமளித்தார். இங்கு தானியேல் ஒரு சொப்பனம் கண்டார், அதை ஒரு தூதன் அவருக்கு விளக்கினார். "அந்த நாலு பெரிய மிருகங்களும் பூமியிலிருந்து எழும்புகிற நாலு ராஜாக்கள்" என்று அவருக்கு அறிவிக்கப்பட்டது. (தானியேல் 7:17)இந்த நாலு இராஜாக்களும், நான்கு ராஜ்யங்களை அடையாளப்படுத்துகிறார்கள்.

இந்த சொப்பனத்தில் அந்த நாலு மிருகங்களும் சமுத்திரத்திலிருந்து ஏறி வந்தது. முதலில் சிங்கத்திற்கு ஒப்பான மிருகம் வந்தது. தங்களை அடையாளப்படுத்திகொள்ள பாபிலோனியர்கள் சிங்கத்தை சிறகுகளோடு வரைவது வழக்கமாக இருந்தது. நேபுகாத்நேச்சார் நேரடியாக சிங்கம் என்று நெகேமியா 4:7 ம் வசனத்தில் அழைக்கப்பட்டிருக்கிறார். அந்த சிறகுகள் பிடுங்கப்பட்டு, ஒரு மனிதனை போல தரையில் நிறுத்தப்பட்டது. நேபுகாத்நேச்சார் அந்த ஏழு வருடங்கள் மிருகத்தை போல் வாழ்ந்த பின் தன்னுடைய நிலையை உணர்ந்து, தேவனிடம் தன்னை தாழ்த்தி, மனித நிலைக்கு வந்த காரியங்களை இது அடையாளப்படுத்துகிறது - "மனுஷ இருதயம் அதற்குக் கொடுக்கப்பட்டது." - (தானியேல் 7: 4)

அடுத்து கரடிக்கு ஒப்பான மிருகம் ஒரு பக்கமாய்ச் சாய்ந்துநின்று, தன் வாயின் பற்களுக்குள்ளே மூன்று விலாவெலும்புகளைக் கவ்விக்கொண்டிருந்தது. இது மேதோ-பெர்சிய பேரரசாக இருந்தது. ஒரு பக்கமாய்ச் சாய்ந்துநின்று, தன்னுடைய ஒரு பக்கத்தை விட மற்ற பக்கம் வலுவாக இருப்பதை காட்டியது. முந்தைய சொப்பனத்தில் ஒரு கொம்பு மற்றொரு கொம்பை விட உயரமாக இருந்த காரியமும் இதே காரியத்தை வலியுறுத்துகிறது. தன் வாயின் பற்களுக்குள்ளே இருந்த மூன்று விலாவெலும்புகள், ஒப்புயர்வற்ற நிலைக்கு தங்களை உயர்த்தி கொள்வதற்காக மேதோ - பெர்சிய தேசங்கள் சிறைபிடித்த - பாபிலோன், லிதியா மற்றும் எகிப்து என்று சர் ஐசக்கு நியூட்டன் கருதுகிறார்.

மூன்றாம் மிருகம் சிவிங்கியைப்போல், முதுகின்மேல் பட்சியின் செட்டைகளை போல் நாலு செட்டைகளும், நாலு தலைகளும் இருந்தது. அதற்கு ஆளுகை அளிக்கப்பட்டது.(தானியேல் 7- 6) சிங்கத்திற்கு ஒப்பான மிருகத்திற்கு இரண்டு செட்டைகள் இருந்தன, ஆனால், இந்த மிருகத்திற்கு நாலு செட்டைகள் இருந்தது. சிவங்கி வேகத்திற்கு பேர்பெற்ற மிருகமாகும். பெர்சியாவை விட மிக வேகமாக கிரேக்க இராஜ்யம் மகா அலெக்சாண்டரின் தலைமையில் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனையை கைப்பற்றி சென்றதை இது காட்டுகிறது. மகா அலெக்சாண்டரின் மரணத்திற்கு பிறகு அந்த இராஜ்யம் நாலு பிரிவுகளாக பிரிக்கப்பட்டதை நாலு தலைகள் அடையாளப்படுத்தியது.

கடைசி மிருகம் பயங்கரமும், மகா கெடியுமாயிருந்தது. முந்தைய சொப்பனத்தில் அந்த சிலையின் கால்களும், பத்து விரல்கள் இருந்தது போல இந்த மிருகத்திற்கு இரும்பு பற்கள் இருந்தன. அந்த நாலு கொம்புகள், யூத தேசத்தை சிதறடித்து நாசம் செய்த நாலு ராஜ்யங்கள் என்று சகரியா 1:18 ம் வசனம் விவரிக்கிறது. இந்த பத்து கொம்புகளும் அந்த மிருகத்திலிருந்து முளைத்தது - ரோம ராஜ்யம்.

**ஒரு மரம் வெட்டப்பட்டது**

"ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பூமி எங்கும் குடியிருக்கிற சகல ஜனத்தாருக்கும் ஜாதியாருக்கும் பாஷைக்காரருக்கும் எழுதுகிறது என்னவென்றால்.... நேபுகாத்தேநச்சாராகிய நான் என் வீட்டிலே சவுக்கியமுள்ளவனாயிருந்து என் அரண்மணையிலே வாழ்ந்துகொண்டிருந்தேன். நான் ஒரு சொப்பனத்தைக் கண்டேன், அது எனக்கு திகிலை உண்டாக்கிற்று, என் படுக்கையின்மேல் எனக்குள் உண்டான நினைவுகளும், என் தலையில் தோன்றின தரிசனங்களும் என்னைக் கலங்கப்பண்ணிற்று." - (தானியேல் 4:1,4,5)

மிக உயரமான ஒரு விருட்சம், தேசத்தின் எல்லைபரியந்தமும் காணப்படத்தக்கதாக அதின் உயரம் வானபரியந்தம் எட்டினது, அதன் மிகுதியான கனிகள் அனைவரையும் போஷித்தது. ஆனால் பரிசுத்தவானாகிய ஒருவன் வானத்திலிருந்து இறங்கி

அந்த மரத்தை வெட்டி, அதின் கொப்புகளைத் தறித்துப்போட்டு, அதின் இலைகளை உதிர்த்து, அதன் கனிகளைச் சிதறடித்தான். இரும்பும் வெண்கலமுமான விலங்கு அதின் வேர்களாகிய அடிமரத்திற்கு இடப்பட்டது. அந்த சொப்பனத்தில் மரமாக காணப்பட்ட அந்த அடையாளம் ஒரு மனிதனாக மாறியது. "அவனுடைய இருதயம் மனுஷ இருதயமாயிராமல் மாறும்படி மிருக இருதயம் அவனுக்குக் கொடுக்கப்படக்கடவது, இப்படியிருக்கிற அவன்மேல் ஏழு காலங்கள் கடந்துபோகவேண்டும்." -(தானியேல் 4:16)

இந்த சொப்பனம் பாபிலோனிய மொழியில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இது நேபுகாத்நேச்சாரின் ஆளுகையின் இறுதியில் நடந்திருக்கவேண்டும். ஏனெனில், இதற்கு பின் நாம் இவரைப் பற்றி நாம் எங்கும் வாசிப்பதில்லை. இந்த சொப்பனத்தை கேட்ட தானியேல் மிகவும் திகைத்துச் சிந்தித்துக் கலங்கினார். ஆனாலும், அந்த துர்செய்தியை அவர் சொல்லவேண்டியதாக இருந்தது - "அது பெரியவரும் பலத்தவருமாயிருக்கிற ராஜாவாகிய நீர்தாமே, உமது மகத்துவம் பெருகி வானபரியந்தமும், உமது கர்த்தத்துவம் பூமியின் எல்லைபரியந்தமும் எட்டியிருக்கிறது." (தானியேல் 4:22)

ஏழு வருடங்கள் ஒரு மிருகத்தைபோல் வாழ செய்து, பிதாவாகிய யேகோவா தேவன் தாமே இவையனைத்தையும் தந்திருக்கிறார் என்று உணரும் வரைக்கும் தேவன் அவரை தண்டித்தார். அந்த காலத்திற்கு பின் அவருடைய நினைவு அவருக்கு திரும்பியது - "அந்த நாட்கள் சென்றபின்பு, நேபுகாத்நேச்சாராகிய நான் என் கண்களை வானத்துக்கு ஏறெடுத்தேன், என் புத்தி எனக்குத் திரும்பிவந்தது, அப்பொழுது நான் உன்னதமானவரை ஸ்தோத்தரித்து, என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்தினேன், அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்ததுவம், அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும்." (தானியேல் 4:34)

தானியேல் புஸ்தகத்தில் உள்ள தீர்க்கதரிசனங்கள், மற்றும் சொப்பனங்களை காட்டிலும், இது எளிதாக தோன்றினாலும், இதற்குள் மிக ஆழமான காரியங்கள் புதைந்திருக்கிறது. இந்த உலகத்தையும், இஸ்ரயேலையும், தானியேல் 7 ம் அதிகாரத்தில் அந்த நான்கு மிருகங்கள் ஆட்சி செய்தது போல, பாபிலோனிய ராஜ்யத்தின் ராஜாவாக இருந்த நேபுகாத்நேச்சார் "ஏழு காலங்களுக்கு" மிருகமாக மாறினார். நேபுகாத்நேச்சார் கண்ட சொப்பனத்தில் இந்த இராஜ்யங்கள் மாட்சிமையாக காட்சியளித்து ஆனால், தானியேல் அதே காரியத்தை மிருகங்களுக்கு ஒப்பாக கண்டார்.

"... இதின் வேர்களாகிய அடிமரம் பூமியில் இருக்கட்டும், இரும்பும் வெண்கலமுமான விலங்கு இடப்பட்டு..." (தானியேல் 4:15) என்று அந்த சொப்பனம் குறிப்பிடுகிறது. அகவே இந்த விருட்சம் "ஏழு காலங்கள்" வளர்ச்சியடையாதபடிக்கு கட்டுப்படுத்தப்பட்டது. இஸ்ரயேல் மறுமலர்ச்சியடைய இன்னும் "ஏழு காலங்களை" கடக்கவேண்டும் என்று அடையாளமாக சொல்லப்படுகிறதாக கருதப்படுகிறது. இங்கு சொல்லப்பட்ட அதே உலோகங்களை பற்றி ஏசாயா தீர்க்கதரிசனத்தில் பாபிலோனை கைப்பற்றின, கோரேஸ் இராஜாவை குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. "கர்த்தராகிய நான் அபிஷேகம் பண்ணின கோரேசுக்கு முன்பாக ஜாதிகளைக் கீழ்ப்படுத்தி, ராஜாக்களின் இடைக்கட்டுகளை அவிழ்க்கும்படிக்கும், அவனுக்கு முன்பாக வாசல்கள் பூட்டப்படாதிருக்க.... நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்.... வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்கு கொடுப்பேன், நான் என் தாசனாகிய யாக்கோபினிமித்தமும், நான் தெரிந்துகொண்ட இஸ்ரயேலினிமித்தமும், நான் உன்னைப் பெயர்சொல்லி அழைத்து, நீ என்னை அறியாதிருந்தும், உனக்கு நாமம் தரித்தேன்." (ஏசாயா 45:1-4) பல வருடங்கள் பாபிலோனியரிடத்தில் அடிமையாயிருந்த இஸ்ரயேல் ஜனங்களை விடுவித்து, அந்த தேசத்தை நொருக்க, தேவன் கோரேஸ் இராஜாவை பயன்படுத்தினார்.

வசனங்களில் தூண்டுதலை சந்தேகிக்கும் பலர் தானியேல் முன்னறிவித்த காரியங்கள் நிச்சயமாக அனைத்து சம்பவங்களும் நடந்தபின் அவரால் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று கருதுகிறார்கள். ஆனால், அது எழுதப்பட்ட தேதிகளும், மொழிகளும், பாபிலோனிய காலத்தில் தான் எழுதப்பட்டது என்று நிரூபிக்கிறது. இந்த புஸ்தகத்தில் உள்ள தீர்க்கதரிசனங்கள், உலக வரலாற்றில் பல நூற்றாண்டுகளுக்கு பின் நடக்கவேண்டிய சம்பவங்களை எவ்வாறாக விவரிக்கபட்டிருக்கிறது என்று வசனங்களின் வெளிப்பாடுகளுக்கு உறுதியான சாட்சியளிக்கிறது.

**ஏழு காலங்கள்**

லேவியராகமத்தில் சொல்லப்பட்ட "ஏழு காலங்கள்" என்ற காரியமும், இஸ்ரயேலில்

நடக்ககூடியவைகளை முன்குறிப்பதாகவே இருக்கிறது. "ஏழு காலங்கள்" என்ற சொற்றொடர் தானியேல் புஸ்தகத்தில் நான்கு முறைகள் (4:16,23,25,32)குறிப்பிடப்பட்டிருக்கிறது, போல லேவியராகமத்திலும், நான்கு முறைகள் (26:18,21,24,28)குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரும்பும், வெண்கலமும் இஸ்ரயேலை கட்டுபடுத்தும் வல்லமைகளாக இரண்டு இடத்திலேயும் குறிப்பிடப்படுகிறது. "உங்கள் வல்லமையின் பெருமையை முறித்து, உங்கள் வானத்தை இரும்பைப்போலவும், உங்கள் பூமியை வெண்கலத்தைப்போலவும் ஆக்குவேன். "(லேவியராகமம் 26:19) லேவியராகமம் 26 ம் அதிகாரத்தில் ஏழு முக்கியமான பாடங்கள் உள்ளது. ஒவ்வொன்றும், தண்டனையை அதிகரிக்கக்கூடியதாக இருக்கிறது.

1. பஞ்சமும், பட்டினியும் (வசனம் 18-20) இங்கு இஸ்ரயேலர்களை தண்டித்து, மனம்வருந்துவதற்கும், யேகோவா தேவனிடம் திரும்புவதற்கும் தானியேல் 4 ம் மற்றும் ஏசாயா 45 ம் அதிகாரங்களிலும் சொல்லப்பட்ட உலோகங்கள் பயன்படுத்தப்பட்டது. இஸ்ரயேலின் வல்லமையின் பெருமையை முறிப்பதற்காகவும், மற்றவர்களுடைய வல்லமையினால் இவர்களை மேற்கொள்ளமுடியும் என்று இஸ்ரயேல் உணர்வதற்காகவும் இப்படி நடந்தது. வானம் இரும்பை போலவும், பூமி வெண்கலத்தை போலவும் மாறியது என்றால், மழை பெய்யாமல் தேசம் பஞ்சத்தின் கொடுமையினால் நிறைந்து, தேவனுடைய ஆசீர்வதங்களின் நிமித்தமே மழை பெய்யும் என்று காட்டியது. 27 -29 ம் வசனங்களில் முன் அறிவிக்கப்பட்டது போல, பாபிலோனிய காலத்தில் சில இஸ்ரயேலர்கள் கடும் பஞ்சத்தின் காரணமாக மனித மாம்சம் புசிக்க துவங்கினார்கள். ( ஏரே 52:6, புல4:10)
2. மிருகங்களை அனுப்பி, கால்நடைகளை அடியோடு அழித்து, பிள்ளையற்றவர்களாக்குவது - உங்களுக்குள்ளே வெளியின் துஷ்டமிருகங்களை வரவிடுவேன், அவைகள் உங்களைப் பிள்ளையற்றவர்களாக்கி, உங்கள் மிருகஜீவன்களை அழித்து, உங்களைக் குறைந்துபோகப்பண்ணும், உங்கள் வழிகள் பாழாய்க் கிடக்கும்." - (26:22) தேசம் மிருகங்களினால் அழிக்கப்பட்டு பாழாக்கவிடப்படும். நிச்சயமாக இது தானியேல் கண்ட மிருகங்களையே குறிப்பிடுகிறது.
3. யுத்தங்கள், கொள்ளை நோய் மற்றும் பஞ்சம் ( வசனம் 25) இஸ்ரயேல் தங்களுடைய சத்துருக்களின் பயத்தினால் வாழ்ந்தார்கள். அவர்கள் இஸ்ரயேலரின் வெள்ளாமையை புசித்தார்கள். இஸ்ரயேல் கீழ்படியாமல் போகும் பொழுதெல்லாம் இந்த காரியம் அநேக முறை நடந்தது. பாபிலோனின் படை எடுப்பின் போதும் இது நடந்தது.
4. விக்கிரங்கள் எறியப்பட்டது (வசனம் -30) பாபிலோன் படை எடுப்பிற்கு முன் வாழ்ந்த உத்தமனாக கடைசி இராஜா ஒசேயாவின் காலத்தில் இது நடந்தது. (11ராஜ 23:25, 11நாளா 34:5) அந்த ராஜாவின் மரணத்திற்குபின் இஸ்ரயேல் ஆவிக்குரிய நிலையில் குன்றிபோன போது இஸ்ரயேல் முற்றிலுமாக அழிக்கப்பட்டபின் இந்த செயல் முழுமையடைந்தது.
5. பட்டணங்கள் வெறுமையாக்கப்பட்டது (வசனம் -31) தேவன் இதை செய்ய நேபுகாத்நேச்சாரை பயன்படுத்தினார்.
6. ஜாதிகளுக்குள் சிதறடிக்கப்பட்டார்கள் (வசனம் 33). இந்த காரியமும் பாபிலோனிய காலத்திலும், தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்ட "மிருகங்களின்" ஆட்சி காலத்திலும் நடந்தது.
7. தேசம் பாழாக்கப்பட்டது (வசனம் - 34) ஜனங்கள் பாபிலோனுக்கு இழுத்து சென்ற போது சொல்லர்த்தமாக நிறைவேறியது. (11நாளா 30 :21)

வரவிடப்பட்ட துஷ்ட மிருகங்களால் இஸ்ரயேல் அழிக்கப்பட்டு, சிறைபிடிக்கப்பட்டு,"ஏழு காலங்கள்" தண்டிக்கப்படும் என்று லேவியராகமம் குறிப்பிடுகிறது. அநேக வல்லமைகளில் முதல் முதலில் இஸ்ரயேலை ஆண்ட நேபுகாத்நேச்சார் ஒரு மிருகமாக மாற்றப்பட்டு "ஏழு காலங்கள்" தண்டிக்கப்பட்டார். இது போல தானியேல் கண்ட மற்ற மிருகங்களும் "ஏழு காலங்கள்" இஸ்ரயேலை ஆட்சி செய்யும் என்பதை எடுத்துகாட்டுகிறது. இது எவ்வளவு காலம் ? இது சொல்லர்த்தமான ஏழு வருடங்களாக இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், இஸ்ரயேலர்கள் பாபிலோனில் எழுபது வருடங்கள் அடிமைகளாக இருந்தன.

**2,520 வருடங்கள்**

"காலம், காலங்கள், அரை காலம்" பற்றி தானியேல் பேசுகிறார். (தானியேல் 7:25, 12:7) வெளிப்படுத்தலிலும் அதே வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டது. (வெளி 12:14) மீண்டும் (12:6) ல் "1,260 நாட்கள் " என்றும் "நாற்பத்து இரண்டு மாதங்கள்" என்றும் வெளி 11:2, 13:5 வசனங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. "காலங்கள்" என்ற வார்த்தை காயிரோஸ் (kairos)என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது.

42 மாதங்கள் என்பது 1260 நாட்களும் ஒரே காலளவைக் குறிப்பிடுகிறது. ஆகவே ஒவ்வொரு மாதமும் 30 நாட்கள் உடையதாக இருக்கிறது. எனவே, ஒரு "காலத்திற்கு" 360 நாட்கள் என்று கணக்கிடலாம். (30 நாட்கள் கொண்ட பன்னிரெண்டு மாதங்கள்) நேபுகாத்நேச்சாருக்கு இது உண்மையாக பொருந்தியது. அவர் "ஏழு காலங்கள்" அதாவது ஏழு சொல்லர்த்தமான வருடங்கள் மிருகமாக இருந்தார். ஒரு காலத்திற்கு 360 நாட்கள் இருப்பதினால், அவர்கள் மிருகமாக வாழ்ந்த காலம் 2520 நாட்கள்.

பெரும்பாலும் அனைத்து வேதாகம வல்லுனர்களும் தானியேல் 9 ம் அதிகாரத்திலுள்ள 70 வாரங்களை (490 தீர்க்கதரிசனமான நாட்களை) சொல்லர்த்தமாக 490 வருடங்களாக கணக்கிடுகிறார்கள். இந்த காலம் இயேசு கிறிஸ்துவின் மரணத்தை தீர்க்கதரிசனமாக புள்ளியிடக்கூடியதாக இருக்கிறது. சில தீர்க்கதரிசிகள் இந்த கோட்பாட்டை பயன்படுத்த கற்பிக்கப்பட்டிருந்தார்கள். "ஒவ்வொரு வருஷத்துக்குப்பதிலாக ஒவ்வொரு நாளை உனக்குக் கட்டளையிட்டேன்."(எசேக்கி 4:4-6) "நீங்கள் தேசத்தைச் சுற்றிப்பார்த்த நாற்பதுநாள் இலக்கத்தின்படியே, ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக, நீங்கள் நாற்பது வருஷம் உங்கள் அக்கிரமங்களைச் சுமந்து, என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதலை உணருவீர்கள்."(எண் 14:28,33,34)

இஸ்ரயேலர்கள் தங்களுடைய மீறுதல்களுக்காக "ஏழு காலங்கள்" தண்டிக்கப்பட்டார்கள் என்பதை காட்டுகிறது. இந்த தீர்க்கதரிசனங்களில் சொல்லப்பட்ட மிருகங்களை போலிருந்த ராஜ்யங்கள் 1260 சொல்லர்த்தமான வருடங்கள் இஸ்ரயேலை ஆட்சி செய்தது. இந்த காலம் நேபுகாத்நேச்சார் கண்ட சொப்பனத்திலிருந்து துவங்கியது. அவர் கிமு 607 -606 ல் எருசலேமை முற்றிகை போட்டது முதல் இஸ்ரயேல் மற்ற தேசங்களுக்கு கீழ் அடிமைப்பட்டது. கிமு 607 ம் வருடத்திலிருந்து 2520 வருடங்களை கணக்கிட்டால் கிபி 1914 ம் வருடத்தில் அந்த காலம் முடிவடையும்.

லேவியராகமம் 26 ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட ஒரு தண்டனையில் இஸ்ரயேல் சிதறடிக்கப்பட்டு அவர்களுடைய சொந்த தேசத்தை இழுந்து விடுவார்கள் என்று குறிப்பிட்டது. இது நேபுகாத்நேச்சாரின் காலத்தில் நடக்க துவங்கியது. 1914 ம் வருடம் முதல் உலக போர் மூண்டது. இதன் விளைவாக இஸ்ரயேல் ஒருதேசமாக கூட்டி சேர்க்கப்பட முதல் அடி எடுத்து வைத்தது. 1917, டிசம்பர் 9 ம் தேதி அந்த யுத்தத்தின் முடிவு, பிரிட்டிஷ் தளபதி - எட்மண்டு ஆலென்பை எருசலேமை கைப்பற்றினார். பிரிட்டிஷ் பாராளுமன்றம் தங்களுக்கு ஒரு தாய் நாடு வேண்டும் என்ற சீயோனியர்களின் நம்பிக்கையை அங்கிகரித்து, பால்பர் பிரகடணம், யூத நாட்டை ஸ்தாபிக்க உறுதியளித்தது. இரண்டாம் வருகை உலகபோருக்கு பின் பிரிட்டன் தன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றினபின் இஸ்ரயேல், யூதர்களுக்கு ஒரு தாய்நாடானது.

அந்த நான்கு ராஜ்யங்களை குறித்த விபரங்கள், தானியேலின் முன் அறிவிப்பு குறிப்பிடத்தக்கதாக இருந்தாலும், தேவனுக்கு மட்டுமே தெரிந்து அந்த இராஜ்யங்களை பற்றின துல்லியமான விபரங்கள் முன் அறிவிக்கப்பட்டது.

முதலாம் பேரரசின் காலத்தில் இஸ்ரயேல் தேசம் தன்னுடைய தேசத்தை இழந்து கிட்டத்தட்ட இரண்டாயிரம் வருடம் - "ஏழு காலங்களின்" காலக்கணக்கு பொருந்தும் காரியம் வசனங்களின் உள்ள உண்மைகளை உறுதிப்படுத்தி சாட்சி கொடுக்கிறது. இது தேவனிடத்தில் நாம் வைத்திருக்கும் விசுவாசம் அதிகரிக்க உதவி செய்து, அந்த சிலையை மோதின கல் பூமி முழுவதும் நிரப்பி, தேவனுடைய ராஜ்யமாக மாறும் போதும், கர்த்தர் முழு மனுக்குலத்திற்கும் இரட்சிப்பை அளிப்பார்.



அவர்கள் மலையிலிருந்து இறங்குகிறபோது, இயேசு அவர்களை நோக்கி - மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும்வரைக்கும் இந்தத் தரிசனத்தை ஒருவருக்கும் சொல்லவேண்டாம் என்று கட்டளையிட்டார் - மத்தேயு 17:9

Michael Nekora

**ம**ற்றவர்கள் தன்னை யார் என்று சொல்லுகிறார்கள் என்று இயேசு மத்தேயு 16 ம் அதிகாரத்தின் மத்தியில் சீஷர்களிடம் கேட்டார். "எலியா முந்தி வரவேண்டும்" என்று மல்கியா (மல் 4-5) சொல்லியதால் சிலர் அவரை எலியா என்று நினைத்தார்கள். அவர் மிக எளிமையாக வாழ்ந்ததினால் சிலர் அவரை தீர்க்கதரிசி என்று நினைத்தார்கள். ஆனால், இயேசு தம்முடைய சீஷர்களிடம் இந்த கேள்வியை கேட்டபொழுது பேதுரு உடனடியாக பதில் அளித்தார். "..நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்." (மத்தேயு 16:16)

அந்த சீஷர்களின் சிறிய கூட்டத்தில் நீங்கள் ஒரு பகுதியாக இருந்தால், இயேசு தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்தால், அவர் உங்களுக்கு என்ன செய்யவேண்டும் என்று விரும்புவீர்கள் ? அரசியல் வல்லமைகளை சேர்த்துகொண்டு ஒரு படையை திரட்டிகொண்டு ரோமர்களின் நுகதடியை முதலில் அவர் உடைக்க வேண்டும் என்று எதிர்பார்த்திருப்பீர்களா ? ஆனால் இயேசு அப்படி செய்யவில்லை. அப்போது இவர் உண்மையில் தேவனுடைய குமாரனா என்ற சந்தேகம் உங்களுக்குள் எழும்பியிருக்கும் அல்லவா ? யோவான் ஸ்நானகனுக்கே இப்படிப்பட்ட சந்தேகங்கள் எழும்பியது - (லூக்கா 7:19) அவருடைய எதிர்ப்பார்ப்புகள், இயேசுவின் செயல்களோடு ஒத்து போகவில்லை.

வெகு சீக்கிரத்தில் இயேசு பாடுப்பட்டு மரித்து விடுவார் என்ற ஒருபோதும் சீஷர்கள் உணரவில்லை. இதைக் குறித்து இயேசு சீஷர்களிடம் சொல்ல வரும்பொழுது அவர்களால் அதை ஏற்றுகொள்ள முடியவில்லை. "அப்பொழுது, தாம் கிறிஸ்துவாகிய இயேசு என்று ஒருவருக்கும் சொல்லாதபடிக்குத் தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டார். அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார். அப்பொழுது, பேதுரு அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய் - ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்தகொள்ளத் தொடங்கினான்" (மத்தேயு 16 :21,22,23)

இயேசு தன்னுடைய வாழ்க்கையில் செய்யவேண்டிய காரியங்களை மிக உறுதியாக எதிர்பார்த்த பேதுரு அவரை கடிந்துகொள்ளும் அளவுக்கு துணிந்தார். ஆனால் உண்மையில் என்ன சமபவிக்கபோகிறது என்ற தெளிவான அறிவை அந்நேரம் வரைக்கும் பேதுரு பெறாதிருந்தார்.

இதே சம்பாஷனைகள் லூக்காவிலும் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது - "பின்பு அவர் எல்லாரையும் நோக்கி - ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன்

மறுரூபமாகுத

[illegible]

என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான். மனுஷன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன்னைத் தான் கெடுத்து நஷடப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன ? இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யத்தைக் காணுமுன், மரணத்தை ருசிப்பார்ப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார். " (லூக்கா 9:23 - 25,27)

இங்கு "காணுதல்" என்ற விசேஷித்த அற்புதம் தேவைப்பட்டது. ஏனெனில், இந்த வாழ்க்கையில் அனுபவிக்கூடிய துன்பங்களே அதன் முடிவாயிராமல், அதை தொடர்ந்து யாரும் எதிர்பார்க்காத அளவுக்கு மகிமை தொடரும் என்று உண்மையில் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டியதாக இருந்தது.

இன்னும் சில நாட்களில் வரும் தேவனுடைய ராஜ்யத்தை காணும்முன் சிலர் மரிப்பதில்லை என்று இயேசு சொன்ன இந்த சம்பவம் (மத் 17:9 ல் இதை ஒரு தரிசனம் என்று அழைக்கப்பட்டிருக்கிறது) மூன்று சுவிசேஷங்களிலும் எழுதப்பட்டிருக்கும் அளவுக்கு

முக்கியத்துவம் வாய்ந்தாக இருந்தது. இதைக் குறித்து லூக்காவின் வார்த்தைகளை காண்போம்.

"இந்த வார்த்தைகளை அவர் சொல்லி ஏறக்குறைய எட்டுநாளானபின்பு, அவர் பேதுருவையும் யோவானையும் யாக்கோபையும் கூட்டிக்கொண்டு, ஜெபம்பண்ணுகிறதற்கு ஒரு மலையின்மேல் ஏறினார். அவர் ஜெபம்பண்ணுகையில், அவருடைய முகரூபம் மாறிற்று, அவருடைய வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசித்தது. அன்றியும் மோசே எலியா என்னும் இரண்டுபேரும் மகிமையோடே காணப்பட்டு, அவருடனே சம்பாஷனைபண்ணி, அவர் எருசலேமிலே நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்தைக்குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். பேதுருவும் அவனோடிருந்தவர்களும் நித்திரைமயக்கமாயிருந்தார்கள். ஆகிலும் அவர்கள் விழித்து அவருடைய மகிமையையும் அவரோடே நின்ற அவ்விரண்டுபேரையும் கண்டார்கள். அவ்விருவரும் அவரைவிட்டுப் பிரிந்துபோகையில், பேதுரு இயேசுவை நோக்கி - ஐயரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது, உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்று, தான் சொல்லுகிறது இன்னதென்று அறியாமல் சொன்னான். இப்படி அவன் பேசுகையில், ஒரு மேகம் வந்து அவர்கள்மேல் நிழலிட்டது, அவர்கள் அந்த மேகத்துக்குள் பிரவேசிக்கையில் சீஷர்கள் பயந்தார்கள். அப்பொழுது - இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று மேகத்திலிருந்து ஒரு சத்தமுண்டாயிற்று. அந்தச் சத்தம் உண்டாகையில் இயேசு ஒருவரே காணப்பட்டார். தாங்கள் கண்டவைகளில் ஒன்றையும் அவர்கள் அந்நாட்களில் ஒருவருக்கும் சொல்லாமல் அடக்கிவைத்திருந்தார்கள்." - லூக்கா 9:28-36

**தரிசனத்தின் விவரம்**

இது சொப்பனம் அல்ல, ஒரு தரிசனம். இது பத்மு தீவில் யோவான் அனுபவித்தவைகளுக்கு ஒப்பாக இருக்கவேண்டும். மேலும் சில கோணங்களில் தமஸ்குவிற்கு போகும் வழியில் பவுல் கண்ட தரிசனத்திற்கும் இதை ஒப்பிடலாம்.

எப்படியிருந்தாலும், அங்கே மோசேவோ, எலியாவோ உண்மையில் இருக்கவில்லை. இது ஒரு தரிசனமாக இருந்தது. நோவா, தானியேல் மற்றும் யோபுக்கு பதிலாக இவர்கள் ஏன் இங்கு காணப்பட்டார்கள் ? (எசேக்கியேல் 14:14) இவர்கள் இருவரும் இஸ்ரயேலின் வரலாற்றில் மிக முக்கியமானவர்களாக இருந்தார்கள். இவர்கள் இருவரை பற்றியும் பழைய ஏற்பாட்டின் இறுதி வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. "ஓரேபிலே இஸ்ரயேலரெல்லாருக்காகவும் என் தாசனாகிய **மோசேக்கு** நான் கற்பித்த நியாயப்பிரமாணமாகிய கட்டளைகளையும் நியாயங்களையும் நினையுங்கள். இதோ கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு **எலியா** தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். " (மல்கியா 4:4,5)

இந்த இருவரும் இயேசுவின் அனுபவங்களுக்கு ஒப்பான அநேக அனுபவங்களை அடைந்திருந்தார்கள். இருவரும் வானாந்திரத்தில் தேவனோடு தொடர்பு கொள்ள நாற்பது நாட்கள் உபவாசித்தார்கள். இருவரும் இயற்கைக்கு மாறாக மரணமடைந்தார்கள். மோசே வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்தை கண்ட பின் பிஸ்காவின் கொடுமுடியில் தேவன் அவரை எடுத்துகொண்டார். சுழற்காற்றினால் எடுத்துகொள்ளப்பட்ட எலியாவை ஒருவரும் அதற்குபின் காணவில்லை.

மோசே ஜனங்களிடம் கற்பனைகளையும், பிரமாணங்களையும் கொடுத்தபொழுது சில முக்கியமாக காரியங்களை சொன்னார் - "உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார், அவருக்குச் செவிகொடுப்பீர்களாக.."(உபாகமம் 18:15) இந்த வார்த்தைகள் அனைத்தும் பேதுருவுக்கு பரிச்சயமானது என்று நாம் அறிவோம். ஏனெனில், பேதுரு பெந்தெகொஸ்தே நாளின் போது எருசலேமில் ஜனங்களுக்கு போதித்தபோது, இதே வார்த்தைகளை எடுத்துரைத்தார். இந்த வார்த்தைகளை இயேசுவுக்கு பொருத்தி பேசினார். (அப்போ 3:22) மறுரூப காட்சியின் அனுபவங்களில், இயேசுவையும் மோசேவையும் ஒருமித்து கண்டபோது, இந்த காரியங்கள் அவருக்கு நினைவில் தோன்றியிருக்கும். ஒரு வேளை இந்த தரிசனத்தில் இயேசுவோடு சம்பாஷிக்கும்பொழுது, இவைகளை பேசியிருக்கலாம்.

மோசேவும், எலியாவும் இதற்கு தேர்வு செய்யப்பட்டிருக்கலாம் ஏனெனில், அது மகிமையுள்ள அவருடைய இராஜ்யத்தின் காட்சியாக இருந்தது. மகிமையடைந்த இயேசுவோடு, அவருடைய இராஜயத்தின் இரண்டு முக்கியமான பகுதிகளை அடையாளப்படுத்தும் இருவர் அங்கு நின்றார்கள் - மோசே, அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவர் - இந்த பூமிக்குரிய பகுதியையும், எலியா பரலோகத்திற்குரிய பகுதியையும் அடையாளப்படுத்தினார்கள். இவர்கள் "பரலோகத்திற்கு எடுத்துகொள்ளப்படும்" எலியாவை போல் விசுவாசமுள்ளவர்கள்.

மூன்று சுவிசேஷங்களும் இயேசுவின் மரணத்தைக் குறிப்பிட்டிருப்பதை காட்டுகிறது. லூக்கா 9:31ல் எக்ஸோடஸ் (exodos) என்ற வார்த்தை அவருடைய அடையக்கூடிய மரணத்திற்கு

பயன்படுத்தப்பட்டது. இந்த வார்த்தை மோசேவோடு தொடர்புடையதாக இருக்கிறது. ஏனெனில், பொதுவாக எகிப்திலிருந்து வெளியே வந்த இஸ்ரயேலர்களோடு சம்மந்தப்பட்டிருக்கிறது. இந்த ஒரு காரியத்தை பேதுரு இயேசுவை கண்டிக்க தூண்டியது -"ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்தகொள்ளத் தொடங்கினான்". கிறிஸ்துவின் பாடுகளும், அவர் மரணமும் நித்தியமானது அல்ல என்று அவர் புரிந்துகொள்ளவேண்டிதாக இருந்தது. இதன் மூலம் அநேக பாடங்கள் கற்றுகொள்ளப்பட்டு, நித்திய மகிமைக்கு அவரை கொண்டு சேர்க்கும் என்று அவர் அறியாதிருந்தார். இதை "எக்ஸோடஸ்" என்று விவரிக்கப்பட்டிருந்தது. இதற்கு ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறுவதென்று பொருள்படும். இந்த பாடத்தை பேதுரு ஒருபோதும் மறக்கவில்லை.

மூவருக்காக பேதுரு பேசினார். அவர்கள் அங்கு கண்டவைகளின் காரியங்களையும், அங்கு தங்கவேண்டிய காரியத்தின் முக்கியத்துவத்தையும் பேதுரு உணர்ந்திருந்தார். ஆனால் மறுபடியும் அவர் தவறிவிட்டார். இந்த காரியத்தின் சரியான நோக்கம் எபிரெயரின் புஸ்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. "ஆகையால், நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப்போகக்கடவோம். நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை, வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம்." ( எபிரெயர் 13: 13,14)

பழைய ஏற்பாட்டின் இஸ்ரயேலர்களுக்கு மேகம், தேவனுடைய பிரசன்னத்திற்கு அடையாளமாக இருந்தது. மோசே தேவனுடைய கற்பனைகளை பெற்றுகொண்டபோது இது சொல்லப்பட்டது - "மோசே மலையின்மேல் ஏறினபோது, ஒரு மேகம் மலையை மூடிற்று. கர்த்தருடைய மகிமை சீனாய்மலையின்மேல் தங்கியிருந்தது. மேகம் ஆறுநாள் அதை மூடியிருந்தது. ஏழாம் நாளில் அவர் மேகத்தின் நடுவிலிருந்து மோசேயைக் கூப்பிட்டார்." (யாத் 24:15,16) அந்த சத்தம் கர்த்தருடையது என்று கருதப்படவேண்டும்.

இந்த காட்சி, சீஷர்களுக்கு மீண்டுமாக உறுதியளிக்க காட்டப்பட்டது. இயேசுவின் தோற்றம் எப்படியிருந்தாலும் சரி, அவர் பரலோக பிதாவின் சித்தத்தை செய்துகொண்டிருந்தார். "அவருக்கு செவிகொடுங்கள்" என்று கட்டளையிட்டிருந்தார். ஆனால் பேதுரு "அவருக்கு செவிக்கொடுக்காமல்", அவரோடு வாக்குவாதம் செய்யதுவங்கினார். அவர் முதல் நிருபம் எழுதும் வரைக்கும் இதன் தாத்பரியங்களை அறியாதிருந்தார். "உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள். உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள். தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்." (1பேதுரு 1:9 -11)

அந்த மரூப காட்சியின் அனுபவத்தை பெற்றபின், இந்த உலகத்தையும், மாம்சத்தையும், பிசாசையும் துணிந்து எதிர்க்க அந்த மலையைவிட்டு கீழே இறங்கவேண்டியதாக இருந்தது. தேவனுடைய சித்ததின்படி, தேவனுடைய குமாரனுக்கும், அவர்களுக்கும் பாடுப்படவேண்டும் என்பதை அவர்கள் அப்பொழுது புரிந்துகொண்டார்கள். வரவிறுக்கும் இராஜ்யத்தின் மகிமையான காட்சியை கண்டார்கள். இந்த காட்சியை கண்டு, சுமார் முப்பதெட்டு வருடங்களுக்கு பின் பேதுரு எழுதின இரண்டாம் நிருபத்தில் இவைகள் மிக தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளது. "நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக்கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம். இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்க உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்றபோது, அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக்கேட்டோம்." - (11பேதுரு 1:16 -18)

இயேசுவுக்கு நடந்த அனைத்தும் முன்அறிவிக்கப்பட்டபடியே நடந்தது. ஆனால் பேதுருவின் எதிர்பார்ப்புகளும், இன்னும் மற்ற சீஷர்களின் எதிர்ப்பார்ப்புகளும் மிக உறுதியாக இருந்தது. இந்த மறுரூபமலையின் காட்சி, இயேசுவின் ஊழியத்திற்கும், வாழ்க்கைக்கும் அங்கிகாரத்தின் ஒரு முத்திரையாக குத்தப்பட்டது. பேதுரு தொடர்ந்து எழுதுகையில் - "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் உண்டு, பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்." (11பேதுரு 1:19)

அவருடைய முதல் அனுபவத்தினால், இப்படி பேசினார் என்று பேதுரு அறிந்திருந்தார். கிறிஸ்துவின் பின்னடியார்கள் தங்களுடைய மரணத்திற்கு பின் மகிமையடைய விசுவாசத்தை உறுதியோடு காத்துகொள்ளவேண்டும் என்று பேதுரு விரும்பினார். இது ஒரு "எக்ஸோடஸாக" அல்லது வெளியேறுவதாக இருக்கும். இந்த ஒரு அரிதான வார்த்தையை பேதுரு தன்னுடைய மரணத்தை விவரிக்க பயன்படுத்தினார் - "மேலும், நான் சென்றுபோனபின்பு (எக்ஸோடஸ்) இவைகளை நீங்கள் எப்பொழுதும் நினைத்துக்கொள்ள ஏதுவுண்டாயிருக்கும்படி பிரயத்தனம் பண்ணுவேன்." (11பேதுரு 1:15)

அவர் மரணத்தை மட்டும் குறிப்பிடுவதாக இருந்தால் வேறு பல கிரேக்க வார்த்தைகளை அவர் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால், அதற்கு பதிலாக, அந்த தரிசனத்தில் இயேசுவும் மற்ற இருவரும் சம்பாஷித்துகொண்டிருந்த போது பயன்படுத்தின கிரேக்க வார்த்தையை (லூக்கா சுவிசேஷத்தில் பதிவு செய்யப்பட்டது) துல்லியமாக பயன்படுத்துகிறது. மரணம் என்பது பாடுகள் நிறைந்த வாழ்க்கையிலிருந்து மகிமையுள்ள ஒரு வாழ்க்கைக்கு செல்லுவதாகும். பேதுருவுக்கு இது உண்மையாக இருந்தது, கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றுபவர்களுக்கு அவர் உண்மையுள்ளவராக இருக்கவிரும்பினார்.

**மறுரூபமாக்கப்படுதல்**

இயேசு மறுரூபமானார் என்று மத்தேயு மற்றும் மாற்கு குறிப்பிடுகிறார்கள். "மெத்தமோர்பு" (metamorphoo) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து இது எடுக்கப்பட்டுள்ளது. இந்த கிரேக்க வார்த்தை "மெட்டாமார்போசிஸ்"( metamorphosis) என்ற ஆங்கில வார்த்தையிலிருந்து பிறந்ததாகும். புதிய ஏற்பாட்டில் நான்கு முறைகள் மட்டுமே இந்த வார்த்தை காணப்படுகிறது. இதைக் குறித்து பவுல் விவரிக்கும்பொழுது - "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம் (metamorphoo)." (11கொரி 3:18)

தேவனோடு தொடர்பு கொண்டபின் மோசே மலையிலிருந்து இறங்கி வரும் பொழுது அவருடைய முகத்தின் பிரகாசத்தை பற்றி பவுல் சிந்தித்தார் என்று நாம் அறிவோம். ஏனெனில், இந்த வசனத்திற்கு முன்பு இதைப் பற்றி அவர் குறிப்பிட்டிருந்தார். "திறந்த முகமாய்" என்ற சொற்றொடர் "வெளிப்படுத்தப்பட்ட முகமாய்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். மோசே தேவனுடைய மகிமையை பிரதிபலித்ததினால், ஜனங்கள் மோசேயின் முகத்தை பார்க்கமுடியவில்லை.

அதேபோல், நாம் தேவனோடு கொண்ட உறவை தொடர்ந்து தக்கவைத்து கொண்டால், நிச்சயமாக நாமும் பெறும் மகினை நம்மை நாளுக்குநாள் மறுரூபமாக்கி, அந்த மகிமையின் ரூபமடைவோம். "தேவனுடைய வெளிச்சத்தை கண்ணாடியைபோல் பிரதிபலிக்கும் நம்முடைய வெளிப்படுத்தப்பட்ட முகங்களில், பிரகாசம் அதிகரித்து நாம் பிரதிபலிக்கும் ரூபத்திற்கு ஒப்பாக மாற்றப்படுவோம். இதுவே ஆவியாயிருக்கிற நம்முடைய கர்த்தரின் கிரியையாயிருக்கிறது." (11கொரி 3:18 - எருசலேம் வேதாகமம்)

குணலட்சனங்கள் மறுரூபமாக்கப்படுதல், நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்கிறது. அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை "ஜீவ பலியாக" தங்களை ஒப்புகொடுக்கும் குணநலமுடையதாக இருக்கிறது. (ரோமர் 12:1) நம்முடைய சரீரத்தை ஜீவ பலியாக ஒப்புகொடுத்தபின் என்ன செய்யவேண்டும் என்று என்பதை அடுத்த வசனம் நமக்கு கூறுகிறது - "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபாகுங்கள் (metamorphoo)." - ரோமர் 12 :2

நாம் இந்த உலகத்திற்குரிய நிலையிலிருந்து (தன்மை), நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் நிலைக்கு (தன்மை) மாறவேண்டும். இந்த ஒரு மாற்றம் நம்மில் ஏற்படவில்லை என்றால், நிச்சயமாக கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக நாம் இருக்க முடியாது, தேவனும் நம்மை ஏற்றுகொள்ளமாட்டார்.

நம்முடைய வாழ்க்கையில் நாம் பெறும் மறுரூபசாட்சியின் அனுபவங்கள் நம்முடைய விசுவாசத்தை அதிகரிக்க வேண்டும். அப்பொழுது நாம் மலையை விட்டு கீழே இறங்கும்பொழுது, இதுவே தேவனுடைய சித்தம் என்று அறிந்து, தொடர்ந்து நெருக்கமான வழியில் பயணிக்கமுடியும்.

பேதுரு நமக்கு சொன்னது போல, - ".. சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள், இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்." (11பேதுரு 1:10,11)



"பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் (பேதுரு) தருவேன்..."
-மத்தேயு 16:19

Rick Suraci

மனிதனுக்கான தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின் இடையில் சில இடங்களில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது. எடுத்துகாட்டாக முதல் உலகத்தை தூதர்கள் ஆட்சி ஜலபிரளயத்தில் முடிவடைந்தபின், ஆபிரகாம் அழைக்கப்பட்ட போது முற்பிதாக்களின் யுகம் துவங்கி, யாக்கோபின் மரணத்தில் யூத யுகம் ஆரம்பித்தது. இப்பொழுது மற்றொரு மாற்றத்திற்கு காலம் சமீபமாயிற்றும். இதை அப்போஸ்தலனாகிய பேதுரு மற்றும் கொர்நேலியுவின் அனுபவங்களின் மூலம் காணலாம். அங்கு முதல் புறஜாதி மனந்திரும்பினார்.

இச்சம்பவத்தை போதுமான அளவுக்கு ஆமோஸ் தீர்க்கதரிசி சுருக்கமாக எழுதினார் - "பூமியின் எல்லா வம்சங்களுக்கள்ளம் உங்களை மாத்திரம் அறிந்து கொண்டேன்...." (ஆமோஸ 3:2) பிதாவாகிய ஆபிரகாமின் காலம் துவங்கி இஸ்ரயேல் ஜனங்கள், யேகோவா தேவனோடு பெற்றிருந்த ஐக்கியத்தில் மகிழ்ந்திருந்தார்கள். இந்த ஐக்கியம் உலகத்தாரை விட்டு இரண்டு காரியங்களில் இவர்கள் வித்தியாசப்பட்டார்கள். ஒன்று ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட விருத்தசேதனத்தின் உடன்படிக்கை, மற்றொன்று மோசே மூலமாக கொடுத்த நியாயப்பிரமாணம். இந்த உடன்படிக்கையில் தொடர்பானது, இவர்களை தனிப்பட்ட ஜனங்களாக பிரித்து காட்டியது. ஆகவே அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட விசேஷித்த ஜனங்கள் என்று குறிக்கப்பட்டார்கள்.

மேசியா வந்தவுடன், இந்த விசேஷித்த தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மட்டுமே சபையின் பகுதியாக இருப்பதற்கு அழைக்கப்பட்டார்கள். ஆனால் அவர்கள் இயேசுவை ஏற்றுகொள்ளாததினால், அந்த ஜாதி முழுவதும் அறுப்புண்டு போனது. அங்கு அந்த யுகம் மாறுவதற்கான எந்த சம்பவமும் நடக்கவில்லை. இஸ்ரயேலர்கள் கிட்டத்தட்ட ஆயிரவருஷம் அனுபவித்த அந்த கிருபையின் காலத்தை அதோடு இழந்துவிட்டார்கள். அக்காலத்திலிருந்து அடுத்த யுகத்தின் திட்டங்கள் துவங்கும் வரை ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அந்த கொடியை பிடித்து கொண்டுசெல்ல அழைக்கப்பட்டார்கள். இந்த மாற்றம் எவ்விதத்தில் நடைபெறும் என்ற ஒரு கேள்வி எழும்புகிறது.

ஒவ்வொரு யுகங்களிலும், இந்த கிருபை அடுத்து வந்தவர்களிடம் தொடர்ச்சியாக கொடுக்கப்பட்டது. தனிப்பட்ட மனிதர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டு வந்த கிருபை யாக்கோபின் மரணத்திற்குபின் அவருடைய பன்னிரெண்டு குமாரர்களுக்கு கொடுக்கப்பட்டு, அவர்கள் மூலமாக ஒரு முழு ஜாதிக்கு கொடுக்கப்பட்டது. மிக ஆவலோடு எதிர்பார்த்த மேசியாவாகிய இயேசுவின் வருகைக்கு, யோவான் ஸ்நானகனின் வரவு மிக தெளிவாக முன் அறிவிக்கப்பட்ட சம்பவமாக இருந்தது. ஆனால் அவரை நிராகரித்ததின் மூலம் முழு ஜாதிக்கான அழைப்பு நீங்கி, "தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாகிய இராஜரீகமான ஆசாரியத்துவத்திற்கு" இஸ்ரயேலிலிருந்தும், புறஜாதிகளிலிருந்தும் தனிப்பட்ட நபர்கள் அழைப்பு கொடுக்கப்பட்டது. இப்படிப்பட்ட முக்கியமான திருப்பம் எவ்வாறாக அறிவிக்கப்படும்? இந்த மாற்றத்தை அறிவிப்பதற்கு ஏற்ற ஒரு புறஜாதி தேவைப்பட்டார்.

## புதிய யுகத்தை அறிவிக்கும் தா

"இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான். அவன் தேவபகதியுள்ளவனும் தன்வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான்." (அப்போஸ்தலர் 10 :1,2)

இங்கு சொல்லப்பட்டவைகள் கொர்நேலியுவின் குணங்களை வெளிப்படுத்துகிறது. ஒருவர் நீண்ட காலமாக இப்படிப்பட்ட பக்தியுள்ள வாழ்க்கையை வாழாமல், மேலே சொல்லப்பட்ட விமர்சனத்திற்கு பாத்திரமாக முடியாது. "அவன் .... தன்வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து.." -அவர் அந்த வீட்டிற்கு தலையாக இருந்து, தன்னுடைய வீட்டாரை பாரம்பரியமாக இருந்த புறஜாதியாரின் தெய்வ நம்பிக்கைகளையும், கொள்கைகளை விட்டு திருப்பி, தேவனிடம் அவர்களை வழிநடத்தும் வல்லமையை பெற்றிருந்தார் என்று தெரிகிறது. "ஜனங்களுக்கு (அவருடைய சமுதாயத்திலிருந்த யூதர்களுக்கு) மிகுந்த தருமங்களைச் செய்து ..." - யேகோவா தேவனுடைய ஜனங்களின் மேல் அவர் வைத்திருந்த பற்றுதலையும், வெளிபுறமாக அவர்களை ஆதரிக்கும் காரியங்களிலும் அவர் அதிகமாக அக்கறைகாட்டினார் என்பது தெரிகிறது.

இறுதியாக, "எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான்" இது ஆச்சரியப்படக்கூடியதாக இல்லை, அவர் தேவனால் கிருபை பெற்றிருக்கும் ஜனங்களில் ஒருவராக இல்லை என்று அறிந்திருந்தாலும், அவர் தொடர்ந்து ஜெபித்தார்.

"பகலில் ஏறக்குறைய ஒன்பதாம்மணி நேரத்திலே தேவனுடைய தூதன் தன்னிடத்தில் வரவும், கொர்நேலியுவே, என்று அழைக்கவும் பிரத்தியட்சமாய்த் தரிசனங்கண்டு, அவனை உற்றுப்பார்த்து, பயந்து - ஆண்டவரே, என்ன என்றான். அப்பொழுது அவன் - உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது. இப்பொழுது நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி, பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைப்பி. அவன் தோல் பதனிடகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்திலே தங்கியிருக்கிறான், அவனுடைய வீடு கடலோரத்திலிருக்கிறது. நீ செய்யவேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான் என்றான். கொர்நேலியு தன்னுடனே பேசின தேவதூதன் போனபின்பு, தன் வீட்டு மனுஷரில் இரண்டுபேரையும் தன்னிடத்தில் சேவிக்கிற போர்ச்சேவகரில் தேவபக்தியுள்ள ஒருவனையும் அழைத்து, எல்லாவற்றையும் அவர்களுக்க விவரித்துச் சொல்லி, அவர்களை யோப்பா பட்டணத்துக்கு அனுப்பினான். " (அப்போ 10 :3-8)

இந்த அனுபவத்தின் முதல் காரியமாக அந்த தரிசனமாக இருந்தது. தரிசனம் என்ற வார்த்தை (ஸ்டிராங்க்ஸ் - 3705 - காண்பது, உற்றுநோக்குதல்) கண்களினால் காண்பதற்கும், மனதில் காணபதற்கும் பயன்படுத்தப்பட்டது. உண்மையில், கொர்நேலியு தெளிவாக அந்த தரிசனத்தை கண்களின் மூலம் கண்டார். ((ஸ்டிராங்க்ஸ் - 5320 -தெளிவாக, வெளியரங்கமாக ) உண்மையில், ஒரு தூதன் நேரடியாக அவரை சந்தித்தார் என்பது தெளிவாகிறது.

இந்த காரியம் மதியம் மூன்று மணி அளவில் நடந்தது. இதைக் குறித்து கொர்நேலியு பேதுருவிடம் விவரிக்கையில் - "அதற்குக் கொர்நேலியு - நாலுநாளைக்கு முன்னே இந்நேரத்தில், ஒன்பதாம்மணி நேரத்தில் என் வீட்டிலே ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தேன், அப்பொழுது பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த மனுஷன் ஒருவன் எனக்கு முன்பாக நின்று - "(அப்போஸ்தலர் 10:30) ஒன்பதாம்மணி நேரம் என்பது யூதர்களின் ஜெபவேளையாக இருந்தது. (அப்போஸ்தலர் 3:1, யாத் 29:38 -42) இந்நேரத்தை ஒரு ரோம நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு கடைபிடித்து வந்தார். விசுவாசத்திற்கும், பணிவுக்கும் எப்படிப்பட்ட மாதிரியாக இவர் இருந்திருக்கவேண்டும். சர்வவல்லவருடைய கிருபைகளுக்கும், இரக்கத்திற்கும் இந்த மனுஷன் வெளியில் இருந்தாலும், அவர் சர்வவல்லவர் என்று அறிந்ததினால் அவர் தேவனிடத்தில் பக்தியுள்ளவராக இருந்தார்.

அதற்கு பின் அவர் கலங்கி பயமடைந்தார். பரிசுத்தமான காரியங்களுக்கு மனதை செலுத்தக்கூடியவர்கள் பொதுவாக பெறும் அனுபவமாகவே இருக்கிறது. (லூக்கா 1:12,29, அப் 9 :5,6) மீண்டும் இங்கு அந்த நூற்றுக்கு அதிபதியில் குணங்கள் வெளிப்படுகிறது. அவருடைய கனிவான உத்திரவாதம் - "ஆண்டவரே, என்ன என்றான்". இப்படிப்பட்ட ஒரு உத்திரவாதம் அவர் கேட்டு, கற்றுகொள்வதற்கான மனப்பூர்வமான விருப்பத்தை தெரிவிக்கிறது.

"உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது." இது வழக்கத்திற்கு மாறான ஒரு பிரகடனமாக இருக்கிறது. உன் ஜெபங்கள்.... "நினைப்பூட்டுதலாக" வந்தெட்டியது - என்பதன் முக்கியத்துவம் என்ன ? "நினைப்பூட்டுதல்" என்ற இந்த வார்த்தை வேதாகமத்தில் மற்றும் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே காணப்படுகிறது - "இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள், நான் அடக்கம்பண்ணப்படுவதற்கு எத்தனமாக, என் சரீரத்தில் தைலம் பூச முந்திக்கொண்டாள். இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்கச் சொல்லுகிறேன் என்றார்." (மாற்கு 14 :8,9) இதன்பலனாக, தேவன் அவரை கேட்டார், பாராட்டினார், மேலும் அவருடைய ஜெபங்களை நினைவில் வைத்தார் என்று முதலாவது அந்த தூதன் கொர்நேலியுவுக்கு விசேஷத்தை ஊக்கமளித்தார். இப்பொழுது, அந்த ஜெபங்களுக்கு பதிலளிக்கப்பட்டது. சர்வவல்லமையுள்ள தேவனுடைய ஞானம், வல்லமை, நீதி மற்றும் அன்பை புரிந்துகொள்வதற்கு எப்படிப்பட்ட சிறந்த பாடம் உள்ளது. யேகோவா தேவன் மனதாழ்மையுள்ள ஒரு புறஜாதியானுடைய ஜெபத்தை கேட்டார். அவனுக்கு பதிலளிக்க ஏற்றசமயம் வராமல் இருந்தாலும், புறஜாதிகளுக்கான ஏற்றகாலங்கள் வரும் வரைக்கும் அந்த ஜெபங்களை அவர் மனதில் வைத்திருந்தார். அதற்கு பின் கொர்நேலியுவுக்கு தேவன் மிகுந்த வல்லமையோடு பதிலளித்தார்.

அடுத்து, அந்த தூதன் எளிமையான சில கட்டளைகளை கொடுத்தார். அது

விசித்திரமானதாகவும் இருந்தது. யோப்பாவுக்கு ஆட்களை அனுப்பி சீமோன் பேதுருவை அழைத்துவர சொன்னார். அவருடைய முகவரியை கொடுத்து, அவரை அழைத்து வந்தால், அவர் உங்களுக்கு அனைத்தையும் கட்டளையிடுவார் என்றார். (அப் 10:32) அதற்குபின் அந்த தூதன் போய்விட்டாா. அந்த தூதன் சகல காரியங்களையும் கொர்நேலியுவுக்கு அறிவிக்காமல், அவரை விட்டு சென்ற காரணம் என்ன ?

1. கொர்நேலியுவில் விசுவாசம். நம்பிக்கை மற்றும் ஐக்கியமும் ஆண்டவராம் இயேசு மற்றும் அவருடைய சகோதரர்களின் மூலமாகவும் வரவேண்டும்.
2. கொர்நேலியுவுக்கும் அவருடைய வீட்டாருக்கும் உண்மையான மாற்றங்கள் ஏற்பட மனிதனுடைய தொடர்பு மிக அவசியம்.
3. குறித்த காலத்தில் பரலோகத்தின் திறவுகோலை பயன்படுத்தி அதன் வாசலை திறப்பதற்கு பேதுருவுக்கு வல்லமையளிக்கப்பட்டது. (மத்தேயு 16:16-19)

**அப்போஸ்தலனாகிய பேதுரு**

"மறுநாளிலே அவர்கள் பிரயாணப்பட்டு, அந்தப் பட்டணத்துக்குச் சமீபித்து வருகையில், பேதுரு ஆறாம்மணி நேரத்திலே ஜெபம்பண்ணும்படி மேல் வீட்டில் ஏறினான். அவன் மிகுந்த பசியாடைந்து சாப்பிட மனதாயிருந்தான், அதற்கு அவர்கள் ஆயத்தம்பண்ணுகையில், அவன் ஞானதிருஷ்டியடைந்து, வானம் திறந்திருக்கிறதாகவும், நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும் அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும் கண்டான்."( அப்போ 10:9 -12)

"அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம்பண்ணி முறையிடுவேன், அவர் என் சத்தத்தைக் கேட்பார்." (சங் 55:17) என்று நாம் அறிந்தது போல கொர்நேலியுவுக்கும் நடந்தது. தேவனுடைய சித்தத்தை அறிய,பேதுருவுக்கும் மற்ற சீஷர்களுக்கும் இவ்வாறாக ஜெபிப்பது வழக்கமாக இருந்தது. பேதுரு தனித்து மேல் அறைக்கு சென்று ஜெபித்தார்.

அப்பொழுது, அவருக்கு பசியுண்டானதால், தன்னை மெய்மறந்த நிலைக்கு சென்றார். இது மனநிலையை வேறெடத்திற்கு திசைதிருப்புவதாகும். அல்லது பயபக்தியுள்ள நிலையாகும். (லூக்கா 5:26, அப் 3:10) அவர் பெறபோகும் கட்டளையின் முக்கியத்துவத்தை பேதுரு உணர வேண்டும் என்ற காரணத்தினால் அப்படிப்பட்ட நிலைக்கு அவர் உள்ளாக்கப்பட்டார். அவர் மனத்தாழ்மையோடு ஜெபித்துகொண்டிருந்த நிலையில் அந்த முழு அனுபவங்களையும் பெற்றார்.

பேதுருவின் அனுபவங்களிலும், கொர்நேலியுவின் அனுபவங்களிலும் உள்ள வித்தியாசம் என்ன ? கொர்நேலியு இப்படிப்பட்ட ஒரு தரிசனத்தை முந்தி ஒருபோதும் கண்டிருக்கவாய்ப்பில்லை ஆனால் பேதுரு இதற்கு முன் அநேக தரிசனங்களை கண்டிருந்தார். ஏனெனில், இந்த அனுபவத்தை பொருத்தவரையில், பேதுரு அவைகளை தெளிவாக விவரித்து, கேட்போர் இதை இன்னும் தெளிவாக புரிந்துகொள்வார்கள். இந்த தரிசனம் தெளிவாகவே இருந்தது - வானம் திறந்திருக்கிறதாகவும், நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும் அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும் கண்டார். நிச்சயமாக, இது பேதுருவின் கற்பனைக்கு எட்டாததும், எதிர்ப்பார்க்காத ஒரு தரிசனம். மேலும், " - பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று அவனுக்கச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று -" (அப்போ 10:13) என்ற சத்தம் கேட்டது. ஒரு பரலோக குரல் பேதுருவை அழைத்து மூன்று பகுதியாக கட்டளைகளை கொடுத்தது. 1. அவர் ஜெபித்து கொண்டிருந்த மனதாழ்மையுள்ள (முழங்காலில்) நிலையிலிருந்து - "எழுந்திரு" 2. "அடித்து" - சண்டையிடக்கூடிய மற்றும் தவறற்ற கட்டளை 3. புசி, பேதுரு இந்நாள்வரைக்கும் செய்யாததும், அவருக்கு எதிரிடையான ஒரு சட்டமாகும்.

இந்த கட்டளைகளை கடைபிடிப்பதற்கு எந்தவிதமாக விளக்கங்களும் கொடுக்கப்படவில்லை. ஆகவே இவைகளை நேரடியாக பேதுரு எதிர்த்தார் - "அதற்குப் பேதுரு - அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான்." (அப்போஸ்தலர் 10 :14)பேதுரு உடனடியாக உத்தரவு செல்வதற்கும் ஒரு முழுமையான பொருள் இருந்தது. பேதுரு தன்னாலான மட்டும் தேவனுடைய புனித கற்பனைகளை கடைபிடிக்க முயற்சித்தார். ஆனால் அந்த கட்டளை மீண்டுமாக அறிவிக்கப்பட்டது - "அப்பொழுது - தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம்

அவனுக்கு உண்டாயிற்று" ( அப்போஸ்தலர் 10 :15) இப்பொழுது, அந்த கட்டளையில் அடிப்படையான காரியம் விவரிக்கப்பட்டது. இந்த கூடுதலான கட்டளை பேதுருவுக்கு சூழ்நிலையை சற்று புரியவைத்தது. இந்த நடத்த முடியாத, ஒரு மிக புதிய கருத்தா இருந்தாலும், பேதுருவால் அதை முழுமையாக புரிந்துகொள்ளமுடியவில்லை அவரை அதை விரும்பவும் இல்லை. "மூன்றாந்தரமும் அப்படியே உண்டாயிற்று. பின்பு அந்தக் கூடு திரும்ப வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது." ( அப்போ 10 :16)

இந்த கட்டளை மூன்று முறை கொடுக்கப்பட்டது. மூன்று என்ற எண் பேதுருவின் கிறிஸ்தவ வாழ்க்கையில் அநேக முக்கியமான அனுபவங்களை தந்தது.

1. இயேசுவை பின்பற்ற மூன்று பகுதிகளாக அழைக்கப்பட்டார். (யோவான் 1:40, மாற்கு 1:14 -20, லூக்கா 5 :1-11)
2. இயேசு கெத்சேமனேவின் ஜெபித்துகொண்டிருக்கையில் அவர் மூன்று முறை தூங்கிவிட்டார். (மாற்கு 14 :37 -42)
3. இயேசுவை மூன்று முறை மறுதலித்தார். (மத்தேயு 26:69 -75)
4. மந்தையை மேய்பக்கக்கூடிய பொருப்புகளை மூன்று முறை பெற்றார். ( யோவான் 21:15-17)
5. இப்பொழுது, புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கூடிய அந்த ஒரே கற்பனை மூன்று முறை கொடுக்கப்பட்டது.

பேதுரு கண்ட அந்த தரிசனத்தை அவர் புரிந்துகொள்ளாவிட்டாலும், அனைத்தும் விரைவில் தெளிவாக்கப்பட்டது. "அப்பொழுது பேதுரு, தான் கண்ட தரிசனத்தைக் குறித்துத் தனக்குள்ளே சந்தேகப்படுகையில், இதோ, கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனுஷர்கள் சீமோனுடைய வீட்டை விசாரித்துக்கொண்டு வாசற்படியிலே வந்து நின்று - பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோன் இங்கே தங்கியிருக்கிறாரா என்று கேட்டார்கள். பேதுரு அந்தத் தரிசனத்தைக் குறித்துச் சிந்தனை பண்ணிக்கொண்டிருக்கையில், ஆவியானவர் - இதோ, மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள். நீ எழுந்து, இறங்கி, ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல், அவர்களுடனேகூடப்போ, நானே அவர்களை அனுப்பினேன் என்று அவனுக்குச் சொன்னார். அப்பொழுது பேதுரு கொர்நேலியுவினால் தன்னிடத்தில் அனுப்பப்பட்ட மனுஷரிடத்திற்கு இறங்கிப்போய் - இதோ, நீங்கள் தேடுகிறவன் நான்தான், நீங்கள் வந்திருக்கிற காரியம் என்ன என்றான்." (அப்போ 10 :17-21)

பரிசுத்த ஆவியால் தெளிவான கட்டளைகள் பேதுருவுக்கு கொடுக்கப்பட்டது. - மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள், நீ எழுந்து இறங்கி, ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல், அவர்களுனேகூடப்போ" என்று அவருக்கு அறிவிக்கப்பட்டது. பேதுரு உடனடியாக சென்றார்.

இந்த இரண்டு தரிசனங்களையும் ஒப்பிட்டு பார்க்கையில், கொர்நேலியு - தேவன் விரும்பியபடி அவரைத் தொழுது கொள்ள வேண்டும என்று அதிகமாக விரும்பினார் என்று காணப்படுகிறது. ஆகவே கொர்நேலியுவுக்கு பேதுருவின் மூலம் கட்டளை கொடுக்கப்பட்டது. கொர்நேலியுவுக்கு கற்பித்தபடி அவர் செய்ததினால், அவருடைய விசுவாசம் உறுதிப்படுத்தப்பட்டது. அவர் பேதுருவுக்கு ஆள் அனுப்பி, அவர்களுடைய வருகைக்காக அவர் தன்னுடைய உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரோடும் காத்திருந்தார். (அப் 10:24-27)

மற்றொரு பக்கத்தில் மோசேவின் சட்டத்தை ஒதுக்கிவைத்துவிட்டு, சுவிசேஷத்தை புறஜாதிகளுக்கு அறிவிக்கும்படி முதல் முதலில் பேதுரு அனுப்பபட்டார். அவர் புறஜாதியாரின் வீட்டிற்குள் நுழைந்தது மட்டும் அல்ல, அவர்களுக்கு போதித்து, ஞானஸ்நானம் கொடுத்து, தன்னோடு உடன்சகோதரராக இருக்கும்படி அழைப்பை கொடுத்ததினால், அந்த தரிசனத்திற்கு பேதுருவும் கீழ்படிந்தார்.

பேதுரு மிக தைரியசாலியாக இருந்தார். தேவன் அவருடைய தைரியத்தை மூன்று முறை பலப்படுத்தினார். தேவனுடைய இரக்கங்கள் மீண்டும் மீண்டுமாக கொடுக்கப்படுவதை பற்றிய ஒரு அற்புதமான இறுதி பாடம் நமக்கு இதில் அடங்கியுள்ளது. நம்முடைய பிதா நம்மை முழுமையாக அறிந்ததினால், அவர் நம்மை பூரணப்படுத்த அநேக அனுபவங்களை அநேக முறை நமக்கு கொடுப்பார். - முதலில் நம்முடைய கவனத்தை ஈர்க்க, அடுத்து அவர் சொல்லக்கூடிய காரியங்களை புரிந்துகொள்ளவும், இறுதியாக அதை செயல்முறை படுத்தவும் தேவன் நமக்கு உதவிசெய்வார்.

நாம் பேதுருவை போலவும், கொர்நேலியுவை போலவும் - கீழ்படிதலோடும், கேட்பதற்கு தீவிரமுள்ளவர்களாகவும், புரிந்துகொண்டு, நம்மை எதிர்பார்த்து கொண்டிருக்கும் மேசியாவின் இராஜ்யத்திற்காக நம்முடைய முழு பலத்தோடு தேவனுடைய சித்தத்தை செயல்படுத்துவோம். (ரோமர் 8:22,19)



அங்கே இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று, அதென்னவெனில், மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் எழுந்துநின்று - நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக்கொண்டதாக இருந்தது. அந்தத் தரிசனத்தை அவன் கண்டபோது, அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக்கொண்டு, உடனே

# மக்கதோனியாவின் அழை

**உ**யிர்த்தெழுந்த ஆண்டவராம் இயேசுவிடமிருந்து பெற்ற ஆறு தரிசனங்களில் இந்த தரிசனம் மூன்றாவதாகும். மற்ற தரிசனங்களைபோல இதுவும் சரியான நேரத்தில் தோன்றியது. இந்த தரிசனம் - செய்யக்கூடிய வேலைகளைக் குறித்த காரியங்களையும், அதற்கு தேவையான பாதுகாப்பையும் அளித்தது. இந்த இரண்டும் பவுலுக்கு மிக அவசியமாக இருந்தது. கொரிந்தியருக்கு எழுதின முதல் நிரூபத்தில் - "எப்படியென்றால், நாங்கள் மக்கெதோனியா நாட்டிலே வந்தபோது, எங்கள் சரீரத்திற்கு இளைப்பாறுதல் ஒன்றுமில்லாமல், எப்பக்கத்திலேயும் உபத்திரவப்பட்டோம், புறம்பே போராட்டங்களும், உள்ளே பயங்களும் இருந்தன. ஆகிலும், சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்கிற தேவன் தீத்து வந்ததினாலே எங்களுக்கு ஆறுதல்செய்தார். " (11கொரி 7 :5,6) என்றெழுதினார்.

தேவனுடைய ஆறுதலின் நிமித்தம் அவருக்கு வந்த அநேக உபத்திரவங்களையும் வேதனைகளையும் உதறி தள்ளினார்.இவ்விதமாக, பவுல் சுவிசேஷத்தை மேற்கொண்டு நடத்தி செல்ல, அது மரண அபாயம் சூழ்ந்த நிலையாக இருந்தாலும் கூட, தம்முடைய மகா தைரியத்தை எண்ணை ஊற்றி தீவிரமாக்க பயன்படுத்தின உந்து சக்தியை இங்கு நாம் காண்கிறோம். தன்னுடைய மனதில் இருக்கும் இரு வேறுபட்ட கருத்துக்களையும் கூட தனக்கும், தன்னை சார்ந்தவர்களுக்கும் சாதகமான அனுபவத்தை அல்லது போதனையை பெற்றுதரும் படி தன்னுடைய நுன்னறிவின் மூலம் வழிநடத்தி செல்லும் திறமையானது அவருடைய ஊழியத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட மிக பெரிய ஆசீர்வாதமாக அமைந்தது. அது பயத்திற்கும் - தைரியத்திற்கும், உபத்திரவத்திற்கும் - ஆசீர்வாதத்திற்கும், விருத்தசேதனத்திற்கும் - விருத்தசேனமில்லாமைக்கும், விசுவாசத்திற்கும் - கிரியைகளுக்கும், நியாயப்பிரமாணத்திற்கும் - சுவிசேஷத்திற்கும், அதே சமயம் யூதர்களுக்கும் - புறஜாதிகளுக்கும் இடையே உண்டான போராட்டங்களை உள்ளடக்கியதாகும். அவருடைய வாத திறமை எதிற்க்கும் சமமாகாது. மேலும், அவருடைய விவேகமுள்ள விசுவாசத்தை வல்லமையாக பயன்படுத்தி அகரிப்ப மற்றும் பெதஸ்து இராஜாக்களிடம் தைரியமாக சாட்சிபகர்ந்தார். ஆனால், என்னநடக்கபோகிறது என்று பணிந்து வேண்டிகொள்ளும் விசுவாசம் இருந்தால் மட்டுமே விவரிக்கப்படும்.

பவுல் தன்னுடைய இரண்டாவது ஊழியப்பிரயாணத்தை, ஒரு புதிய சகோதரனாகிய சீலாவோடு அப்பொழுது துவங்கினார். மாற்குவை பற்றி பானபாவிடம் செய்த வாக்குவாதம் நினைவில் ஒட்டிகொண்டிருந்தாலும், கைகளுக்கு முன் இருக்கும் வேலைகளை பற்றிய காரியங்கள் அவருடைய சிந்தையில் முழுமையாக ஓடிக்கொண்டிருந்தது. அவர் எங்கு செல்லவேண்டும் ? அவர் செய்யும் ஊழிய பணிக்கு உதவிக்கேற்ற ஆட்களை எப்படி தேடுவது ? இவர்களுடைய வழிகளில் ஆண்டவர் கையளிக்கும் கருவிகளை எப்படி அடையாளம் கண்டுகொள்வது ?

தனக்கு சரியென்று தோன்றி இடத்திற்கு, பவுல் மிகுந்த தைரியத்தோடும், உறுதியோடும் அடியெடுத்து வைத்தார். அவர் தேவனுடைய சித்தத்தை உடனடியாக செய்யவும், அதை அவரால் இயன்றவரைக்கும் நேர்த்தியாக செய்யவும் எப்போதும் தயாராக இருந்தார். இதற்கு பின் இப்படிப்பட்ட கிரியையுள்ள விசுவாசத்தைக் குறித்து அவர் கொரிந்தியருக்கு கற்பித்தார் - "ஆகையால் அதை இப்பொழுது செய்த நிறைவேற்றுங்கள், கொடுக்கவேண்டும் என்கிற விருப்பமுண்டாயிருந்ததுபோல, உங்களுக்கு உள்ளவைகளில் எடுத்து அதை நிறைவேற்றுதலும் உண்டாவதாக. ஒருவனுக்கு மனவிருப்பமிருந்தால்,

அவனுக்கு இல்லாததின்படியல்ல, அவனுக்கு உள்ளதின்படியே அங்கிகரிக்கப்படும்." (11கொரி 8 :11,12)

பவுல்,"தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரமாக" மாறுவதற்கு இயேசு முயற்சித்தார் என்பதற்கு, மக்கோதோனியாவின் அழைப்பை, காண்பித்த தரிசனம் ஒரு ஆதாரமாக இருந்தது. ஆனால், இந்த பிரயாணம், இரண்டாவது ஊழியபிரயாணத்தின் நோக்கத்தை விட அதிகமான காரியங்கள் நிறைவேற்றப்பட்டது. மக்கோதோனியாவின் தரிசனம், அப்போஸ்தலரின் அதிகாரத்தை தொடர்ந்து குறிப்பிடப்பட்டு வந்தது, மேலும், அவர்களுடைய முக்கியமான ஊழியங்களுக்கு தேவைப்பட்ட பகுதிகள் கொடுக்கப்பட்டது - "அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே." (11கொரி 12:12)

பவுல் அதிகமாக போராடியும் தொடர்பு கொள்ளமுடியாத பகுதிகளை, இந்த மக்கோதோனியாவை பற்றிய தரிசனம் நெருங்கி வரசெய்தது. மாற்குவை கூட அழைத்து செல்ல மறுத்து, பர்னபாவை அழைத்து சென்றதினால், பவுல் ஏதேனும் தவறு செய்து விட்டாரா? பவுல் மேற்கொண்ட இரண்டாவது பயணம் அவருடைய விருப்பத்தின் படி நடந்ததா அல்லது இயேசுவின் வழிநடத்தலின் படி நடந்ததா ? சுவிசேஷம் அறிவிப்பதற்கு இது சரியான வழியாக இருந்ததா ? அவர் ஆசியாவுக்கு சென்று சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டுமா ? இந்த அறிகுறிகளை, பரிசுத்த ஆவியினிடமிருந்து வந்த தடைகள் என்று எடுத்துகொண்டாரா அல்லது தன்னுடைய சுய சிந்தையில் தோன்றியதா ? இக்கேள்விகளுக்கான அனைத்து பதில்களையும் மக்கோதோனியாவுக்கு விடுத்த அழைப்பின் தரிசனத்தில் தேவன் வெளிப்படுத்தினார். ஆனால் உண்மையில், இந்த கேள்விகள் அவருடைய தாழ்மைக்கும், அசையாத நம்பிக்கைக்கும், இனைப்புரியாத பயங்கரங்களின் எதிரே சரியான காரியங்களை உறுதியோடு செய்யக்கூடிய திட மனத்திற்கும் ஒரு தூண்டுதலாக இருந்தது.

**தரிசனம் அல்லது சொப்பனம்**

இரவில் தூங்கும் நேரத்தில் இது சம்பவித்திருக்கவேண்டும். இங்கு ஹோராமா (horama) என்ற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு இயற்கைக்கு அப்பாற்ப்பட்டதை உற்று நோக்குவது என்று பொருள்படுகிறது. அது ஒரு சொப்பனமாக இருந்தாலும், தரிசனமாகவே இருந்தது. அதை கண்டபோது பவுல் பெற்ற அனுபவங்களை விட, அதை அவர் கண்டவுடன் செய்த காரியத்தை காண்போம் - "அந்தத் தரிசனத்தை அவன் கண்டபோது, அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக்கொண்டு, உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப்போகப் பிரயத்தனம்பண்ணி.." (அப்போஸ்தலர் 16 :10)

பவுல் அந்த தரிசனத்தை கண்டவுடன் செயல்படதுவங்கினார். மேலும், அவர் லூக்காவோடு இணைந்ததற்கான ஆசீர்வாதங்களையும் பெற்றார். ஆகவே இந்த வசனத்தில் "நாம்" என்று குறிப்பிடப்படுகிறது. இந்த குழுவிற்கு மக்கோதோனியாவின் மேல் நோக்கமாயிருந்தது. மேற்குறிப்பட்ட வசனத்தில் அவர்கள் பெற்ற அனுபவத்தின் முடிவுகள் மிக தெளிவாகவே இருக்கிறது. இந்த ஒரு தரிசனம் விசேஷமாக இயேசுவின் குறிப்பிட்ட வழிடத்தல், பவுலை மீண்டும் திசைத்திருப்பி ஒரு புதிய தேசத்திற்கு கொண்டுசென்றது.

பவுல் - சிலா, லூக்கா மற்றும் நமக்கும் கற்றுகொடுக்கும் பாடமானது தாமதமின்றி நம்முடைய மனதில் பதிய வேண்டும். பிற்காலத்தில் பவுல் தன்னுடைய ஊழியத்தில் இதை மீண்டும் மீண்டுமாக வலியுறுத்தினார். (1கொரி 8 -7-13காண்க) பவுலின் மனசாட்சி, இந்த அனுபவத்தின் முக்கிய கருவாக இருந்தது. அவர் நீதியின் கோட்பாடுகளில் நின்று, பரிசுத்த ஆவி குறிப்பிடும் பாதையில் சென்றார். உடனடியான அவருடைய செயலில், தன்னுடைய மனசாட்சிக்கு ஏற்றவாறு தாமதமின்றி செயல்பட்டதை நாம் காண்கிறோம். "சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமரென்றெண்ணினபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம். "(1தெசலோசேயர் 2:4)

பவுலின் மனசாட்சியை பொறுத்தவரை மாற்குவை விட பர்னபா அதிகமாக பலனளிக்கூடியவராக தோன்றியிருக்கலாம். பவுல் ஒரு அப்போஸ்தலனாக சட்டப்பூர்வமான உரிமைகளை பெற்றிருந்தார். இந்த ஒரு முரண்பாடான யோசனை நீண்ட நாட்களுக்கு முன்பே பவுலுக்கு தோன்றியிருக்கவேண்டும். ஏனெனில், அவர்கள் இப்பொழுது புதிய அனுபவங்களோடு மக்கோதோனியாவுக்கு பிரயாணமாக சென்றுகொண்டிருந்தார்கள்.

மக்கோதோனியா அழைப்பில், பவுலின் உடனடியான செயல் பட்டதிலிருந்து மற்றொரு பாடத்தை நாம் கற்றுகொள்ளலாம் - எதற்கும் தயாரான மனநிலை. ஆகவே ஆண்டவர் அவரை எளிதில் திசைதிருப்ப முடிந்தது. தேவன் ஒரு வாசலை அடைத்தாலும், மற்றொரு வாசலை திறந்தாலும், எப்படிப்பட்ட கட்டளைகளை பெற்றாலும், அதை உடனடியாக செய்வதற்கு பவுல் தயாராக இருந்தார். இயேசு பவுலின் ஊழிய பிரயாணத்தை துவங்கியிருந்தால், அதில் செயல்படும் அனைத்து காரியங்களிலும், இயேசு அவரோடிருந்திருப்பார். இந்த ஒரு கோட்பாட்டை பேதுரு கற்று கொடுத்தார், பவுல் தன்னுடைய ஊழியம் முழுவதிலும், இதை ஒரு எடுத்துக்காட்டாக நடைமுறைபடுத்தினார் - "உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும்," (1பேதுரு 5 :2)

எந்த சூழ்நிலையிலும், மனரமியமாக இருப்பது, ஆண்டவருடைய வழிகளை முழு விருப்பத்தோடும், ஆர்வத்தோடும் பின்பற்றுவதே நாம் நம்முடைய மனதை எந்நேரமும் ஆயத்த நிலையில் கொண்டிருப்பதாகும். பவுல் எவ்வாறாக தன்னுடைய விசுவாசத்தை கிரியைகளில் வெளிப்படுத்தினார் என்பதை சற்று கவனியுங்கள். நாமும் நிச்சயமில்லாத சூழ்நிலைகளின் மத்தியில் துணிகரமாக நம்முடைய உறுதியான விசுவாசத்தை பயன்படுத்தவேண்டும்.

**ஆசியா**

இன்றைய நாட்களில் கிழக்கு சீனாவின் திசையை காட்டிலும், துர்க்கிய அன்று "ஆசியா" என்று அழைத்திருக்கவேண்டும். ஆனால் இதுபோன்று முடிவுகள் இன்றைக்கு சில குழப்பங்களை ஏற்படுத்தலாம். பிரிஜியா மற்றும் கலாத்தியா பட்டணங்களை கடந்து வந்த பவுலும், சீலாவும் துர்க்கிக்குள் சென்றார்கள். பரிசுத்த ஆவியின் வழிநடத்தலானது, அவர்கள் முந்தி சென்ற இடங்களுக்கு மீண்டும் செல்லாதபடி ஏன் தடைசெய்யவில்லை ? இவர்கள் அறைவட்ட வடிவில் பிரயாணம் செய்திருந்தார்கள். அடுத்து கிழக்கு நோக்கி அல்லது வரைபடத்திலில்லாத ஒரு எல்லைக்கு செல்வதாக இருந்தது. பரிசுத்த ஆவி அவர்களை தடைசெய்தபோது, அவர்கள் வட புறமாக பித்தானியாவை நோக்கி பயணித்தார்கள். ஆனால் பரிசுத்த ஆவி அவர்களை மேற்கு பக்கமாக போக தூண்டியது. இந்த மக்கோதோனியாவின் அழைப்பு துர்க்கியில் உள்ள வடமேற்கு கடற்பகுதியான திரோஸில், கொடுக்கப்பட்டது.

"ஆசியா" என்று எந்த பகுதி அழைக்கப்பட்டாலும், நாகரீகமுள்ள ரோம பேரரசின் பகுதிகளில் சுவிசேஷத்தை பிரசங்கிக்கவேண்டும் என்று பவுல் அறிந்திருந்தார். ஒரு முறை ரோம பேரரசுக்கு வெளியே உள்ள மற்ற தேசங்களின் பண்பாடுகளை, ஆன்மீக போதனைகளை போதிக்கும் ரோமர்களால் ஏற்றுகொள்ளமுடியவில்லை. அந்நேரத்தில் சீனா மிக வல்லமையுள்ள ஆட்களினால், நிலபண்ணை முறையில் ஆக்கிரமிக்கப்பட்டு, ஒருவருக்கொருவர் சண்டைபோட்டுகொண்டிருந்தனர். புவுலின் இரண்டாம் பிரயாணத்தின் போது, நாலாயிரம் மைல் நீளம் கொண்ட சீனாவின் சுவர் கட்டப்பட்டு 750 வருடங்கள் கடந்திருந்தது. கலவரத்திற்குரிய பாரம்பரியமாக, ஆங்காங்கே உடைந்த நிலையில் செயற்கையான அந்த சுவர் அங்கு நின்றது.

**மக்கோதோனியாவுக்கு ஏன் செல்ல வேண்டும்?**

சுவிசேஷத்தை பெற்றுகொள்ள நாகரீகமுள்ளவர்களும், அதை புரிந்துகொள்ளக்கூடிய ஆற்றலுடைய, ஆயத்தநிலையில் உள்ளவர்கள் தேவைப்பட்டார்கள். கிரேக்க -ரோம ஆட்சியின் அரசாங்கமானது எல்லா பகுதிகளுக்கும் மக்களாட்சியை அறிமுகம் செய்ததால், அறிவாற்றல் மிக்க ஒரு நாகரீகம் பெருகியது. இதன் விளைவாக சுவிசேஷம் எளிதாக பிரசங்கிக்கப்படுவதற்கு நேர்த்தியான ஒரு சூழ்நிலை நிலவியது. பரிசுத்த ஆவியின் கிரியைகளினால் அங்கங்கே புதிதாக உருவான சபைகளை சுதந்திரம் பெற்ற ரோம சாம்ராஜ்யம் கைபற்ற துவங்கியது. அதேபோல், ஒருங்கிணைந்த அமெரிக்காவிலும், மக்களாட்சி மற்றும் குடியரசின் கொள்கைகளையும், மக்களின் மனதில் ஆழமாக பதியவைத்ததினால், இந்த சுவிசேஷ யுகத்தின் ஏழாம் பகுதியில் அங்கு, சுவிசேஷம் எளிதில் வளர்ச்சியடைய ஏதுவான சூழ்நிலை அமைந்தது. பவுலின் மறைந்து நீண்ட காலத்திற்கு பின் , சுவிசேஷ யுகத்தில், சுவிசேஷமானது கீழக்கு நோக்கி பயணித்தது.

புறஜாதிகளுக்கும், இராஜாக்களுக்கும், இஸ்ரயேலின் பிள்ளைகளுக்கு இயேசுவின் நாமத்தை அறிவிப்பதே இலக்காக கொண்டிருந்த பவுல் தன்னுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு அசைவிலும், அதை படிப்படியாக நிறைவேற்றினார். (அப் 9:15) மக்கோதோனியாவுக்கு சென்று அங்கு தியத்தீரா ஊராளாகிய லீதியாளை காணவேண்டிய அவசியம் என்ன ? லீதியாளை அழைத்து, அவள் மூலமாக ஒரு சிறைச்சாலை நிர்வாகியின் வழியாக சுவிசேஷத்தை

மக்கோதோனியாவுக்கு அறிவிக்கவேண்டும் என்று தேவன் திட்டமிட்டிருந்தார். (அப் 16 : 26-34) அழைக்கப்பட்டவர்கள் தேவனிடத்திலிருந்த மிக விசேஷமாக பெற்று கொள்ளும் ஆசீர்வாதம் என்னவெனில், தேவன் அவரிடம் அனுப்பும் (சுவிசேஷத்தை அறிவிக்க) அவருடைய உத்தமமான ஊழியக்காரர்கள் தான். "சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி - உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன." (ஏசாயா 52 :7)

லீதியாளின் விசுவாசத்திற்கு மேலாக, பவுலின் ஊழியத்தில் அவள் ஒரு முக்கியமான பங்கை பெற்றிருக்கவேண்டும். பவுலுக்கு அவளிடமிருந்த நெருங்கிய தொடர்பானது, அவர் ரோம நீதிமன்றங்களுக்குள் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு சாதகமான சூழ்நிலைகளை தந்திருக்கும். அவள் இராத்தாம்பர வியாபாரியாக இருந்ததால், ரோம உயர்குடி உரிமை பெற்றிருந்தால். ஆகவே அவள் அரசாங்கத்தில் உயர்வான மதிப்பை பெற்றிருந்தாள். தூண்டிவிடப்பட்ட கலவரங்களிநிமித்தமாக, பவுல் குற்றம்சாட்டப்பட்டபோது, நிச்சயமாக அவர் நிரபராதி என்ற உண்மைகளை அவள் எடுத்துறைத்திருக்கவேண்டும்.

பவுலின் இரண்டாம் ஊழியபயணத்தின் போது நடத்தப்பட்ட அற்புதங்கள், மக்கோதோனியா அழைப்பின் தரிசனத்திற்கு வெகு தூரம் சென்றது. ஆனால், பவுல் மனம்வருந்தின துவக்ககாலங்களுக்கு பிந்நாளிலும், அவர் தொடர்ந்து பரலோக தரிசனங்களுக்கு கீழ்படிந்து வாழும் பொழுது தான் இந்த அற்புதங்களை நிகழ்த்தினார். அவருடைய சம்பாஷனைகளுக்கு பின் அவருடைய வாழ்க்கையில் வசனங்கள் நுழைந்தது. தேவனுக்காக காத்திருந்து அவருடைய சித்தத்தை முழு விருப்பத்தோடு செய்ய ஆசையாயிருந்தால், நிச்சயமாக தேவன் நம்மை வழிநடத்துவார் என்ற அவர் அறிந்துகொண்டார். சங்கீதக்காரன் எழுதியது போல - "நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன், உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்." (சங் 32:8) நாமும் அவருடைய சித்தம் செய்ய விரும்பினால், நம்மையும் அவர் நடத்துவார்.

மக்கோதோனியா அழைப்பை தவிர, தேவனுடைய சித்தத்தை அவருடைய வார்த்தைகளின் மூலமாகவும், பரிசுத்த ஆவியின் தூண்டுதலினாலும் தேவன் அவருடைய சித்தத்தை பவுலுக்கு அறிவித்தார். உயிர்த்தெழுந்த ஆண்டவரின் வல்லமையின் மேலும், பிதாவாகிய யேகோவா தேவன் மேலும், பவுல் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்.

இயேசு விசேஷித்த தனிநபர்களோடு வைத்திருந்த அற்புதமான தொடர்பு அப்போஸ்தலர்களின் மரணத்திற்கு பின் நின்றுபோனது. ஆனால் இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்க அழைக்கப்பட்டவர்களின் வாழ்க்கையின் இதற்கு சமமான வல்லமையுள்ள வழிகளும், இயற்கைக்கு அப்பாறபட்ட தூண்டுதல்களையும் காணலாம். இந்த சுவிசேஷயுகம் முழுவதிலும் அப்போஸ்தலர்கள் மற்றும் நம்முடைய சகோதரர்கள் ஒருமனப்பட்ட சாட்சியும் நிச்சயமானதாக இருக்கிறது - உலகத்தின் ஒரு புதிய பகுதிக்கு ஒரு செய்தியை தெரிவிக்க தேவனுக்கு எற்ற நேரம் வந்தால், அவர் தன்னுடைய வல்லமையினாலும், பலத்தாலும் அதை செய்து முடிப்பார்.

இந்த யுகத்தில், சீனாவிற்கு இந்த சுவிசேஷமும், இந்த அறுவடையின் செய்திக்குள் மறைந்திருக்கும் நம்பிக்கை இவ்வளவு காலதாமதமாக சென்றதின் காரணம் மற்றொரு புரியாத காரியமாக இருக்கிறது. நமக்கு இன்னும் வாய்ப்புகள் இருப்பதால், இருளுள்ள பகுதிகளில், தொடர்ந்த சுவிசேஷத்தின் செய்திகளை விசுவாசத்தோடு ஒளிவீசச்செய்யவேண்டும். ஆனால் நம்முடைய பாவங்களுக்காக நாம் மனம் வருந்தி, நீதியின் கோட்பாடுகளை கடைபிடித்து, இயேசுவின் பாதுகாப்பான வழிநடத்துதலினாலும், அவருடைய வார்த்தைகளை கடைபிடித்து, பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலினால் மட்டுமே நாம் இதில் வெற்றியடைய முடியும். சுவிசேஷத்தை அறிவித்து, சபைகளை பேணி காப்பதற்கு மட்டுமே தான் ஒரு தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரமாக இருக்கிறார் என்பதை பவுல் உணர்ந்தார். ஆண்டவரின் வழிநடத்துதலுக்கு அவர் உடனடியாக கீழ்படிந்தவராக இருந்ததினால், அவருடைய ஆழமான விசுவாசத்தின் நிமித்தமாக அவருடைய ஊழியத்திற்கு விசேஷித்த கட்டளைகள் கொடுக்கப்பட்டது.

"உங்கள் மண்வெட்டிகளைப் பட்டயங்களாகவும், உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும், பலவீனனும் தன்மைப் பலவான் என்று சொல்வானாக." - யோயேல் 3:10

**வ**டகொரியா ஏற்கனவே நிலையில்லா இருக்கும் இவ்வுலகை மே மாதம் மீண்டும் உலுக்கியது. ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சங்கத்தின் எச்சரிப்பையும் மீறி வட கொரியா இரண்டு குறுகிய ஏவுகன சோதனையையும், ஒரு அணுஆயுத வெடிகுண்டை பூமியின் அடியில் வெடிக்க செய்தும் இரண்டு சோதனைகளை மேற்கொண்டது. தென் கொரிய சட்ட ஆலோசகர்கள் தற்கொலை செய்து கொண்ட தங்கள் தலைவரை பற்றிய துக்கத்தில் தவித்து கொண்டிருக்கும் பொழுது, இவ்வித அணுஆயுத சோதனைகளை வடகொரியா மேற்கொள்ளபோகிறது என்ற விவரம் கடைசி நேரத்தில் தான் தெரியவந்தது.

தேசங்கள் கொந்தளித்தது, பிரன்ச்சு தேசம் வட கொரியாவிற்கு எதிராக புதிய தீர்மாணங்களை கொண்டு வந்தது. அமேரிக்காவும், ஜப்பானும் வடகொரியாவை எதிர்த்து உறுதியான முடிவுகளை தினித்தது. ரஷ்ய நாட்டு தலைவர்கள் வட கொரியா நடத்திய இந்த அணுஆயுத சோதனையை இரண்டாம் உலக போரின் போது அழிக்கப்பட்ட ஹிரோ ஷீமா நாகாசாக்கியின் அழிவிற்கு நிகராக ஒப்பிட்டனர்.

இந்த அணுஆயுத சேதனைகளின் தாக்கம் உலக நாடுகளின் மத்தியில் பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தி இரண்டாம் உலக போருக்கு நிகாரான ஒரு சூழ்நிலையை உருவாக்கியது. இவ்வித அணுஆயுதங்களின் பெறுக்கம் தேசங்களின் மத்தியில் ஒரு வாக்குவாதத்திற்குரிய தொடர் செய்தியாகிவிட்டது. இப்பொழுது, வட கொரியாவின் அணுஆயுத சோதனையின் விளக்கத்தின் மூலம் ஒரு புதிய அணுஆயுத அச்சறுத்தல்தோன்றி இருக்கிறது.

**அணுஆயுத சோதனைகள் மற்றும் அச்சுருத்தல்களின வரலாறு**

20 கி. டன் இடையுள்ள முதல் அணுஆயுத சோதனை அமெரிக்கர்களால் ஜூலை, 1945ல் நிறைவேற்றப்பட்டது. இது 2000 டன்களுக்கு இணையாகும். 1945ல் ஜப்பானில் போடப்பட்ட, மிக பெரிய அழிவை ஏற்படுத்திய அனுகுண்டுகளின் தாக்கத்தின் விளைவாக எதிர் கால இரானுவத்தில் அனுகுண்டுகளின் பங்களிப்பு கேள்வி குறியாக இருந்தது.

1949 ஆகஸ்டில் ரஷ்யா செமி பாலாடின்ஸ்கு (Semipalatinsk) மற்றும் காசாக்ஸ்டான் (Kazakhstan)என்ற பகுதிகளில் அனுகுண்டு சோதனைகளை நடத்திய போது மறுபடியும் அணுஆயுத போரின் அறிகுறிகள் எழும்பியது. இதை தொடர்ந்து ஐக்கிய நாடுகள் 1952லும் பிரான்சு நாடு 1960 லும், சீனா 1964லும், தொடர்ந்து அணுஆயுத சோதனைகளை மேற்கொண்டனர்.

1962ல் குயுபா நாட்டு அணுஆயுத போரின் போது அமேரிக்கா மற்றும் ரஷ்யா நாடுகள் சந்தித்த சூழ்நிலை தான் அணுஆயுத போரின் முக்கிய திருப்பு முணையாக அமைந்தது. ரஷ்யா பகுதி தூரம் தாக்கும் ஏவுகனைகளை குயுபா நாட்டில் வைத்தது. இது அமேரிக்காவிற்கு 90 மைல் தெற்கில் அமைந்துள்ள இடம். இதற்கான காரணத்தை ரஷ்யா கூறியபோது அமேரிக்கார்கள் துர்க்கியில் வைத்த ஏவுகனைகளின் ஒரு பதிலடியாக இது அமைந்தது என்று விமர்சித்தது. இச்சமயத்தில் கெனடி மற்றும் குர்ஷே ஆகிய அதிபர்கள் மத்தியில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளை இவ்வுலகம் கூர்ந்து கவனித்தது. வல்லுனர்கள் அந்த பேச்சு வார்த்தைகளின் முடிவு போரில் கொண்டுபோய் விடும் என்று அஞ்சினார். ரஷ்ய குயுபாவில் அணுஆயுதங்களை திரும்ப பெற்றுகொண்டபோது, இந்த சூழ்நிலை விலகியது. பின்னர் அமேரிக்காவும் இராகசியமாக தாம் துர்க்கியில் வைத்திருந்த தனது ஏவுகனைகளை செயல் இழக்கசெய்தது.

அடுத்த அணுஆயுத அச்சறுத்தல்1999ல் இந்தியாவின் கார்கில் போரின் போது மீண்டும் தொடர்ந்தது. பி. பி சி தொலை காட்சி பாகிஸ்தான் இந்தியாவிற்கு எதிராக அணுஆயுதங்களை பயன்படுத்தியதாக செய்தி வெளியிட்டது. மறுபடியும் இரண்டு வருடங்களுக்கு பின்பு இந்தியா பாகிஸ்தான் போர் அணுஆயுத போரின் அச்சுருத்தலை கொண்டு வந்தது. சமீபத்தில் ஈரான் நாடு ஒரு அணுஆயுதத்தை [illegible] மற்றும் ஈரானின் சன்னி பிரிவினருக்கு எதிராக உபயோகப்படுத்தப்படலாம் என்ற அச்சம் நிலவுகின்றது.

**அணுஆயுதபோர் அச்**

**பாதுகாப்பு வழிமுறைகள்**

பத்து ஆண்டுகளுக்கு மேலாக பல அரசாங்கங்கள் சர்வதேச கன்காணிப்பு அமைப்பை ஏற்படுத்தி வருகின்றனர். இதன் நோக்கம் 1999 ல் நிறுவப்பட்ட அணுஆயுத தடை ஒப்பந்தத்தை அமல்படுத்தவேண்டும் என்பதேயாகும். டனுபி நதியின் மீது நிருவப்பட்டிருக்கும் ஒரு அலுவலகத்தில் உள்ள கனிபொரிகள் இவ்வுலகில் நடைபெறும் அணுஆயுத சோதனைகளின் அடையாளங்களையும் பூமியில் அணுஆயுத சம்மந்தமாக வாக்குறுதிகளையும் கண்கானிக்கின்றது. இந்த அணுஆயுத தடுப்பு ஒப்பந்தத்தை அமேரிக்கா நிராகரித்திருந்தாலும், பின்னர் நடைபெற்ற வட கொரியா அணுஆயுத சோதனையில் விளைவாக அமேரிக்கா அதிபர் பாராக்கு ஒபாமா கூறுகையில் இவ்வுலகம் ஒன்று திரண்டு "எழுந்து நின்று" வட கொரியா தனது அணுஆயுத சோதனைகளை கைவிட வேண்டும் என்று வலியுருத்துமாறு அறிக்கை வெளியிட்டார்.

அணுஆயுத கட்டபாடின் மையத்தின் கூற்றின் படி 1945 முதல் பல நாடுகள் தோராயமாக 128000 அணுஆயுதங்களை உருவாக்கியுள்ளது என்பதை எடுத்துரைக்கிறது. இதில் பல ஆயுதங்கள் செயல் இழக்கப்பட்டாலும் அமேரிக்கா மற்றும் ரஷ்யா தன்

வசத்தில் 10,000 அணுஆயுதங்களை தேக்கி வைத்துள்ளது.

பெருமபாலான அணுஆயுத சோதனைகள் தடைசெய்யப்பட்டிருந்தாலும், இங்கிலாந்து, பிரான்ச, இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகள் அணுஆயுதங்களை பதுக்கி வைத்துள்ளது. நமது கனிப்பின் படி தென் ஆபிரிக்காவுடன் இணைந்து இஸ்ரயேல் நாடும் சில அணுஆயுதங்களை தேக்கி வைத்திருக்கலாம். ரஷ்ய நாடுடன் சேர்ந்திருந்த சில நாடுகள் தற்போது தனி நாடுகளாக உருவாகியுள்ளது. இந்நாடுகள் வசமாகவும் அணுஆயுதங்கள் இருக்கலாம். தற்போது வட கொரிய நிகழ்த்திய அணுஆயுத சோதனை வரைக்கும் இந்த உலகம் அணுஆயுதங்களை பற்றி பெரிய அளவில் அறிந்திருக்கவில்லை. ஆயினும், கோர்டன் சாங்கு என்பவர் எழுதிய நியூக்கிலியர் ஷோடௌவுன் புத்தகத்தின் எழுத்தாளர் கூறுகையில் வட கொரியா இவ்வுலகத்தை வசப்படுத்தியிருக்கிறது என்றும் இதை விட மிக பெரிய அச்சுறுத்தல்அமேரிக்காவிற்கு வேறு இல்லை என்றும் அவர் கூறினார். மேலும் அவர் கூறுகையில், ஈரானியர்கள் மற்றும் சிரியர்கள் வட கொரியா தயாரிக்கும் எந்த அணுஆயுதத்தையும் பெற்றுகொண்டு இஸ்ரயேலுக்கு எதிராக தாக்குதல்களையும் நடத்தலாம் என்று கூறியிருக்கிறார்.

ஈரானியா அதிபர் மஹமூத் அஹமாடினிஜாடு, வட கொரியா நிகழ்த்திய அணுஆயுத சோதனையின் அதே நாளில் ஈரானின் அணுஆயுத சோதனையின் "நிருத்திவைப்பு" இனிமேல் இல்லை என்று கூறினார். ஈரான் நாடு அணுஆயுதங்களை தயாரித்து கொண்டிருக்கிறது, இதை பயன்படுத்தி ஐரோப்பியா நாடுகளின் அமைப்பு மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஒரு அணுஆயுத பயமுருத்தலை கூடிய விரைவில் ஏற்படுத்தக்கூடும்.

1945ல் இரண்டாம அணுஆயுத போருக்கு பின்னர் ஹீரோ ஷீமா நாகாசாக்கி மற்றும் டோக்கியோ பகுதிகள் திரும்ப கட்டப்பட்டன. இம்மூன்று பட்டணங்களும் இன்று சிறப்பான பட்டணங்களோடு இருப்பது அல்லாமல், டோக்கியோ 28 மில்லியன் மக்கள் தொகை கொண்ட உலகில் மிக பெரிய ஜன தொகை கொண்ட பட்டணமாக விலங்குகிறது. குயுபாவின் அணுஆயுத சோனையை தொடர்ந்த அனுஆயுத போர்கள் ஏற்பட்டிருந்தால் அதன் விளை மிக கொடுமையாக இருந்திருக்கும். ரஷ்யாவின் பெறும் பகுதியும் ஐரோப்பாவின் சில பகுதிகளும் காணாமல் போயிருக்கும். இதில் அமெரிக்கா மட்டும் தப்பியிருக்கலாம்.

இந்த அணுஆயுத போர்களினால் ஏற்பட்ட அழிவுகளிலிருந்து மெதுவாக மீண்டு வரும் நிலையில் அழிவை ஏற்படுத்தும் நாடு (வட கொயா) செய்த இந்த அணுஆயுத சோதனை இந்நாகரீக உலகம் முழுவதிலும் ஒரு ஒட்டு மொத்த பயத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்தேசங்களை கட்டுபாட்டிற்குள் வைப்பது எப்படி என்பது கேள்வி குரியாகயுள்ளது. இந்நாடுகள் மற்ற நாடுகளை வெளிப்படையாக அழிக்கவேண்டும் என்று எதிர்பார்த்து கொண்டிருக்கிறது. குறிப்பாக இஸ்ரயேல் தேசம் இந்த குழப்பமான சூழ்நிலையை கையாளுவதற்கு போதுமான வழிமுறைகள் இல்லாத இத்தருணத்தில் இவ்வுலகம் ஒப்பந்தங்களின் மூலம் தீர்வு கொண்டு வரலாம் என்று நம்பாமல் கடந்த கால சரித்திரங்களை திருப்பி பார்க்கையில் ஒப்பந்தங்களெல்லாம் வீன் என்பது தெளிவுபடுத்துகின்றது. ஏனென்றால், வட கொரியாவும், ஈரானும், உலகின் மிக வலிமையான நாடுகள் என்று எண்ணப்படுவதற்கு தங்கள் அணுஆயுத யுக்திகளை நம்புகின்றனர். எனினும் வேதாகமம் இந்த பூமி அழிக்கப்படுவதில்லை என்று கூறுகிறது. வலிமையுள்ள நாடுகள் தாங்கள் நினைத்து கொண்டிருப்பதைபோல உண்மையில் வலிமையான தேசங்கள் இல்லை. "இதோ, ஜாதிகள் ஏற்றச்சாலில் தொங்கும் துளிபோலவும், தராசிலேபடியும் தூசிபோலவும் எண்ணப்படுகிறார்கள், இதோ, தீவுகளை ஒரு அணுவைப்போல் தூக்குகிறார்." (ஏசா 40 :15) மிக பெரிய நாடான எகிப்து இஸ்ரயேல் ஜனங்களை கையேகப்படுத்தி தேவனுடைய திட்டத்தை முறியடிக்க முயன்றனர். ஆனால், அதை செய்வதற்குரிய வல்லமை அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. தேவன் தம் வல்லமையை நிச்சயமாக பயன்படுத்தி ஒன்று கூட்டப்பட்டுள்ள இஸ்ரயேல் தேசத்திற்கு எதிராக எந்த தேசம் வந்தாலும் முறியடிப்பார்.

இந்த பூமியின் எதிர்கால நிலையைக் குறித்த எந்த கேள்வி குறியும் நம்மிடத்தில் இருக்கவேண்டியதில்லை -" ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது, பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது." - பிரசங்கி 1:4

**தரும்பக்கொடுத்தல் ஒரு உறுதியான வாக்குத்தத்தம்**

தேவன் தமது சாயலில் ஆதாமை பூரண மனிதனாக சிருஷ்டித்தார் என்று வேதம் சொல்லுகிறது. ஆதாம் பாவத்திற்குள் விழுந்த பின்னர். (ஆதி 1:27, ரோம 5:12, பிர 7:29) தேவனுடைய அன்பும், இரக்கமும் ஆதாமுக்கு ஈடுபலியை தந்தது. இன்னும் வெகு சமீபத்தில் உள்ள எதிர்காலத்தில் ஆதாமும், ஏவாளும் ஆதியில் பெற்றிருந்த ஆசீர்வாதத்தை இம்முழு மனுக்குலமும் சுதந்தரித்துகொள்ளும்.

இம்மனுக்குலம் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் பரிபூரண நிலையை அடையும் பொழுது, தேவனுடைய இராஜ்யத்தின் ஒரு பகுதியாய் இப்பூமியை ஆளுகை செய்கின்றவர்களாக காணப்படுவார்கள். அவர்கள் மற்றவர்களை கட்டுபடுத்த வேண்டும் என்ற தேவை இருக்காது. ஆனால் தங்கள் சிருஷ்டிகர் தங்களுக்கு அளித்த ஆசீர்வாதங்களை பகிர்ந்து களிக்கூறுவார்கள். நமது ஆண்டவர் சீஷர்களுக்கு ஜெபம் செய்ய கற்றுகொடுத்த போது -"உம்முடைய ராஜ்யம் ருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. "(மத் 6:10) என்ற கூறினார். நாமும் இந்த ஜெபத்தை ஏறெடுத்து தேவனுடைய இராஜ்யம் இவ்வுலகத்தின் தீமைகளெல்லாம் வேறறுக்கும் என்பதை உணர்ந்து முழு மனுக்குலமும் சுகம் பெற்று தேவ ஆசீர்வாதத்தை பெற்று கொள்வார்கள் என்பதை விசுவாசிப்பவர்களாக காணப்படவேண்டும்.

(ரோம 8:19, 16:20)